# விடுதலைப்புலிகள்



03 காலப் பாழில் நழுவிய...
04 சமாதானகால இழப்புக்களும்...
07 உரிமையின்பால் பொருட்டற்ற...
08 புத்தர் சிலையும்...
12 திருமலை நகரக் குடியேற்றங்கள்.



குரல்: 124 ஆனி – 2005 அன்பளிப்பு: 12/=


# வெலிகந்தவில் புலிகள் மீதான தாக்குதல் சிங்களப் படையின் துரோகச் செயல்

**இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் - இராணுவத்தினர் வீதிக்காவல் புரிய - இராணுவ வாகனங்கள் புடைசூழப் பயணித்த புலிவீரர்களின் வாகனம் மீது 'கிளைமோர்' தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடாத்தியோரை இராணுவம் கைதுசெய்யவும் இல்லை. தாக்கியோர் யாரென்றும் படையினருக்குத் தெரியவில்லையாம்!**

**ஒருவர் - இருவராக புலிகள் இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்ட நிலைமாறி ஒரே தாக்குதலில் 40 - 50 போராளிகளை கொல்லமுயலும் ஆபத்தான மனநிலைக்கு சிங்களப் படையினர் உள்ளாகியுள்ளனர்.**

பாதுகாப்பளிப்பதாக உறுதியளித்து புலிவீரர்களை அழைத்துச் சென்று வஞ்சகமாகக் கொல்ல முயல்வது போர் தர்மத்திற்கெதிரான அப்பட்டமான ஒரு துரோகச் செயலாகும். இத்தகையதொரு கேவலமான இழிசெயலைச் செய்யும் படையாகவே சிங்களப் படையினரும் - படைத் தலைமையும் உள்ளது.

கடந்த மாதம் இராணுவப் பாதுகாப்புடன் மட்டக்களப்பு செல்லவிருந்த புலிகளின் வாகனம் மீது இதே வெலிகந்தப் பகுதியில் வைத்து இராணுவத்தினரே கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கும் முன்னேற்றப்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோது அதை அறிந்த புலிகளின் புலனாய்வாளர்களது முன்னெச்சரிக்கையால் போராளிகளின் பயணம் தடுக்கப்பட்டு - அவர்கள் பாதுகாக்கப்பட்டனர்.

பின்னர் இதை கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குப் புலிகள் கொண்டுசென்றிருந்தனர். இனிமேல் நடைபெறும் அவ்விதமான தரைவழிப் பயணங்களின்போது புலிவீரர்கள் பயணம் செய்யும் வாகனத்தினுள் படையினரும் சிலர் பயணம் செய்யவேண்டும் என்று படைத்தரப்புடன் புலிகள் இணக்கம் கண்டனர். படையினரின் துரோகத்தனமான தாக்குதல்களைத் தடுக்கும் நோக்கிலேயே அவ்விதமான ஏற்பாட்டை புலிகள் அறிவுறுத்தியிருந்தனர்.

ஆனால் குறித்த இணக்கப்பாடு கண்டபின்னர் நடைபெற்ற முதலாவது பயணத்தின்போதே (26.06.2005) உடன்பட்டபடி போராளிகளது வாகனத்தில் படையினர் எவரும் பயணிக்கவில்லை. அந்த வாகனமே துரோகத் தாக்குதலுக்கு உள்ளானது.

இது படையினரின் சதி நோக்கத்தை அம்பலப்படுத்த போதுமான சான்றாக உள்ளது.

தாக்குதல் நடந்தவேளை குறித்த இடத்தில் இராணுவத்தினர் நெருக்கமான வகையில் வீதிக்காவலில் ஈடுபட்டிருந்தனர். 100 அல்லது 150 மீற்றர் இடைவெளியில் இரண்டு - இரண்டு இராணுவச் சிப்பாய்கள் வீதிக்காவல் புரிந்தனர். தாக்குதல் நடந்த இடத்திற்கு அருகில் சிறிய படைமுகாம் ஒன்றும் இருந்தது.

புலிகளின் வாகனம் மீது 'கிளைமோர்' வெடிக்கவைக்கப்பட்ட பின்னர் வீதிக்காவல் புரிந்த இராணுவத்தினரோ அல்லது பாதுகாப்பிற்காக படை வாகனத்


(02ஆம் பக்கம் பார்க்க)




ஆழிப்பேரலை சுமத்திய வடுவினை ஆற்றிடத் துடிக்கும் உலகமே
அழிவுப் போரலை தாக்கிய சுவடுகள் அழியாதிருப்பதை மறந்ததேன்


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

# உடன்பாட்டை செயற்படுத்த சர்வதேச சமூகம் முயலவேண்டும்

புலிகளின் குரல்

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னான செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு (P.TOMS) என்று பெயர் சூட்டப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டு விட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நடந்து 6 மாதங்களின் பின்பு சர்வதேசத்தின் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் சந்திரிக்கா அரசு அரைமனதுடன் உடன்பாட்டில் கைச்சாத் திட்டுள்ளது.

'சுனாமி' ஏற்படுத்திய பேரழிவைக்கண்டு - திகைத்த உலகசமூகம் பாதிக்கப்பட்ட மக்கள் புதிய வாழ்வை அமைக்க நிதி உதவிகளை வாரிவழங்கின. அந்தப் பெரும் நிதியை நேரடியாகச் சிங்கள அரசுக்கூடாகவே செலவிட வேண்டும் என்று சந்திரிக்கா அரசு சர்வதேச சமூகத்தைக் கோரியபோது புலிகள் இயக்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது - அதற்கான விளக்கங்களையும் அளித்தது.

முன்புபோல சிங்கள அரசிடம் அந்தப் பெரு நிதியை முழுமையாகக் கையளிக்காமல் புலிகளின் வேண்டுகோளின்படி வட - கிழக்கிற்கான உதவி நிதியின் பங்கை புலிகள் இயக்கத்தின் ஆளுகைக்கூடாக வழங்க சர்வதேச சமூகம் எடுத்த அரசியல் முடிவு ஈழத் தமிழர்களுக்கு பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

போர்நிறுத்த உடன்பாட்டைப்போல புலிகள் இயக்கத்தையும் சிங்கள அரசையும் சமபங்காளிகளாகப் பார்த்து உதவி நிதியைப் பகிர்வித்தளிக்க விரும்பிய உலக சமூகத்தின் முடிவை ஏற்க ஆரம்பத்தில் சிங்கள அரசு மறுத்தது. காலத்தைக் கடத்தி சர்வதேச சமூகத்தை மனமாற்றத்திற்குள்ளாக்கவும் அது முயன்றது.

ஆனால் நீதியானதும் - ஜனநாயகத் தன்மை கொண்டதுமான அந்த அரசியல் முடிவில் சர்வதேச சமூகம் உறுதியுடனேயே இருந்தது.

இந்த அரசியல் யதார்த்தத்தை ஏற்று உடன்பாட்டில் கைச்சாத்திடும்படி சிங்கள அரசுக்கு அது ஆலோசனைகள் கூறியது. நிர்ப்பந்தங்கள் கொடுத்தது. இறுதியில் சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து சந்திரிக்கா அரசு உடன்பாட்டில் கைச்சாத்திட்டும் விட்டது.

சந்திரிக்கா அரசு இந்த உடன்பாட்டில் கைச்சாத் திட்டிருந்தாலும் அதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளும் புறச்சூழல் சிங்கள தேசத்தில் இன்னும் எழவில்லை.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதால் சிங்களப் பேரினவாதிகள் கொதிப்படைந்து போயுள்ளனர். ஜே.வி.பி, ஜாதிகெல உறுமய மற்றும் பௌத்தமத உயர்பீடத் தலைவர்கள் - பிக்குகள் உடன்பாட்டிற்கு எதிராக வீதியில் இறங்கிவிட்டனர். சிங்கள நீதிமன்றுகளில் வழக்குகளும் தாக்கல் செய்துவிட்டனர்.

மதில்மேல் பூனைகளாக இதுவரை நாளும் மௌனமாக இருந்துவந்த ஐக்கிய தேசிய கட்சியும் பொதுக் கட்டமைப்பில் பிழைகள் கண்டுபிடித்து கண்டன அறிக்கையும் விடுத்துள்ளது. சிங்களப் பத்திரிகை உலகமும் இவர்கள் அனைவரினதும் இனவாதக் கருத்துக்களை ஆதரித்தும் பெரிதுபடுத்தியும் சிங்கள மக்களிடம் இன வெறி உணர்வூட்டி வருகின்றன.

சந்திரிக்காவின் கூட்டணி அரசு முறிந்து குழப்பங்கள் ஏற்பட்டு - நெருக்கடிகள் அதிகரித்து - ஆட்சி கவிழும் புறச்சூழலும் உருவாகி வருகின்றது. புதிய தேர்தல்களுக்கான அரசியற் சூழல்களும் தோன்றிவிட்டன.

மொத்தத்தில் சிங்கள அரசியல் உலகம் முழுமையாகக் குழப்பியுள்ளது. 'உறுதியான அரசு' என்ற அரசியல் அம்சம் இப்போது கொழும்பில் இல்லை. இந்தக் குழப்ப அரசியற் சூழலில் இப்போதைக்கு பெருமாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கவும் முடியாதுள்ளது.

இந்த நிலையில் கைச்சாதிடப்பட்ட கட்டமைப்பை நடைமுறைப்படுத்த சந்திரிக்கா அரசு விரும்புமா! அல்லது அதனால் இயலுமா! என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

சந்திரிக்காவின் அரசு உடன்பாட்டைச் செயற்படுத்தாது விட்டால் அர்த்தமற்ற பொறுமையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கும்படி சர்வதேச சமூகம் புலிகளின் தலைமையைக் கோரமாட்டாது என்று தமிழ்மக்கள் நம்புகின்றனர்.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் புனர்வாழ்வு - புனர்நிர்மாண வேலைகளுக்கென சிங்கள அரசுடன் உடன்பட்டு அமைக்கப்பட்ட 'சிரான்' என்ற மனிதாபிமானக் கட்டமைப்பையும் சிங்கள அரசு நடைமுறைப் படுத்தாது - சாகவிட்டது.

போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. 'சுனாமி' பேரழிவு தாக்கி ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. இந்தக் காலப்பகுதி முழுவதும் சர்வதேச சமூகத்தின் அமைதி முயற்சிக்குப் புலிகள் இயக்கம் முழு ஒத்துழைப்புகளையும் வழங்கிவருகின்றது. ஆனால் சிங்கள அரசோ சர்வதேச சமூகத்துடன் தொடர்ச்சியாக முரண்பட்டே வருகின்றது.

இந்த நிலையில் தமிழ்மக்களைப் பொறுத்த வகையில் 'பந்து' புலிகளிடமும் இல்லை, சிங்கள அரசிடமும் இல்லை. அது சர்வதேச சமூகத்தின் கைகளில்தான் உள்ளது. சிங்களத்தின் கடும் போக்கிற்கெதிராக சர்வதேச சமூகம் செயற்படவேண்டும் என்று தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

'சுனாமி' பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதால் ஐ.நா செயலர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். ஐரோப்பிய யூனியனும் வரவேற்றுள்ளது. அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் சிலவும் அதற்கு ஆதரவு வழங்கியுள்ளன.

மகிழ்ச்சி தெரிவிப்பதுடனும் - வரவேற்பதுடனும் மட்டும் நின்றுவிடாமல் உடன்பாட்டை அமுல்படுத்த சந்திரிக்கா அரசை அவை வற்புறுத்தவும் வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

அதேசமயம், சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கும் - வற்புறுத்தல்களுக்கும் செவிசாய்க்க சிங்கள அரசு தவறினால் உடன்பாட்டின் பிரகாரம் வட - கிழக்கிற்கான உதவிநிதியை விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு வழங்கி தமிழ்மக்களின் துயர்துடைக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்றும் புலிகள் இயக்கம் கோருகின்றது. ●

---

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் உடன்வந்த இராணுவத்தினரோ எந்தவிதமான பதில் தாக்குதல்களை அல்லது தேடுதல் நடாத்தும் பணிகளைச் செய்யவில்லை.

புலிகளின் பயண விபரமும் - வாகன அடையாளங்களும் ஓமந்தை இராணுவத்திற்கும் அழைத்துச் சென்ற இராணுவத்தினருக்கும் மட்டுமே தெரியும்.

இந்நிலையில் புலிவீரர்கள் பயணம் செய்துகொண்டிருந்த வாகனத்தின் மீது மட்டும் தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது. இது சிங்களப் படைகளின் துரோகத்தனமான இழிசெயலையே காட்டுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிராக ஒரு நிழல் யுத்தத்தைப் படையினர் ஆரம்பித்த நாளில் இருந்து புலிகளைச் சீண்டி சண்டைக்கிழுக்கும் போர்வெறி அரசியலையே அவர்கள் நடாத்தி வருகின்றார்கள்.

படையினரின் இத்தகைய சமாதான விரோதச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் வகையில் சிங்கள அரசும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதில்லை.

சிங்கள அரசும் - சிங்களப் படைகளும் இணைந்தே இத்தகைய சதிவேலைகளைச் செய்கின்றனர் என்று புலிகள் இயக்கம் நம்புகின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் புலிகளின் தரைவழிப் பயணம் இன்றைய நிலையில் பாதுகாப்பில்லாத ஆபத்தான விடயமாக மாறிவிட்டது.

வெலிகந்த தாக்குதல் சம்பவத்தை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கண்காணிப்புக் குழுவுக்கு புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. விசாரணையின் முடிவுகளையும் - அது தொடர்பான சிங்களப் படைத் தலைமையின் பதில் நடவடிக்கைகளையும் எதிர்பார்த்து புலிகள் இயக்கம் இரண்டு வாரகால அவகாசம் அரசுக்கு வழங்கியுள்ளது. இக்காலப் பகுதியில் அரசும் - படைத்தரப்பும் தரைவழிப் பயணம் தொடர்பான ஆக்கபூர்வமாக முடிவுகளைத் தரவேண்டும் என்று புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

சிங்கள அரசு விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காது விட்டால் போராளிகளின் பாதுகாப்பான பயணம் பற்றிப் புலிகள் இயக்கம் தனித்து முடிவெடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகும். அவ்விதமான ஒரு நிலை ஏற்பாட்டால் போர் நிறுத்த ஒப்பந்தம் சிதைந்துபோகும் அபாயம் உள்ளது என்பதையும் சிங்கள அரசு கவனத்தில் எடுக்கவேண்டும். ●



www.eelamview.com

# காலப் பாழில் நழுவிய கணங்கள்

- க.வே.பாலகுமாரன் -

**“அதிகாரத்தின் மேலான பார்வைக்குமுன் மனிதன் ஊர்ந்து செல்கின்றான்; குனிந்து கொடுக்கின்றான்; படுபாடு படுகின்றான்; பாம்பை யும் பன்றியையும்விட படு கேவலமாகின்றான்.”** என தத்துவஞானி **நீட்சே** அதிகாரம் மனிதரைப் படுத்தும் பாட்டைப் பற்றிக் கூறுகின்றார். இதுவேதான் இன்று சிங்களத்தில் நடப்பது, அதுவும் அண்மைக் கால நிகழ்ச்சிகள் ஒரு **பொதுக் கேளிக்கை அரங்க நிகழ்வாகவே** சிங்கள அரசியல் மாறிவிட்டதனைக் காட்டுகின்றது. பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் முன்னிலையிலே சிறந்த நடிகரைத் தெரிவதற்கான போட்டி நடைபெறுவதுபோன்ற தோற்றப்பாடு அங்கு நிகழ்கின்றது. எனினும் ஒமல்பே சோபிததேரர், அமிலதேரர், வீரவன்ச, சோமவன்சவை விடவும் சந்திரிகா அம்மையாரே முன்னணியிலிருப்பதான கருத்தும் நிலவுகின்றது. இது எவ்வாறிருந்தாலும் சிங்களதேச அரசியல் முன்னரைப் போல் இனியிருக்காது என்பது தெளிவாகிவிட்டது. தாமே போட்ட அவிழ்க்கமுடியாது எனக் கருதப்பட்ட புதிர்களைத் தாமே அவிழ்க்கவேண்டிய நிர்ப்பந்த நிலைக்குச் சிங்களதேசம் தள்ளப்பட்டிருப்பது ஒரு புதிய பரிமாணமே. **அதிகாரம், அறம், இவற்றிற்கான சொல்லாடல்** எல்லாம் இன்று சிங்கள அரசியலில் புதிய பொருள் கோடலை வேண்டுகின்றன.

இங்குள்ள அதிசயம் என்னவென்றால், **வரலாற்றின் கவித்துவமிக்க நியாயத்தீர்ப்பு என்னவென்றால் தந்தையரால் வீதிக்கு வரவழைக்கப்பட்ட பௌத்த பிக்குகளை மகள் மீண்டும் விகாரைக்குள் முடக்க முயலவேண்டிய நிலை தோன்றியிருப்பதுதான்.** 1956இல் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்காக பிக்குகளை தேர்தல் பரப்புரை செய்ய பண்டா EBP எனப்பட்ட (எகசத் பிக்கு பெரமுனை) ஐக்கிய பிக்குகள் முன்னணியை களனி ரஜமகாவிகாரை அதிபதி புத்தரகித்தர தேரரைக்கொண்டு கட்டுவித்தார். ஏறத்தாழ பன்னிரண்டாயிரம் பிக்குகள் அப்போதிருந்ததாகக் கருதப்பட்டது. இன்று அதே பிக்குகளின் ஐக்கிய முன்னணியே ஜாதிகெல உறுமயவாகவும் தேசிய பிக்குகள் முன்னணியாகவும் ஜே.வி.பியோடு சேர்ந்து தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியாகவும் அனுமானுக்கு வால்நீண்ட கதையாகியிருக்கின்றது. 1958 ஆம் ஆண்டு ஏப்பிரல் 9ஆம் திகதி பண்டாவின் அமைச்சரான விமலா விஜய வர்த்தனா பிக்குகளைக் கூட்டி அலரி மாளிகைக்கு முன்னால் குந்தியிருந்து பண்டா - செல்வா உடன்பாட்டினைக் கிழிக்கவைத்ததுவும், தனது வேண்டுகோள்களை பண்டா புறக்கணித்ததால் சினம் கொண்ட புத்திரகித்தர் சோமராமரைக் கொண்டு 1959 செப்ரம்பர், 25இல் பண்டாவை நேரடியாக நெற்றிப்பொட்டில் சுட்டுக் கொன்றுவித்ததுவும் இப்போது எல்லோர் மனதிலும் நிழலாடுகின்றன. இறுதியாக கண்டியிலே பேசும்போது சோமவன்ச கூறினார் **“தந்தையார் தான் இடதுசாரிக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறிச் செயற்பட்டார். இறுதியில் அவர் தனது கழுத்திற்குத் தானே சுருக்கை மாட்டினார். இப்பொழுது அம்மையாரும் அதனையே செய்கின்றார்”** கொழும்பில் சில நாட்கள் உண்ணாவிரதமிருந்தும் பயனற்ற நிலையில் சாவதற்கு முன் குண்டுக் கட்டாகத் தூக்கிச் செல்வதைத் தடுக்கமுடியாத (அல்லது தடுக்க விரும்பாத) அமில தேரரின் பிக்குகள் கீச்சிட்ட குரலில் கத்தினார்கள். **“தந்தையாரைப் பிக்கு ஒருவர் கொன்றமைக்காக எம்மைப் பழிவாங்க முயற்சிக்கின்றார் சந்திரிக்கா எனச் சந்தேகப்படுகின்றோம்”** இவை யாவற்றினையும் விட மேலான தத்துவ விளக்கமொன்றை 100 மணித்தியாலம் உண்ணா விரதமிருந்த பின் மெத்தப் படித்த கலாநிதிப் பட்டங்கள் பெற்ற ஒமல்பே சோபித தேரர் உதிர்த்தார். புத்தரின் பௌத்த தருமத்தின் தலைகீழ் விளக்கமது. அதிகாரத்திற்கும் மதத்திற்குமுள்ள இணைபிரியாத தொடர்பின் விசித்திர முரண்பாடது.



ஒமல்பே தேரரின் கருத்துக்களை பெரும் தலைப்பிட்டு தத்துவ முத்துக்கள் எனச் சிங்கள, ஆங்கில ஏடுகள் எழுதின. “மனித வாழ்வு நிரந்தரமற்றது என்று ஆசிரியரான புத்தர் அன்பை, அமைதியை மக்களுக்கு வழங்குமாறு எம்மை வேண்டினார். ஆனால் பயங்கரவாதிகளை வளர்க்குமாறு கூறவில்லை. எனவே நான் உண்ணா நோன்பிருக்கிறேன். எனது மௌனம் துப்பாக்கிக் குண்டைவிட பெரிதான ஓசை கொண்டது” இவ்வாறு தேரர் விளக்கம் நீண்டது. ஆனால் சோபிததேரர் அச்சத்திலோ(?) அல்லது மகாநாயக்கரை கொண்டுவித்து மடக்கப்பட்டதாலோ தத்துவங்களைத் தூக்கி வீசிவிட்டு மருத்துவ மனைக்குள் புகுந்துகொண்டார்.

**இப்படியொரு இக்கட்டான நிலை தனக்கு வருமெனச் சந்திரிக்கா ஒருபோதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்.** தந்தையார் விட்ட தவற்றினை நான் ஒருபோதும் விடமாட்டேன் என்கிற அவரது அடிக்கடி பேசப்படும் கூற்றே அவருக்குப் பொறியானதும் சருவதேசம் தன்பக்கம் என கதிர்காமரைக் கொண்டுவித்து கலக்கிய அரசியலின் சுருக்கு புலிகள்மேல் விழுமல் தன் கழுத்தில் வீழ்ந்ததுவும் ஜே.வி.பியின் முன் தோற்றுப்போவதை விரும்பாத மேட்டிமை அரசியல் வெளிப்பாடும், வீம்பும் அவரை பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அவரது முடிவுக்குக் காரணமென்பது தெளிவான செய்தி. ஆனால் இங்கே நாம் கிளப்புவது இதனுடைய விளைவுகள் பற்றியவை ஒன்றல்ல,



இரண்டல்ல மூன்று பாரிய விளைவுகளை அம்மையார் மட்டுமல்ல சிங்களதேசமே முகம் கொடுக்கவேண்டிய இருள் சூழ்ந்த எதிர்காலமே இன்று முன்னுள்ளது. சமுர்த்தி அமைச்சரான பவித்திராவிற்கு அண்மையில் (சண்டேலீடர் 19.06.2005) சந்திரிக்கா அம்மையார் பின்வருமாறு கூறினாராம். **“பவித்திரா இவைதான் எனது கடைசி நாட்கள் இந்த மடையர் இதனை அறியமாட்டார்கள்”** பெரும் நாடகக் கலைஞர் சேக்ஸ்பியரின் கம்ஸத் நாடகத்தில் வரும் “இருப்பதா இல்லை இறப்பதா?” என்ற நிலையில் அம்மையாரும் “நீயுமா புருட்டஸ்” என்று சீசரின் வார்த்தைகளை அம்மையாரைப் பார்த்து பேரினவாதிகளும் பேசும் நாட்களிவை. எனவே அம்மையாரின் நிலை ஒருவழிப் பாதையின் முடிவு; முன்னும் போக முடியாது பின்னும் போகமுடியாத நிலை; வரலாற்றின் மகிமை விளக்கும் நாட்களிவை.

இன்றும் நாமெழுப்பும் வினா இதுதான். அம்மையாரின் இறுதிச் சொல்லாடல் எவ்வாறிருக்கப்போகிறது? ராஜ் கௌதமன் அறம் / அதிகாரம் என்கிற நூலிலே சொல்கின்றார். “மிகுந்த எச்சரிக்கையோடு திறமையாகச் சொற்கள் ஒழுங்குபடுத்தப்படும் இடம் அரசாங்கம். இங்கே சற்றும் உணர்ச்சிக் கலப்பற்று கறாரான சம்பிரதாய பூர்வமாக சொற்கள் பரிபாலனம் செய்யப்படுகின்றன. சொற்களின் குறியீட்டுச் செயலில் சற்றும் ‘சோர்வு’ அல்லது கசிவு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளப்படுகின்றது. இராசதந்திரத்தின் பரிவர்த்தனையில் இறுக்கப்பட்டு சொற்கள் அதிகாரத்தின் சுமையால் மூச்சுமுட்டி சங்கேதத் தன்மை பெற்றுவிடுகின்றன” இவ்வாறுதான் மிகக் கவனமாக கதிர்காமரைக் கொண்டுவித்து “பயங்கரவாதம்” “அமைதிக்கான போர்” “புலிகள் வேறு, மக்கள் வேறு” என சாதாரண சொற்களுக்கு வெகுவாகக் கனமேந்திய சந்திரிக்கா அக் கனங்களை தானே இறக்கிவைத்து இயல்பான சொற்களில் உணர்ச்சிகளை பொங்கிப் பொழிய வைக்கிற நடிப்பினை நடிக்கின்றார். கண்டியில் நடைபெற்ற உதவி வழங்குவோர் மாநாட்டில் அம்மையார் வாயில் வந்ததையெல்லாம் உணர்வு பூர்வமாகப் பேசி எல்லா இராசதந்திர நியமங்களையும் மீறிய போது முதலில் வாயைப் பிளந்தார் கதிர்காமர். அவர் பின்னர் கூறினார் “இரண்டு வகையாகப் பேசலாம். ஒன்று அதிகாரிகள் வெகு கவனமாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையைப் பேசல், மற்றது வெளிப்படையான, முன்வரக்கூடிய வகையில் அழைப்பு விடுவிக்கும் வகையில் முக்கிய களங்களை அடையத்தக்க வகையில் பேசல்” ஒரு உதாரணம் **“இணைந்த கட்டமைப்பிற்கு மாற்று போர். அதுதான் ஒரே யொரு மாற்றுவழி. வெற்றிகரமான போரொன்றை நான் நடத்தவேண்டுமெனில் எனக்கு போரை வணிகமாக்காத நேர்மையுள்ள இராணுவ அதிகாரிகள் வேண்டும். ஆயுதப் பேரங்களில் பணத்தினைச் சுருட்டாத நேர்மையான அதிகாரிகள் வேண்டும். 18வயதிற்கும் 23வயதிற்கும் இடைப்பட்டோர் கட்டாய இராணுவப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். என்னுடைய பிள்ளைகளையும் நான் இணைக்கவேண்டும். இதற்கு நாம் ஆயத்தமா?”** இது அம்மையார் பிக்குகளின் முன் பேசியது. **இப்படியான தன்னிலை விளக்கங்கள் சுய வாக்குமூலங்கள், அம்பலப்படுத்தல்கள், பிரேத பரிசோதனைகள் யாவும் பெரும் புயலிற்கு முன்னான அமைதி நிலையையே குறிக்கின்றது.**



எனவே எம்மைப் பொறுத்தவரையில் அம்மையாரின் இறுதிச் சொல்லாடல் இவ்வாறுதானிருக்க முடியுமென எண்ணுகின்றோம். உண்மையான தருக்கத்தின் அடிப்படையிலான மனமாற்றம் அவரிடம் ஏற்படும் என கனவிலும் நினைக்க முடியாதுள்ளது. “1980களில் சோவியத்தில் ஆப்கான் தலையிட்டதற்கு தக்க பதிலடி கொடுப்பதற்காக பின்லேடன் வரமாக அமெரிக்காவிற்கு கிடைத்தார். அப்போதிருந்த சனாதிபதி ஜிம்மிகாட்டரின் பாதுகாப்புச் செயலர் பிராசன்ஸ்கியை “சோவியத்திற்கொரு வியட்னாம் போரை” “வழங்க” இது வாய்ப்பானது என்றார். 1982 - 1992 இடையில் சீஜஏ 3 பில்லியன் அமெரிக்க டொலர் (இரண்டாம் உலகப் போரின் பின் அமெரிக்கா ஒரு இரகசிய நடவடிக்கைக்காக அதிகம் செலவழித்த பாரிய செயற்பாடிது) தலிபான்களை உருவாக்க செலவழிக்கப்பட்டது. ஆனால் பின்னர் தலிபான்கள் கட்டுமீறி அமெரிக்காவிற்கு எதிராக மாறியபோது 1998ஆம் ஆண்டு பிராசன்ஸ்கியை நோக்கி செய்த தவற்றிற்கு வருந்தமா? எனக் கேட்டபோது “எதற்கு வருந்தம்? ஆப்கானில் சோவியத்தைச் சிக்கவைத்ததற்கா? தலிபானின்

(தொடர்ச்சி 14ம் பக்கத்தில்)

அண்மைக்கால நிகழ்ச்சிகள் ஒரு **பொதுக் கேளிக்கை அரங்க நிகழ்வாகவே** சிங்கள அரசியல் மாறிவிட்டதனைக் காட்டுகின்றது. பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் முன்னிலையிலே சிறந்த நடிகரைத் தெரிவதற்கான போட்டி நடைபெறுவதுபோன்ற தோற்றப்பாடு அங்கு நிகழ்கின்றது. எனினும் ஒமல்பே சோபிததேரர்; அமிலதேரர்; வீரவன்ச; சோமவன்சவை விடவும் சந்திரிகா அம்மையாரே முன்னணியிலிருப்பதான கருத்தும் நிலவுகின்றது.



www.eelamview.com







இந்நிலையில் இருதரப்பினதும் குற்றச்சாட்டுக்களை மனதில் கொண்டவாறு போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூன்றாந்தரப்பாக - மத்தியத்துவராக சர்வதேச சமூகம் தன்னை நேரடியாக இணைத்துக்கொண்டது.

ஆறு வேலைத் திட்டங்களில் (பாதை திறப்பு - பொருளாதாரத் தடை நீக்கம் - இராணுவ முகாம்கள் அகற்றல் - மீள் குடியேற்றம் - புனர்வாழ்வு புனர்நிர்மாணம் - அரசியற் தீர்வு தேடல்) 60 நாட்களில் செயற்படுத்துவதென்று உடன்பாட்டில் சிங்கள அரசும் ஏற்றுக்கொண்டது.

பாதை திறப்பு - பொருளாதாரத்தடை நீக்கம் என்பவற்றை சிங்கள அரசு அமுல்படுத்தியது. சில அரசியல் பொருண்மிய அனுகூலங்களை மனதிற் கொண்டவாறு சிங்கள அரசு அவற்றை அமுல்படுத்தினாலும் அதனால் தமிழ்மக்களும் நன்மை அடைந்தனர்.

ஆனால் இராணுவ முகாம்கள் அகற்றப்படல் - மீள்குடியேற்றம் என்ற விடயங்களில் சிங்கள அரசு ஒப்புக்காக இங்கொன்றும் அங்கொன்றுமாக சிலவற்றை அமுல்படுத்தியது அல்லாமல் அவற்றை முழுமையாக இன்றுவரை செயற்படுத்த

போர் ஓய்வு என்ற விடயத்திலும் சிங்கள அரசு நேர்மையுடன் நடந்துகொள்ளவில்லை. சிங்களப் படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழர் தாயகத்தில் (நிலம் + நீர்) அது ஒப்பந்த மீறல்களை அடிக்கடி செய்து வருகின்றது.

தாயகக் கடலில் தமிழ் மீனவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கிய மீன்பிடிக்கும் உரிமையைச் சிங்களக் கடற்படை அடிக்கடி மீறி அடாவடித்தனம் புரிந்துவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கும் - தமிழீழ தேசபக்தர்களுக்கும் எதிராக ஒரு நிழல் யுத்தத்தைத் தொடங்கி கோழைத்தனமான வகையில் கொலைகளைச் செய்து வருகின்றது. அந்த நிழல்யுத்த அரங்கம் இப்போது கொழும்புக்கும் விரிவாக்கப் பட்டுள்ளது. அதை வவுனியா, திருகோணமலை, மன்னாருக்கும் விஸ்தரிக்க சிங்களப் படைகள் முயற்சிக்கின்றன.

இந்த அமைதிக் காலத்தில் 25 இற்கு மேற்பட்ட போராளிகளின் சாவிற்கு சிங்கள அரசு காரணமாக இருந்துள்ளது. 200 இற்கும் மேற்பட்ட தமிழ் - முஸ்லிம் மக்களின் கொலைக்கும் அது காரணமாக இருக்கின்றது. 100இற்கும் மேற்பட்ட மக்களை துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்தியும் உள்ளது. தமிழ் ஊடகவியலாளர்களையும் - கல்விமான்களையும் கொலைசெய்து தமிழ்ப் புத்திஜீவிகளை மிரட்டி அடிபணிய வைக்கவும் முயற்சிக்கின்றது. தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் சதி எண்ணத்துடன் கொலைகளையும் - விசமப் பிரச்சாரங்களையும் சிங்களப் படையினர் கட்டவிழ்த்து வருகின்றனர்.

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒப்பந்தத்தின் பிரகாரம் அமைக்கப் பட்ட புலிகளின் அரசியல் அலுவலகங்களுக்குள் அடிக்கடி அத்துமீறிப் புகும் படையினர் அங்கே சோதனைகளை நடாத்தி புலிகளைச் சீண்டிவருகின்றனர். இரவு வேளைகளில் அந்த அலுவலகம் மீது கைக்

மொத்தத்தில் கடந்த மூன்றே காலாண்டு சமாதான காலம் தமிழ்மக்களுக்கு உருப்படியான நன்மைகளைக் கொடுக்கவில்லை. கொழும்பு அரசியலில் நாளுக்கு நாள் இனவாதம் அதிகரித்தபடி செல்கின்றது. 1983 யூலை இனப் படுகொலை போன்றதொரு பேரபாயத்தை தாம் எதிர்கொண்டபடி உள்ளோம் என்று தமிழ்மக்கள் அச்சமடைகின்றனர். இலங்கைத் தீவின் அரசியற்களம் மீண்டும் இரத்தக்களரி யுகத்திற்கு இட்டுச் செல்லப் படுகின்றது என்ற கவலை தமிழ்மக்களைப் பீடித்துள்ளது.

இந்த வகையில் போர்நிறுத்த ஒப்பந்தமும் பயனற்றுப் போய்விட்டது. பேச்சுவார்த்தைகளும் அர்த்தமற்றுப் போய் விட்டன. அமைதிவழியில் இனப் பிரச்சி

**- எல்லாளன் -**

னைக்கு அரசியல்தீர்வு என்ற கனவும் கலைந்துவிட்டது. மேற் குறித்தவாறுதான் கடந்த மூன்றுவருடகால அமைதிவழி அரசியலை மதிப்பிடமுடியும்.

எனினும் இந்தக் காலப்பகுதியில் புலிகள் இயக்கம் வெளிப்படுத்திய நெகிழ்ச்சிப் போக்குகளும் - இராஜதந்திர செயற்பாடுகளும் - அரசியல் நகர்வுகளும் சர்வதேச அரசியற்களத்தில் தமிழருக்குச் சார்பான அரசியல் நன்மைகளை உண்டு பண்ணி உள்ளன.

கடந்த மூன்றேகால ஆண்டு காலத்தைப் பொறுத்தளவில் புலிகள் இயக்கத்திற்கும் - சிங்கள அரசிற்குமிடையில் சர்வதேச களத்தில் ஒரு அரசியற்சமர் நடந்துவருகின்றது.

இத்தகையதொரு அரசியற் சமருக்கு சிங்கள அரசை இழுக்கும் மூலோபாயத் திட்டத்துடன்தான் பேச்சுவார்த்தைக்கு மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தை தலைவர் பிரபாகரன் கோரியிருந்தார்.

# சமாதானகால இழப்புக்களும்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களும் சிறிலங்கா பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்களும் 2001, மாசிமாதம் கைச்சாத்திட்டு செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தம் இலங்கைத்தீவின் இனமுரண்பாட்டு வரலாற்றில் மிகமிக முக்கியமான அரசியற் தாக்கத்தைக்கொண்டு விளங்குகின்றது.

படைபல ரீதியில் தமிழர் தரப்பு மேல்நிலையில் இருந்தபடி சிங்கள அரசுடன் செய்துகொண்ட ஒரு அரசியல் உடன்பாடாக அது அமைந்துள்ளது.

அத்துடன் மூன்றாவது நாடு ஒன்றின் மேற்பார்வையில் சர்வதேச வியாபகம் கொண்ட ஒரு ஒப்பந்தமாகவும் இது விளங்குகின்றது. இது காரணமாக தமிழ் - சிங்கள இனப்பிரச்சினையின் ஆழ - அகலங்களையும் இருதரப்பினதும் அரசியல் குணாம்சங்களையும் சர்வதேச சமூகம் நேரடியாகத் தரிசிக்க இந்த உடன்பாடு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புலிகள் இயக்கம் மீது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை சிங்கள அரசு நீண்டகாலமாக தொடுத்து வருகின்றது. "புலிகள் சமாதான விரோதிகள், போர் வெறியர்கள், பயங்கரவாதிகள்" என்று சர்வதேசத்திற்கு அது கூறிவந்தது. தான் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகளை குழப்பி தீர்வுத்திட்டங்களை நிராகரித்து புலிகள் சமாதானத்திற்கு விரோதமாகச் செயற்படுகின்றனர் என்று சிங்கள அரசு பிரச்சாரங்கள் செய்தது.

இதேசமயம் சிங்கள அரசுமீது புலிகள் இயக்கமும் ஒரு பிரதான குற்றச்சாட்டை நீண்டகாலமாகத் தொடுத்து வருகின்றது. நீதியான முறையில் தமிழினத்திற்கு ஒரு நிரந்தர அரசியற் தீர்வை வழங்க சிங்கள அரசு விரும்பவில்லை என்பதே அதுவாகும். இனப்பிரச்சினைக்கு மருந்தாக சிங்கள அரசு இராணுவத் தீர்வையே கைக்கொள்கின்றது. இதனால் ஒரு பெரும் இன அழிப்புப் போரை தமிழர்கள் மீது அது திணித்துவருகின்றது என்று புலிகள் இயக்கம் சர்வதேச சமூகத்திற்கு கூறிவருகின்றது.

வில்லை.

புனர்வாழ்வு - புனர்நிர்மாணம் என்ற ஒப்பந்த விடயங்களை சிங்கள அரசு நடைமுறைப்படுத்தவேயில்லை.

அரசியற் தீர்வுதேடல் என்ற விடயத்தில் ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இரு தரப்பினருக்குமிடையே நடந்தன. சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படாத ஒப்பந்த விதிகளை விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்று பேச்சு மேசைகளில் புலிகள் வலியுறுத்தியதன் விளைவாக வேகமான செயற்பாட்டிற்கென சில உபகுழுக்கள் நிறுவப்பட்டன. ஆயினும் சிங்கள அரசின் முயற்சியின்மையாலும் - விருப்பமின்மையாலும் அந்த உபகுழுக்கள் அனைத்தும் செயற்படாமலேயே செத்துப் போய்விட்டன.

ஆறுசுற்றுக்களாக நடந்த அரசியற் பேச்சுவார்த்தைகளும் வெறும் பிரகடனம் மற்றும் புகைப்படம் எடுப்புக்களுடனும் முடிந்து - அர்த்தமற்றுப் போய்விட்டன.

மொத்தத்தில் போர்நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் போரோய்வு என்ற இராணுவ அம்சத்தைத் தவிர எந்தவொரு அரசியல் நகர்வையும் சிங்கள அரசு உருப்படியாகச் செய்யவில்லை.

**பரஸ்பரம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பவேண்டிய இந்த போர்நிறுத்தகால அமைதி அரசியலில் புலிகள் சீண்டப்படுவதும் தமிழ்மக்கள் தொல்லைப் படுத்தப்படுவதும் – பயமுறுத்தப்படுவதும்தான் நடக்கின்றன.**

**இயல்பு வாழ்க்கை என்ற போர்நிறுத்த உடன்பாட்டின் நல்விளைவுகளை தமிழ்மக்கள் முழுமையாக அனுபவிக்கவில்லை. மக்கள் எதிர்பார்த்ததுபோல போரை நிரந்தரமாக நிறுத்தும் அளவிற்கு அரசியலும் நகரவில்லை.**

**மொத்தத்தில் கடந்த மூன்றேகாலாண்டு சமாதான காலம் தமிழ்மக்களுக்கு உருப்படியான நன்மைகளைக் கொடுக்கவில்லை. கொழும்பு அரசியலில் நாளுக்கு நாள் இனவாதம் அதிகரித்தபடி செல்கின்றது. 1983 யூலை இனப்படுகொலை போன்றதொரு பேரபாயத்தை தாம் எதிர்கொண்டபடி உள்ளோம் என்று தமிழ்மக்கள் அச்சமடைகின்றனர். இலங்கைத்தீவின் அரசியற்களம் மீண்டும் இரத்தக்களரி யுகத்திற்கு இட்டுச் செல்லப்படுகின்றது என்ற கவலை தமிழ்மக்களைப் பீடித்துள்ளது.**

குண்டுத் தாக்குதலை நடாத்தி அராயகம் புரிந்துவருகின்றனர். புலிவீரர்களின் பயணங்களைத் தடைசெய்தும் - அவர்களின் அரசியற் செயற்பாடுகளில் குறுக்கீடு செய்தும் - இடைமறித்தும் ஒப்பந்த மீறல் புரிந்துவருகின்றனர்.

போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னர் திறந்த சில போக்குவரத்துப் பாதைகளில் படையினர் பயணத்தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். சில பொருட்களை அப்பாதைகள் ஊடாக மக்கள் எடுத்துச் செல்வதைத் தடுத்து இப்போது புதிதாக பொருளாதாரத் தடைகளையும் அமுல் படுத்த படையினர் முனைகின்றனர்.

பரஸ்பரம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பவேண்டிய இந்த போர்நிறுத்தகால அமைதி அரசியலில் புலிகள் சீண்டப் படுவதும் தமிழ்மக்கள் தொல்லைப்படுத்தப் படுவதும் - பயமுறுத்தப்படுவதும்தான் நடக்கின்றன.

இயல்பு வாழ்க்கை என்ற போர் நிறுத்த உடன்பாட்டின் நல்விளைவுகளை தமிழ்மக்கள் முழுமையாக அனுபவிக்க வில்லை. மக்கள் எதிர்பார்த்ததுபோல போரை நிரந்தரமாக நிறுத்தும் அளவிற்கு அரசியலும் நகரவில்லை.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு நீதியான ஒரு அரசியல் தீர்வை சிங்கள அரசு வழங்கமாட்டாது என்ற உண்மையும்,

அமைதி முயற்சிகள் - பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றி திசைதிருப்ப அரசியல் நாடகங்களை சிங்கள அரசு நடாத்தி வருகின்றது என்ற உண்மைகளையும்,

புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதுடன் அக் குற்றச்சாட்டுக்கள் சிங்கள அரசுக்குத்தான் பொருத்தமானவை என்ற உண்மைகளையும் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டவேண்டிய ஒரு வரலாற்றுத்தேவை புலிகள் இயக்கத்திற்கு இருந்தது.

சர்வதேசத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சிங்கள அரசுடன் ஒரு அரசியல் சமரை நடாத்தி இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்ற தலைவர் பிரபாகரன் தீர்மானித்தார்.

மூன்றாந்தரப்பு மத்தியத்தும் என்று புலிகள் நிலைப்பாடெடுத்தபோது சிங்கள அரசு ஆரம்பத்தில் அதை ஏற்க முன்வரவில்லை. ஆனால் பல மாதங்களின்பின் "செப்டெம்பர் - 11" என்ற பெயரில் பிரபலமான நியூயோர்க் நகர இரட்டைக் கோபுரத்தின் மீதான வான்தாக்குதலும் அதைத் தொடர்ந்து சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக உலகநாடுகள் அணிதிரண்டதையும் கண்ட சிங்கள அரசு இந்தப் புதிய உலக சூழல் தனக்கு இலாபம் தரக்கூடியது என்று எண்ணி - புலிகளின் மூன்றாந்தரப்பு மத்தியத்துவம் என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டது. போர்நிறுத்தமும் வந்தது.

இருதரப்பினதும் ஆலோசனைகள் - அங்கீகாரங்களுடன் உடன்பாட்டு வரைபை நோர்வே அரசு தயாரித்தது. போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களை ஒரு இயல்பு வாழ்க்கைக்குள் கொண்டு செல்வதும் - பரஸ்பரம் இரு தரப்பினரிடையேயும் நல்லுறவைக் கட்டியெழுப்பி - அதன்பின் அரசியல் தீர்வுபற்றிப் பேச உகந்த சூழலை



www.eelamview.com

# புலிகளின் அரசியற் சமரும்

ஏற்படுத்தும் நோக்குடனேயே போர் நிறுத்த உடன்பாட்டு வரைபை நோர்வே அரசு தயாரித்தது.

ஆயினும் உடன்பட்டபடி வரைபை முழுமையாக நடைமுறைப் படுத்த சிங்கள அரசு மறுத்தது. ஆரம்ப கட்டத்திலேயே சிங்கள அரசு எடுத்த கடும்போக்கு நிலைப்பாடு நோர்வேக்கு ஏமாற்றத்தை அளித்தது.

எனினும் அடுத்த கட்டமான பேச்சுவார்த்தை மேசைக்கு வரும்படி நோர்வே அரசு புலிகளை அழைத்தது. புலிகளும் பேச்சுக்களில் பங்குபற்றினர். சிங்கள அரசு ஒரு அரைகுறைத் தீர்வுத் திட்டத்தை மேசையில் வைத்தது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அருகில் வரவே மறுத்த அந்தத் தீர்வுத் திட்டத்தை புலிகள் முழுமையாக நிராகரித்தனர்.

புலிகள் இயக்கம் ஒரு மாற்றுத் திட்டத்தை சமர்ப்பிக்கவேண்டும் என்று நோர்வே கோரியது. நிரந்தரத் தீர்வு பற்றி எடுத்த எடுப்பிலேயே பேச முற்பட்டால் பேச்சுவார்த்தை முறிந்துபோய் விடும் என்று விளக்கிக்கூறிய புலிகள் இயக்கம் ஒரு இடைக்கால தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்க விரும்பியது. அதுதான் நடைமுறைச் சாத்தியமானது என்று நோர்வேயும் ஆதரித்தது - சிங்கள அரசும் அதற்கு ஒப்புக்கொண்டது.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" என்ற பெயரில் ஒரு திட்ட வரைபை புலிகள் இயக்கம் வரைந்தது. சர்வதேச சட்டவல்லுனர்களின் ஆலோசனைகளைப் பெற்று புலம்பெயர்ந்து வாழும் தமிழ் அறிஞர்களின் பங்களிப்புடன் அந்த வரைபை புலிகள் வரைந்தனர். அந்த வரைபை சர்வதேச சமூகம் ஆதரித்தது - புலிகளைப் பாராட்டியது.

ஆனால், இந்த மாதிரி வரைபை சிங்கள அரசிடம் கையளித்த உடனேயே சிங்கள தேசத்தில் இனவாதப் புயல் வீசத்தொடங்கியது. இறுதியில் ஆட்சிக்கலைப்பு நடைபெறும் அளவுக்கு கொழும்பு அரசியல் குழம்பிப் போனது.

சிங்களத்து அரசியலின் நிலைப்பாடு கண்டு சர்வதேச சமூகம் அதிர்ச்சியடைந்தது. சிங்கள அரசுமீது புலிகள் சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களை சர்வதேச சமூகம் நேரடியாகவே அனுபவிக்கத் தொடங்கியது. நிலைமையை நன்குணர்ந்த சர்வதேச சமூகம் பொறுமை கடைபிடிக்கும்படி புலிகளைக் கோரியது. புலிகளும் சம்மதித்தனர்.

இதனிடையே புதிய அரசாங்கத்தை அமைக்க சிறிலங்காவில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்த நாடாளுமன்றுக்கான தேர்தலில் புலிகள் இயக்கமும் பங்குபற்ற வேண்டும் என்று சர்வதேசம் விரும்பியது.

தமிழர் மீதான ஒடுக்குமுறை - இன அழிப்பு முயற்சிகள் அனைத்தினதும் மையபீடமே சிங்கள நாடாளுமன்றுதான். எனினும் சர்வதேச அரங்கில் தமிழருக்குச் சார்பான சில அரசியல் அனுகூலங்களைப் பெறும் நோக்குடன் நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்த தலைவர் பிரபாகரன் தீர்மானித்தார். தமிழர் விடுதலைக்கான மக்கள் ஆணையை-ஜனநாயக முறைப்படி பெற்று உலக சமூகத்திற்குக் காட்ட அவர் நடவடிக்கை எடுத்தார். தமிழ்த் தேசியத்தின்பால் நின்ற தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழர் கூட்டமைப்பு என்று பெயர்சூட்டி தமிழர் தாயகப் பகுதியில் போட்டியிடவைத்தார்.

தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகள் புலிகள் இயக்கம்தான் என்பதையும், புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கு ஆணைகொடுத்தும் தமிழ்மக்கள் வாக்களித்தனர். தேர்தலில் பெரு வெற்றியும் பெற்றனர்.

புலிகள் இயக்கத்தின் விவேகமான அரசியல் நகர்வுகண்டு சர்வதேசம் மகிழ்ச்சியடைந்தது. புலிகள் மீது சிங்கள அரசு சுமத்திவந்த குற்றச்சாட்டுக்கள் சர்வதேச சமூகத்தின் முன் ஒவ்வொன்றாக வலுவிழந்து கொண்டிருந்தன.

**மூன்று வருடங்களுக்கு முன்னர் சிங்கள அரசு தொடர்பாக சர்வதேச நாடுகள் வைத்திருந்த அரசியல் மதிப்பீடுகளும் இப்போது தலைகீழாக மாறிவிட்டன. இனவாத அரசு என்றும், அமைதிவழியில் அரசியல் தீர்வுகாண முன்வரமாட்டாது என்றும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இராணுவ அணுகுமுறையையே அது பின்பற்றத் துடிக்கின்றது என்றும் சிங்கள அரசுமீது புலிகள் தெருவித்துவரும் குற்றச்சாட்டுகளுக்கு சர்வதேச சமூகம் இப்போது ஆதாரங்களையும் காணத் தொடங்கிவிட்டது.**

ஆனால், சிங்கள அரசுமீது புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் மேலும் மேலும் வலிமையடைந்தபடி சென்றன.

புலிகள் சமர்ப்பித்த இடைக்கால வரைபை வைத்துக்கொண்டு சிங்கள தேசம் நிகழ்த்திய தமிழருக்கெதிரான இனவாதக் கூச்சலை சர்வதேச சமூகம் அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தது. சிங்கள அரசியல் கட்சிகள் - பௌத்தமத பீடங்களுடன் சிங்களப் பத்திரிகை உலகமும் சேர்ந்து பகிரங்கமாகப் போட்ட இனவாதக் கூச்சலைக் கண்டு சர்வதேச இராஜதந்திரிகள் எரிச்சலடைந்தனர்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஆதரித்து நிலைப்பாடெடுத்ததற்காக சர்வதேச சமூகத்தை குறிப்பாக மேற்கு நாடுகளை சிங்களப் பத்திரிகை உலகம் திட்டித் தீர்த்தது. 'வெள்ளைப் புலிகள்' என்றும் 'கிறிஸ்தவ சார்பு ஈழம்' அமைக்க உதவுகின்றார்கள் என்றும் மேலை நாட்டினரை அவை வசைபாடின.

சிங்களத்து அரசியல் அரங்கில் தமிழருக்கு எதிரான இனவாதம் மட்டுமல்ல நிறவாதம் - மதவாதம் - வெளிநாட்டு எதிர்ப்புவாதம் என்று கேடுகெட்ட அரசியலே உள்ளது என்ற உண்மையினை சர்வதேச சமூகம் நேரடியாகக் கண்டு கோபம் கொண்டது.

இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் இப்போதுதான் முதற் தடவையாக சிங்கள அரசுமீது சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படத் தொடங்கியுள்ளது. அது அரசியல் அழுத்தம் - பொருளாதார அழுத்தம் என்று திட்டமிட்ட வகையில் நடைபெறுகின்றது.

சமாதான முயற்சிகளை மீள உயிர்ப்பிக்கும் நோக்குடன் இலங்கைத் தீவிற்கு வரும் வெளிநாட்டுத் தூதுவர்கள் - இராஜதந்திரிகள் மற்றும் உதவி வழங்கும் உலக நிறுவனங்களின் அதிகாரிகள் கொழும்புக்கும், கிளிநொச்சிக்கும் கட்டாயம் விஜயம் செய்கின்றனர்.

கிளிநொச்சியில் அவர்கள் புலிகளுடன் சுமூகமாகப் பேசி மகிழ்ச்சியுடன் விடைபெறுகின்றனர். கொழும்பிலோ முறுகலுடன்தான் சந்திப்புக்கள் நிகழ்கின்றன. சிங்கள அரச தலைவியுடன் சில நேரங்கள் சந்திப்புக்கள் நடைபெறுவதேயில்லை. சிங்களப் பத்திரிகையாளர்களுக்கும் - வெளிநாட்டு இராஜதந்திர அதிகாரிகளுக்கும் இடையே கருத்துப்போர் நடைபெறுகின்றது.

சமாதான முயற்சிகளில் சிங்கள அரசையும் புலிகள் இயக்கத்தையும் சர்வதேச சமூகம் எவ்வாறு இனங்கண்டுவிட்டது என்பதையே மேற் குறித்தவை காட்டுகின்றன.

சமாதான முயற்சியின்பால் சிங்கள அரசை இணைக்கமுடியாது. சர்வதேச சமூகம் திணறியபோதுதான் சுனாமிப் பேரழிவும் நிகழ்ந்தது. இந்த இயற்கை அழிவை வைத்துக்கொண்டு சமாதான முயற்சிக்கு புத்துயிரூட்ட சர்வதேச சமூகம் முயன்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிய சர்வதேச நாடுகள் பெருந்தொகை நிதியை இலங்கைக்கு வழங்க முன்வந்தனர். இந்தப் பெரும்நிதி பாதிக்கப்பட்ட மக்களை சரியாகச் சென்றடையவைக்க பொதுக்கட்டமைப்பு என்றதொரு ஏற்பாட்டைச் சர்வதேச சமூகம் செய்தது. ஆனால் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக் கூட சிங்கள அரசு மறுத்து வந்திருக்கின்றது.

இ.த.அ சபையைப் போன்றே பொதுக்கட்டமைப்பு யோசனை முனைப்படைந்தபோது சிங்களத்து அரசியலில் இனவாதப் புயல் வீசியது. அட்சி கவிழும் ஏது நிலைகளும் தோன்றின. பிக்குமாரின் சாகும்வரை உண்ணாவிரதங்களும் - சிங்களப் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு ஊர்வலங்களும் நடைபெறுகின்றன.











அரசியல் அதிகாரங்களுடன் சம்பந்தப்படாத ஒரு மனிதாபிமானத் தேவையை நிறைவேற்ற அமைக்கப்பட்ட ஒரு சாதாரண கட்டமைப்பையே தமிழருக்கு வழங்க விரும்பாத சிங்களத்து அரசியலைக்கண்டு சர்வதேச சமூகம் கடும் சினம் அடைந்துள்ளது. இத்தகையதொரு அரசியல் மனநிலையில் உள்ள சிங்களத் தலைவர்களை எவ்விதம் புலிகளுடன் பேசவைத்து - ஒரு அரசியல் தீர்வுத் திட்டம்வரை கொண்டுவர முடியும்! என்று சர்வதேச இராஜதந்திரிகள் கவலைகொள்ளத் தொடங்கியுள்ளனர்.

அதேசமயம், எவ்வளவு காலம்வரை புலிகள் இயக்கத்தை பேச்சுவார்த்தை மேசையில் தனியே குந்தியிருக்க வைக்கமுடியும்! என்றும் அவர்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

“சிங்கள அரசு தமிழருக்கு ஒரு போதும் நீதி வழங்காது” என்ற தலைவர் பிரபாகரனின் ஆணித்தரமான கருத்தை சர்வதேச இராஜதந்திரிகள் கருத்தில் எடுக்கத் தொடங்கிவிட்டனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கத்தை சர்வதேச சமூகம் பார்த்த அரசியல் பார்வை இப்போது தலைகீழாக மாறிவிட்டது. “பயங்கரவாதிகள்” என்றும் “போர் வெறியர்கள்” என்றும் கடும்போக்காளர்கள் என்றும் சிங்களம் செய்த பரப்புரையை நம்பியிருந்த சர்வதேச சமூகம் இப்போது உண்மைகளை காணத் தொடங்கிவிட்டது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் சிங்கள அரசு தொடர்பாக சர்வதேச நாடுகள் வைத்திருந்த அரசியல் மதிப்பீடுகளும் இப்போது தலைகீழாக மாறிவிட்டன. இனவாத அரசு என்றும், அமைதிவழியில் அரசியல் தீர்வுகாண முன்வரமாட்டாது என்றும் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இராணுவ அணுகுமுறையையே அது பின்பற்றத் துடிக்கின்றது என்றும் சிங்கள அரசுமீது புலிகள் தெருவித்துவரும் குற்றச்சாட்டுக்களுக்கு சர்வதேச சமூகம் இப்போது ஆதாரங்களையும் காணத் தொடங்கிவிட்டது.

இவ்விதம் கடந்த மூன்றேகால் ஆண்டுகாலமாக சர்வதேச களத்தில் சிங்கள அரசிற்கும் - புலிகள் இயக்கத்திற்குமிடையில் நடந்துவரும் அரசியல் சமரில் புலிகள் இயக்கம் வெற்றிகள் பெற்று வருகின்றது. சிங்கள அரசோ சர்வதேச ரீதியில் ஆதாரங்களுடன் அம்பலப்பட்டு வருகின்றது.

தமிழரின் அரசியல் விடுதலைக்கான நியாயப்பாடுகள் என்றும் இல்லாத அளவுக்கு இன்று உலகளாவிய ரீதியில் ஏற்கப்பட்டு வருகின்றன. தமிழரின் அரசியல் எதிர்காலமும் பிரகாசமடைந்து வருகின்றது. ●




www.eelamview.com

# ஆறு மாதத்தின் பின் —— யாருக்காக வந்தது பொதுக்கட்டமைப்பு

– பிரபத்திரன் –

***மிகவும்*** நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்டுவிட்டது. இது சிங்கள அரசு தமிழரின் உரிமை பற்றிய விடயத்தில் எப்படியோ ஒரு முன்னேற்றகரமான கட்டத்திற்கு வந்துவிட்டது என்றே இன்று பலரும் வாதிக்கின்றனர்.

"இனப் பிரச்சினையின் அடிப்படை குறித்து தமிழரின் மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் குறித்து உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப் படுத்துங்கள்" என்று ஆளும் கட்சியிடமும் எதிர்க் கட்சியிடமும் கடந்த மாவீரர்நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் விடுத்த கோரிக்கைக்கு இன்றுவரை ஏன் பதிலில்லை என்பதை இவர்கள் ஏன் விளங்குவதாக இல்லை.



தீர்வுபற்றிய கொள்கை நிலைப்பாட்டையே தெளிவுபடுத்த முயலாதவர்கள் அல்லது இயலாதவர்கள் சிறுபான்மை அரசாங்கமாக இருந்துகொண்டு பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுகிறார்களென்றால் அதன் அரசியல் சூக்குமம்பற்றி விளங்க வேண்டாமோ. எதிர்க்கட்சி அதை எதிர்க்கவில்லையென்றால் அதன் அதிசயத்தை புரிந்துகொள்ள வேண்டாமோ. அரசியல் யாப்புக்கு வெளியே யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டு, இலங்கையில் இரு இராணுவம் என்பதை ஏற்றுக்கொண்டு சமாதானத்தை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாகக் கூறிய பொதுஜன ஐக்கிய முன்னணியோடு கூட்டுச்சேர்ந்த ஜே.வி.பி இப்போ பொதுக்கட்டமைப்புக்காக வெளியேறுகின்றதென்றால் அதன் மர்மம்தான் என்ன?

அம்புறுஸ் பையர்ஸ் என்பவர் எழுதினார் "பொதுக் காரியங்களை சொந்த இலாபத்திற்காக நடத்துவதே அரசியல்" என்று, சிங்களத் தலைவர்களின் வாயிற் கமழும் "சமாதானம்" என்பதையும் நாம் இதனடிகொண்டு விளங்கலாம்.

இலங்கையில் சமாதானம் பற்றிப் பேசிய எந்த அரசாங்கமும், எந்தத் தலைவர்களும் இனப்பிரச்சினைக்கு இதுதான் தீர்வு என்பதை முன்னறிவித்தது கிடையாது. அறுபதுவருட இனச் சிக்கலுக்குப் பிறகும் முப்பதுவருட யுத்தத்திற்குப் பின்பும் இதுதான் தீர்வென்று திடமாக ஒன்றை முன்வைக்க முடியாமல் இருக்கிறார்கள். பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து பிரச்சினைக்கு இதுதான் தீர்வென்று தீர்வை முன்வைத்தே ரொனி பிளேயர் தேர்தலில் நின்றார். ஆட்சிக்கு வந்தார். ஆனால் இலங்கையில் அது முடியாதுள்ளது.

சமாதானம் கொண்டுவருவோம் அதற்காக திடசங்கற்பம் பூண்டுள்ளோம் என்பார்கள். சமாதானம் என்ற மொட்டைச் சொல்லுக்குள் அவர்கள் வழுக்கும் அரசியல்பண்ணத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சிங்களத்தின் மேட்டுக்குடி முதல் பட்டிதொட்டிவரை "தமிழருக்குச் சமாதானம்'' என்ற சொல்லின் பொருளை அவர்கள் விளங்க வைத்திருப்பது வேறுவிதம். சர்வதேசத்திற்கு சமாதானம் என்ற சொல்லிற்கு விளக்கம் கொடுப்பது வேறுவிதம். சமாதானம் என்ற இந்த மொட்டைச் சொல்லை இவர்கள் தத்தெடுத்துவைக்க காரணமே ஜே.ஆர் இன் ஜனாதிபதித் தேர்தல் முறைமைதான் என்பது வேறுவிடயம்.

அரசாங்கம் அடுத்து ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கவிருக்கிறது. சந்திரிக்கா தனது ஜனாதிபதி அதிகாரத்தைக் கொண்டு கலைத்த பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்குத் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி விசுக்கினார். இன்று வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிர்வழமாக அரசியல் நடந்துகொண்டிருக்கிறது. இவரை நம்பிக் கனவுகண்ட மக்கள் சுமக்கின்றார்கள் தலைகளில் முட்கிரீடம். இந்த இலட்சணத்தில் அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதே அர்த்தமற்றதாகிவிடும். (ஜனாதிபதித் தேர்தல் குறித்து தன் குடும்ப அரசியலைக் காப்பாற்ற சந்திரிக்கா மாற்று நிகழ்ச்சி நிரல்களை வைத்துள்ளார் என்பது வேறு கதை) ஆனாலும் அந்த சர்வ வல்லமை பொருந்திய அதிகாரம் ஆளுங்கட்சிக்கு அவசியமானது.



**பொதுக்கட்டமைப்பு தமிழரின் பெயரால் வந்ததேயன்றி தமிழருக்காக வந்ததல்ல. தமிழர்களுக்காக எதிர்க்கட்சியால் ஆதரிக்கப்பட்டதுமல்ல அன்றி சிங்களவர்களுக்காக ஜே.வி.பியால் எதிர்க்கப்பட்டதுமல்ல. அது அவரவர் அரசியல் தேவைகளுக்காக அரங்கேறியிருக்கிறது.**

அரசாங்கத்தைக் கொண்டு நடத்த நிதியில்லாத சூழலில் தேர்தல் வாக்குறுதிகளுக்கு எதிர்வழமாக அரசியல் நடந்துகொண்டிருக்க அடித்துப் போன சுனாமியோ பொன்முட்டைகளை இட்டுப்போயிருக்கிறது. கோடிக் கணக்கான அந்த டொலர்கள் கைக்கு வந்துவிட்டால் அதைவைத்துப் பண்ணும் அரசியலில் அரசாங்கம் துணிவுடன் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளலாம். ஆனால் உதவிவழங்கும் நாடுகள் பொதுக்கட்டமைப்பை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தின. இதற்குப் பணிந்து இந்தப் பொன்முட்டைகளை கையிலெடுப்பதால் எதிர்க்கப்போவது யார். ஐ.தே.க எதிர்க்காது என்பது தெரியும். அடுத்தது ஜே.வி.பி.

ஜே.வி.பி கூட்டணிக்குள் இருந்துகொண்டே பொ.ஐ.மு யை அரித்துக் கொண்டிருக்கும் கறையான். இதனால் கட்சி உடைந்தும் உதிர்ந்தும் விடும் ஆபத்துண்டு என்பதை ஜனாதிபதி மாளிகையில் நடந்த சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் சந்திரிக்கா தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே கட்சியைப் பாதுகாக்க ஜே.வி.பியை வெளியில் விட வேண்டியது கட்டாயமானது என்பதை குறிப்புணர்த்தி அவர் பேசியுள்ளார்.

ஜே.வி.பியை வெளியேற்றுவதனால் அவர்கள் யு.என்.பியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைப் பிடிக்க வாய்ப்பில்லை. எனவே 'கறையான்களை' வெளியே விடுவதனால் அரசாங்கத்திற்குப் பலவீனம் என்று சொல்வதற்கில்லை. பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு வரின் ஜே.வி.பி மீது அதற்கான பழியைப் போட்டுவிட முடியும். நெருக்கடிக்கு மத்தியில் சமாதானத்திற்கு நெகிழ்ந்து கொடுத்த தலைவி என்ற பெயரைப் பெற்றுக்கொள்ளவும் இது உதவும். எனவே ஜனாதிபதி கையெழுத்திட்டார்.

ஐ.தே.கவைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலை வெல்வதொன்றே குறிக்கோள். இருகட்சி ஆட்சி மரபைக் கொண்டிருந்த இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முறைமை சிறுபான்மை வாக்காளர்களில் வேட்பாளரைத் தங்கி நிற்கவைத்துவிட்டது. எனவே சிறுபான்மை இனத்தைப் பகைக்காமல் இருப்பதே ஐ.தே.கவிற்கு நலம். அதேநேரம் பெரும்பான்மையினம் தமிழருக் கெதையும் கொடுத்துவிட்டதாகத் தன்மீது சீற்றமுறவும் கூடாது. ஐ.தே.க மௌனமாகவிருந்து இதைச் சாதிக்கின்றது. எதிர்க்கட்சி பொதுக் கட்டமைப்பை எதிர்க்கவில்லை என்ற புதிர் அது ஒத்துழைப்பதாக விளங்கப்பட்டுவிடுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை பொதுக் கட்டமைப்பில் அரசாங்கம் கைச்சாத்திட்டால் வரப்போகும் நிதியில் பொதுஜன ஐக்கிய முன்னணி தன்னை வளர்த்துக்கொள்ளும். அந்த நிதியின் மூலம் தனக்குக் கிடைத்த அமைச்சுக்களுக்கூடாக ஜே.வி.பி எழுச்சிபெற அது அனுமதிக்கப்போவதில்லை. அரச ஊடகங்களில் ஜேவி.பிக்கு சிறிதொரு இடமும் அளிக்கப்போவதில்லை என்பதைக் கட்டியம் கூற ஏற்கனவே பல சம்பவங்கள் நடந்துவிட்டன.

பொதுக்கட்டமைப்பால் ஜே.வி.பிக்கு இலாபமில்லை. தவிரவும் சமாதானத்தின் வழுக்கும் அரசியலில் இரு பெரும் கட்சிகளும் ஈடுபடவேண்டியிருக்க ஜே.வி.பி தீவிர இனவாதத்திற்கு தலைமை வகிக்க முடிவதுதான் அதன் கவர்ச்சியே. கடந்த தேர்தல் மூலம் கெல உறுமய இனவாதத்தை ஒரு வக்கிர வடிவிலான கோசங்கள் மூலம் கவர முயன்றது. இது ஜே.வி.பியின் கவர்ச்சியின் எல்லையைச் சுருக்குகின்றது. பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்தாக கூட்டணியில் உள்ளிருந்தால் தீவிர இனவாதத் தலைமைக் கவர்ச்சி ஜே.வி.பியிடமிருந்து கெல உறுமயவிடம் சென்றுவிடும். அதேநேரம் அரசாங்கம் உள்வட்டத்துள் விட்டுவைக்கப் போவதுமில்லை. எனவே வெளியேறி எதிர்க்க முடிவு செய்தது. தன் கவர்ச்சியைக் காக்க வகைசெய்தது.

ஐ.தே.கவைப் பொறுத்தவரை பொதுக்கட்டமைப்பால் சிங்கள மக்கள் சீற்றமடைந்தால் அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டுவிடலாம். நடமுறைப் படுத்தாமல் தமிழ்மக்கள் சீற்றமடைந்தாலும் அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டுவிடலாம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை கட்டமைப்பால் சிங்கள மக்கள் சீற்றமடைந்தால் அதை நடைமுறைப் படுத்தாமல் விட்டு சர்வதேசத்திற்கும் தமிழருக்கும் ஜே.வி.பிமீது பழியைப் போட்டுக் காட்டிவிடலாம்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை தமிழ்மக்கள் அதன் தளமல்ல. சிங்கள மக்களை கொதிப்படைய வைத்து அரசாங்கத்தின் மீது பழியைப்போட்டு தன்னைக் கதாநாயகனாக்கிக் கொள்ளலாம். தன் கவர்ச்சியை விரித்துக் கொள்ளலாம்.

பொதுக்கட்டமைப்பு தமிழரின் பெயரால் வந்ததேயன்றி தமிழருக்காக வந்ததல்ல. தமிழர்களுக்காக எதிர்க் கட்சியால் ஆதரிக்கப்பட்டதுமல்ல அன்றி சிங்களவர்களுக்காக ஜே.வி.பியால் எதிர்க்கப்பட்டதுமல்ல. அது அவரவர் அரசியல் தேவைகளுக்காக அரங்கேறியிருக்கிறது.

வில்றோயஸ் என்பவர் குறிப்பிட்டார் "தொண்ணூறு சதவீத அரசியல் யார்மேல் பழிபோடுவது என்பதைத் தீர்மானிப்பதாகும்." ●



www.eelamview.com

# உரிமையின்பால் பொருட்டற்ற சுனாமிக் கட்டமைப்பும் இறைமை பற்றிய கூக்குரலும்

- சாரணன் -

சிங்கள அரசியல் தொடர்ந்தும் பாலர்பாடத்திலேயே நிற்கின்றது. அதன் இனவாதக் கண்ணோட்டத்தின் விளைவாய் கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாய் அது தொடர்ந்தும் பாலர்பாடத்தின் முதலாம் அத்தியாயத்தையே புரட்டிக்கொண்டிருக்கிறது. லெனின் எப்பொழுதும் இடதுசாரிச் சிறுபிள்ளைத்தனத்தை கண்டித்தார். ஜே.வி.பியிடம் இருப்பது இனவாதச் சிறுபிள்ளைத்தனமாகும். மொத்தத்தில் சிங்கள அரசியல்வாதிகளில் இடதுசாரிகளாயினும் சரி வலதுசாரிகளாயினும் சரி அவர்களிடம் இனவாதச் சிறுபிள்ளைத்தனம் உண்டு. ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் அவர்கள் இடதுசாரிச் சந்தர்ப்பவாத இனவாதச் சிறுபிள்ளைத் தனத்தைக் கொண்டவர்களாவர்.

சுனாமி நிவாரணப் பணிக்கான நிர்வாகக் கட்டமைப்பை விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து மேற்கொள்வதானது சிறிலங்காவின் “இறைமையை” தாரைவார்த்துக் கொடுக்கும் செயலாகுமென தம்மைத் “தேசபக்தர்கள்” என அழைக்கும் சிங்கள இனவாதிகள் ஓங்கிக் குரலெழுப்புகின்றனர்.

ஓர் அரசின் இறைமை என்பது முதலாவது அர்த்தத்தில் அரச இயந்திரத்தின் பிரதான கருவியாகிய இராணுவத்தில் தக்கவைக்கப்படுகின்றது. அதன்படி பார்க்கையில் 2002ஆம் ஆண்டு சிறிலங்காப் பிரதமரும் தமிழீழத் தேசியத் தலைவரும் இணைந்து கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலாவது அர்த்தத்தில் ஓர் இராணுவ ஒப்பந்தமேயாகும். ஆதலால் அவ்வொப்பந்தத்தை மேற்படி சிங்கள “தேசபக்தர்களின்” கோணத்திலிருந்து பார்த்தால் சிறிலங்கா அரசு தனது இறமையைப் பெரிதும் இழந்த ஒப்பந்தமாகும் அது. இறைமை பற்றிய மேற்படி “தேசபக்தர்களின்” விளக்கத்தை நாம் ஏற்கவில்லை. அவர்கள் இறைமை என்று கருதுவது தமிழ்பேசும் மக்கள் மீது ஆதிக்கம் புரிவதற்கும் ஒடுக்குமுறை செய்வதற்குமான அதிகாரத்தைத்தான். ஆனால் அவர்கள் கூறும் “இறைமை” பற்றிய கோட்பாட்டை நாம் இங்கு ஒரு வாதத்திற்காக எடுத்துக்கொள்வோம்.

தாக்குதல் வேண்டாம் என்று கோரும் விடுதலைப்புலிகளுடனான அந்த ஒப்பந்தத்தின் மீது கைச்சாத்திட்டவர்கள் சிறிலங்காவின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராவார். அப்படி அந்தப் பிரதமர் கையெழுத்திட்டபோது சிறிலங்காவின் நாடாளுமன்றம் அதனை எதிர்க்கவில்லை. நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி அதனைக் கிழித்தெறியவுமில்லை. கைச்சாத்திட்ட ஐ.தே. கட்சியைச் சேர்த்த பிரதமருக்குப் பதிலாக பின்பு சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் பிரதமராய் வந்தபோதிலும் அவரும் அவ்வொப்பந்தத்தை நிராகரிக்கவில்லை. ஐ.தே.கட்சியைச் சேர்ந்த பிரதமர், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதமர், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி ஆகிய மூவரின் கீழும் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறைக்குள்ளாகிவிட்டது. சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கத்தில் ஜே.வி.பி ஒரு பிரதான அணியாய் இருக்கையிலும் அந்த ஒப்பந்தம் நடைமுறையில்தான் இருந்துள்ளது. அப்படியாயின் நடைமுறையில் அவர்கள் கூறும் “இறைமைப்” பிரச்சினையை அவர்கள் தாண்டி வெகுதூரம் வந்துவிட்டார்கள். எனவே அவர்கள் சுனாமி நிவாரணப்பணி விவகாரத்தில் “இறைமை” பற்றிக் கூறுவதெல்லாம் சிறுபிள்ளைத் தனமானதும், சந்தர்ப்பவாதம் நிறைந்ததுமாகும்.



புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கையளிக்கப்படடபோது...

இது விவகாரத்தில் வரலாறு போதித்துள்ள உண்மையை மதிப்பீடு செய்தல் அவசியம். சிங்கள இனவாதிகளின் விருப்பு வெறுப்புக்களைக் கடந்து அவர்களின் கருத்துலகை உடைத்துக்கொண்டு வரலாறு நடைமுறையர்த்தத்தில் மேற்படி அரங்கினுள் நுழைந்துவிட்டது. அந்த நிலைக்கு உண்மையில் வரலாறு வந்துவிட்டதென்பது தமிழீழப் போராட்டத்தின் ஒரு வெற்றியேயாகும். இரத்தம் சிந்திய, உயிர்த்தியாகங்களைப் புரிந்த மற்றும், சொல்லொணாத் துயரங்களுக் கூடாகத்தான் இத்தகைய “இறைமை” பற்றிய நிலையைத் தமிழ்மக்கள் ஏற்படுத்தியுள்ளனர். ஆதலால் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற மேற்படி வரலாற்று அர்த்தத்திற்குக் கீழ், பின்னோக்கி தமிழ்மக்கள் செல்லமுடியாது. இந்நிலையில் வரலாறு கூறும் இறைமை பற்றிய மேற்படி பாடத்தை மீறிச் சிங்கள இனவாதிகள் எதுவும் பேச இடமில்லை.

அப்படியாயின் சிங்கள அரசியலில் இது பெரிதும் பேசப்படுவதன் அர்த்தமென்ன? ஜே.வி.பியினர் ஏன் இதனை அதிகம் முன்னிறுத்துகின்றனர்? “ஏதாவது ஒன்றைப்பற்றி அதிகம் கதைப்பவரிடம் ஏதோ பிரச்சினை இருக்கின்றது” என்று சொல்வார்கள். சமூகத்தில் மேன்மையானது, தூய்மையானது என்று காணப்படும் ஒன்றில் பிடித்துத் தொங்கிக்கொண்டு நிற்பது அச்சமூகத்தின் கவனத்தைப் பெறுவதற்கான முக்கியமான ஒரு வழியாகும். ஆதலால் “இறைமை” எனும் பதத்தில் அவர்கள் பிடித்துத் தொங்குகின்றனர். இந்தப் பதத்தைக் கருவியாக ஏந்தி அவர்கள் தமது சொந்தக் கட்சி அரசியல் நடாத்துகிறார்கள். உண்மையில் சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி அரசியல் போட்டி தமிழ் மக்களின் பெயரால் நிகழ்கின்றது. அவர்கள் தங்களது சொந்த அரசியல் பதவிப் போட்டிகளுக்கு சுனாமியால் தாக்குண்ட அப்பாவித் தமிழ் பேசும் மக்களைக் களமாக்கிக் கொண்டார்கள். இப்படி மிகவும் மனிதாபிமானம் நிறைந்ததும் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாலானதுமான இச் சுனாமி நிவாரணப் பணிகளையே அவர்களால் ஓர் இனவாதமாக்க முடிகின்றதென்றால் தமிழ்பேசும் மக்களின் உரிமை விவகாரங்களை அவர்கள் எப்படி அணுகப் போகின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

**ஓர் அரசின் இறைமை என்பது**
**முதலாவது அர்த்தத்தில் அரச இயந்திரத்தின் பிரதான கருவியாகிய இராணுவத்தில் தக்கவைக்கப்படுகின்றது. அதன்படி பார்க்கையில் 2002ஆம் ஆண்டு சிறிலங்காப் பிரதமரும் தமிழீழத் தேசியத் தலைவரும் இணைந்து கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலாவது அர்த்தத்தில் ஓர் இராணுவ ஒப்பந்தமேயாகும். ஆதலால் அவ் ஒப்பந்தத்தை மேற்படி சிங்கள ‘‘தேசபக்தர்களின்’’ கோணத்திலிருந்து பார்த்தால் சிறிலங்கா அரசு தனது இறைமையைப் பெரிதும் இழந்த ஒப்பந்தமாகும் அது. இறைமை பற்றிய மேற்படி ‘‘தேசபக்தர்களின்’’ விளக்கத்தை நாம் ஏற்கவில்லை. அவர்கள் இறைமை என்று கருதுவது தமிழ்பேசும் மக்கள் மீது ஆதிக்கம் புரிவதற்கும் ஒடுக்குமுறை செய்வதற்குமான அதிகாரத்தைத்தான்.**

தமிழ்பேசும் மக்களின் உரிமை விவகாரத்துடன் ஒப்பிடுகையில் சுனாமி நிவாரணப் பணிக்கான கட்டமைப்பு விவகாரங்கள் எதுவும் பொருட்படுத்தப்படக்கூடிய ஒரு கனமான விடயமல்ல. அந்தளவிற்கு அரசியல் அர்த்தத்தில் மிகச்சிறிய விவகாரமான ஒரு நிவாரணக் கட்டமைப்பைச் சிங்கள அரசியல் இவ்வளவிற்குப் பெரிதுபடுத்த முடிகின்றதென்றால் சிங்கள அரசுடன் தமிழ்மக்கள் தமது உரிமையைச் சமாதான வழியில் அடைய இடமில்லை என்பதே தெளிவாகின்றது. ஆதலால் சுனாமிப் பிரச்சினையைச் சிங்கள அரசியல் கட்சிகளுக்கிடையிலான பிரச்சினையின் வெளிப்பாடாகவே நாம் புரிந்துகொள்ள முடிகின்றது. இந்த வகையில் சிங்களக்கட்சி அரசியலானது எத்தகைய பிரச்சினையையும் இனவாதமாக்கி, தம்மத்தியிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுதேடும் களமாகத் தமிழ்பேசும் மக்களை ஆக்கி அதில் தமது நலன்களை ஈட்ட முனைகின்றது. அவர்களின் கையில் மிகவும் பாடமாகிப் போய்விட்ட அகரவரிசை அரசியலாக இனவாதமுள்ளது.

மேற்படி விடயம்தான் அடிப்படையானதென்பதுடன் இதனை ஜே.வி.பியினர் எதிர்ப்பதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அது ஓர் உளவியல் காரணியாகும். அவர்கள் தம்மிடமுள்ள உளவியல் சார்ந்த மனச்சிக்கலுக்குத் தமிழ்மக்களைப் பலியிட விரும்புகிறார்கள். அதாவது நவீன இலங்கையின் வரலாற்றில் அரசைக் கைப்பற்றுவதற்கான ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முதலில் தொடங்கியவர்கள். அவ்வாறு அவர்கள் முயன்ற முதலாவது ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் 1971ஆம் ஆண்டு படுதோல்வியைத் தழுவிக்கொண்டனர். பின்னர் மீண்டும் இரண்டாம் தடவையாக 1987 - 1989 காலப்பகுதியில் மேற்கொண்ட ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியும் வேரோடு நசிக்கப்பட்டுவிட்டது. அப்படி இருக்கையில் விடுதலைப்புலிகள் இலங்கை இராணுவத்தை மட்டுமன்றி இந்திய மற்றும் வெளிநாட்டு இராணுவ பலங்களையும் எதிர்த்து முன்னேறி வருகின்றமை ஜே.வி.பியினரின் மனதில் கையாலாகாத்தனத்தின் விளைவாக எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. ஜே.வி.பியினரிடமுள்ள இத்தகைய மனச்சிக்கல் பற்றிய கருத்தை என்னிடம் கூறியவர் ஒரு சிங்களப் புத்திஜீவியாவார். அதுவும் ஜே.வி.பி கிளர்ச்சியில் பங்கெடுத்துச் சிறைசென்றிருந்த ஒருவராவார். கருவிலேயே சிதைந்து போன ஜே.வி.பியின் ஆயுதப் போராட்டம் ஒருபுறமும் உள்ளூர் ஆயுதங்களுடன் தொடங்கி தரைப்படை, கடற்படை, விமானப்படை, புலனாய்வுப்படையென பெரும் படைக்கட்டமைப்புக்களுடன் வளர்ந்து, தங்களுக்கெனக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வைத்துக்கொண்டு அரசுடன் சமதையாக ஒப்பந்தம் செய்யும் நிலைக்கு புலிகள் வளர்ந்திருப்பதை ஜே.வி.பியினரால் பொறுக்க முடியவில்லை. இங்கு கவனிக்கவேண்டிய விடயம் என்னவெனில் பொறாமையும், இயலாமையும், மனச்சிக்கலும் இனவாதமாக வடிவம் பெறுகின்றது என்பதுதான். இந்தவகையில் சிங்கள அரசியற் சக்திகளின் பக்கத்தில் எழும் எந்தொரு தனிப்பட்ட, கட்சி சார்ந்த, உளவியல் சார்ந்த, பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளும் இனவாதமாய் உருத்திரள முடிகின்றது.

இத்தகைய அரசியல் பண்பைக்கொண்ட சிங்கள அரசியலிலிருந்து தமிழ்மக்கள் தமது விட்டுக்கொடுக்க முடியாத உரிமையைச் சமாதான வழிகளில் அடைய வாய்ப்பிருக்கப் போவதில்லை. சுனாமிப் பணிக்கான கட்டமைப்பை நிறைவேற்றுவதென்பது மிக அற்பமானதும் நிவாரணத்திற்கான ஒரு திட்ட நிறைவேற்று ஏற்பாடே தவிர வேறில்லை. இப்படிப்பட்ட ஒரு சிறிய விடயமே மிகவும் நெருக்கடி நிறைந்த பூதாகரமான ஒரு பாதைக் கூடாகத்தான் வருகின்றதென்றால் உரிமை விவகாரத்தில் தமிழர் இலவு காத்த கிளியாய் இருந்திட முடியாது.

சுனாமிக் கட்டமைப்பானது “பிரதேச சபைகளுக்கு இருக்கும் அதிகாரத்தைக்கூடக் கொண்டிருக்கவில்லை” என கண்டி மக்களுடனான தனது தொலைக்காட்சி உரையில் ஜனாதிபதி கூறியுள்ளார். உண்மை இப்படியிருக்க இக்கட்டமைப்பை ஒரு பெரும் சாதனையாகச் சித்தரித்துக் காட்டும் துயரம் சிங்கள அரசியலில் அரங்கேறுகின்றது. எமது பிரச்சினையின் பாரதூரமான அளவையும் இலகுவில் கடந்திடமுடியாத தடைகளையும் கோடிகாட்டும் ஒரு விடயமாகவே இச்சிறு சுனாமிக் கட்டமைப்பு காட்சியளிக்கின்றது. •

***"எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்யமுடியாது."***

***- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -***

# புத்தர் சிலையும் தமிழீழ மண்பறிப்பும்

சிறிலங்கா அரசியல் சாசனம் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குகிறது. 1978ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இன்றைய அரசியல் சாசனத்தின் சரத்து 9 புத்தமதத்தை ஆதிக்க நிலையில் வைத்துள்ளது. பிற மதங்களுக்கு யாதொரு உரிமையும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக "ஒற்றை மதச் சார்புள்ள நாடு" என்று சிறிலங்கா வகைப்படுத்தப்படுகிறது. அதே சாசனத்தின் 10, 14(I)(e) சரத்துக்களுக்கு அமைவாகப் புத்த மதத்தின் முதன்மையைப் பேணும் பொறுப்பை அரசுமீது சரத்து 9 சுமத்துகிறது. சரத்து 10 கூறுவது யாதெனில் "ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கருத்துச் சுதந்திரம், மனச்சாட்சி மற்றும் மதச் சுதந்திரம் இருப்பதாகவும் தான் விரும்பிய மதத்தைக் கடைப்பிடிப்பதற்கும் தனது மத நம்பிக்கைக்கு அமைவாக தெரிவுசெய்வதற்கும் உரித்து உண்டு" சரத்து 14(I)(e) தனியாகவோ பிறருடன் ஒன்றிணைந்தோ, பகிரங்கமாகவோ அல்லது பிரத்தியேகமாகவோ மத அனுஷ்டானங்களைச் செய்வதற்கும் மதபோதனை செய்வதற்குமான உரித்துக்களை வழங்குகின்றது. பெயரளவில் 10, 14(I)(e) என்பன சரத்து 9 மீது கட்டுப்பாட்டை செலுத்துவது போன்ற தோற்றப்பாடு இருப்பினும் நடைமுறை வித்தியாசமாகி இருக்கிறது. சிறிலங்காவின் தேசிய மதம் புத்தமதம் என்பது எதுவிதத்திலும் மறுக்க முடியாத உண்மை.

அண்மைக் காலத்தில் சிறிலங்கா அதியுயர் நீதிமன்றம் வழங்கிய இரு முக்கிய தீர்ப்புக்கள் "புத்த சாசனத்தின் மேலாதிக்கத்தையும் அதைப் பாதுகாக்கவேண்டிய அரசின் பொறுப்பையும்" வலியுறுத்துவதோடு பிற மதத்தினரின் குறிப்பாக கிறிஸ்தவ மதத்தினரின் "மதப் பிரசாரம்" செய்யும் உரித்தையும் மறுக்கின்றன. மேற்கூறிய சரத்துக்கள் 10, 14(I)(e) ஆகியவற்றில் பிரசாரம் செய்யும் உரித்து (PROPAGATE) வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிரசாரம் செய்து மதமாற்றம் செய்யும் உரித்து கிறிஸ்தவ மதத்துடன் ஒன்றிணைந்ததாகவும் அதை மறுப்பது ஒரு பாரிய உரிமை மறுப்பு என்றும் வாதிடப்படுகிறது. சிறிலங்கா அதியுயர் நீதிமன்றத்தின் நிலைப்பாடு என்னவென்றால் சரத்து 9 வழங்கும் உரித்திற்கு அமைவாக புத்தசாசனத்தைப் பாதுகாத்து ஆதரிப்பதோடு அரசு பிற மதங்களின் விரிவைத் தடுக்கும் விதத்தில் செயற்படவேண்டும் என்பதாகும். சிறுபான்மை இன, மத, மொழியினரின் உச்ச உரிமைப் பாதுகாவலனாக இந்தியாவின் உச்ச நீதிமன்றம் செயற்படும் இவ்வேளையில் சிறிலங்கா அதியுயர் நீதிமன்றம் பெரும்பான்மையினரின் உரித்தைப் பாதுகாப்பதில் தீவிரமாகச் செயற்படுகின்றது. 1978ஆம் ஆண்டுச் சாதனத்தின் மிகவும் பிற்போக்கான சரத்துக்களில் சரத்து 9 முதலிடம் வகிக்கிறது.

மேற்கூறிய சரத்து 9 வெளிப்படுத்தும் பௌத்த அடிப்படைவாதச் சிந்தனை மகாவம்ச காலத்தில் இருந்து தொடரும் நச்சுக் கருத்தாகும். சிங்கள - பௌத்தம் என்று வழங்கும் மதத் தீவிரவாதம் இத்தீவில் தோன்றுவதற்கும் இது காரணமாக அமைகிறது. இனப்பிரச்சினை பூதாகர வளர்ச்சி காண்பதற்கும் தீர்க்கப்பட முடியாத தூரம் அது சென்றுவிட்டதற்கும் புத்த துறவிகள் எல்லாவகைச் சமாதான முன்னெடுப்புக்களுக்கும் காட்டும் கடும் எதிர்ப்பு இந்நாட்டின் துன்ப நிகழ்ச்சியாகப் பார்க்கப்படுகின்றது. சுதந்திரத்திற்குப் பின்பு தோன்றிய வன்முறைகள் 1956இல் நிறைவேறிய தனிச் சிங்களச் சட்டத்துடன் ஆரம்பிக்கின்றன. தமிழுக்கு உரிய இடம் கொடுக்கும் நோக்கில் செய்யப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் புத்த பிக்குகளின் நேரடித் தலையீட்டினால் கைவிடப்பட்டது. இந்த ஒப்பந்தம் இவ்வாறு ஒருதலைப் பட்சமாக பிரதமர் பண்டாரநாயக்காவால் கிழிக்கப்படாதிருந்தால் இன்றும் நாடு இரண்டுபடவேண்டிய அவசியம் இல்லையென்று பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். தனிச் சிங்களச் சட்டமும் தமிழர்களுடன் செய்யப்படாதிருக்கும் அதிகாரப் பகிர்வும் நாட்டின் சீரழிவுக்குக் காரணமாக இருப்பதற்கு புத்த பிக்குகளே மூல காரணமாவர்.

***1948இற்குப் பின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் கிழக்கு மாகாணத்தில் 7000சதுர கிலோமீற்றரையும் வடக்கில் 600சதுர கிலோமீற்றரையும் அரசு ஆக்கிரமித்துள்ளது. காலத்திற்குக் காலம் அரசு நடத்தும் 'எல்லை மீள்வரைவு' (BOUNDARY DEMARCATION) சிங்களவர் குடியேறிய தமிழர் மண்ணை சிங்கள மாகாணங்களுடன் இணைக்கும் நோக்கைக் கொண்டது.***

"மனிதர்கள் தமது வரலாற்றைத் தாமே உருவாக்குகின்றனர், ஆனால் தாம் விரும்பியவாறு அதைச் செய்ய அவர்களால் முடிவதில்லை, தங்களால் தெரிவுசெய்யப்பட்ட இலக்கில் அவர்களால் செய்ய முடிவதில்லை. கடந்த காலத்தில் இருந்து தொடரும் சூழலில் இருந்துதான் மனிதர்கள் தமது வரலாற்றை உருவாக்குகின்றார்கள்" என்கிறார் கார்ல்மாக்ஸ் (EIGHTEENTH BRUMAIRE OF LOVIS BONAPARTE KARL MARX) மகாவம்சத்தின் கதாநாயகன் துட்டகெமுனு பல்லாயிரம் தமிழர்களைக் கொன்றொழித்தபின் தான் நடத்திய படுகொலைகள் பற்றிச் சிந்தித்து சோகத்தில் ஆழ்ந்தபோது அவனைத் தேற்றுவதற்கு வானில் பறந்தவாறு சில தேரர்கள் வந்தடைகின்றனர். உயிர்க்கொலையை வெறுத்தொதுக்கும் புத்த மதத்தைச் சேர்ந்த இவர்கள் பாவமன்னிப்பு வழங்குகின்றார்கள். மகாவம்சம் கி.பி 6ஆம் நூற்றாண்டில் முற்றுப்பெற்ற மதநூல். 1956இல் எழுதப்பட்ட பௌத்தமத வரலாறு என்ற நூலின் ஆசிரியரான புத்த மதத்துறவி பிக்கு ராகுல மேற்கூறிய துட்டகெமுனு தொடர்பான நிகழ்ச்சி பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா?

"இளம் காமினியின் கொடியின்கீழ் முழுச் சிங்கள இனமும் அணிதிரண்டது. சிங்களவர்கள் மத்தியில் தேசியம் அப்போது ஆரம்பித்தது. ஆரோக்கியமான இளம் இரத்தமுடைய புதிய இனம் புத்தமதத்தின் வழிநடத்தலில் உருவாகியது. மத அடிப்படையிலான அந்த அரசனின் தேசியம், கிட்டத்தட்ட ஒரு தீவிரவாதம் போன்று சிங்கள சமுதாயத்தைத் தட்டியெழுப்பியது. இந்தச் சூழலில் ஒரு புத்த மதத்தைச் சேராதவன் மனித குலத்தைச் சேர்ந்தவனாக கணிப்பிடப்பட முடியாது" (A HISTORY OF BUDDHISM IN CEYLON, THE ANURADHAPURA PERIOD BY BHIKKU RAHULA M.D GUNASENA PUBLICATION, COLOMBO 1956)

துட்டகெமுனு எல்லாளனுக்கு எதிராக நடத்திய போருடன் ஒப்பிட்டு வடமராட்சி ஒப்பிரேசன் லிபரேஷன் நடவடிக்கை பற்றிய நூலை சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் திலக் சேனநாயக்கா எழுதியுள்ளார். கிட்டத்தட்ட ஆயிரம் வரையிலான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுத் தெருக்களில் சடலமாக வீசப்பட்டனர். பெருந்தொகையான இளைஞர்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு தெற்கிலுள்ள பூசாபோன்ற வதைமுகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இத்தனை கொடுமைகளையும் கண்டு கொதித்தெழுந்த புலிகள் கரும்புலியாக மாறினர். ஒப்பரேசன் முன்னேறிப் பாய்ச்சல், இடிமுழக்கம், ரிவிரெச, ஜெயசிக்குறுய் போன்ற நடவடிக்கைகளிலும் இந்த அதிகாரி பங்குபற்றியவர். 2004ஆம் ஆண்டு வெளிவந்த இவருடைய நூலில் "சென்ற காலத்தில் துட்டகெமுனு நடத்திய ஒப்பிரேசன் விஜித்தபுர போர் நடவடிக்கைக்குப் பின்பு மிகவும் விஞ்ஞானபூர்வமாக நடத்தப்பட்ட போர் நடவடிக்கையாக ஒப்பிரேசன் வடமராட்சி லிபிரேசனைக் குறிப்பிடலாம்" என்ற வியப்பான செய்தி காணப்படுகிறது. இந்த அதிகாரி கெமுனுவாட்ச் படையணியைச் சேர்ந்தவர். (VADAMARADCHI LIBERATION OPERATION AND NORTHERN BATTLES BY CAPTAIN THILAK SENANAYAKE. 2004)

வன்முறைக்கும் வன்முறையைத் தூண்டும் கோட்பாடுகளுக்கும் காத்திரமான மாற்றீடாக புத்தமதக் கோட்பாடுகள் இடம்பெறுகின்றன என்கிறார் பங்கஜ் மிஷ்ரா. (AN END TO SUFFERING THE BUDDHA IN THE WORLD BY PANKAJ MISHRA, 2005) முற்று முழுதாகச் சாந்தி சமாதானம் என்பவற்றை முன்னெடுக்கும் புத்தமதக் கோட்பாடுகள் மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா போன்றோர் சிந்தனை மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மிஷ்ரா சுட்டிக்காட்டுகிறார். இந்திய வரலாற்றின் மிகப்பெரிய இந்தியன் என்றும் கௌதம புத்தரை, ஜவகர்லால் நேரு வர்ணிக்கிறார். இத்தனை சிறப்புமிக்க பரமஞானி சிறிலங்காவில் படும்பாட்டை நினைக்கும்போது துயரமாக இருக்கிறது. உயிர்க்கொலை செய்வோருக்கு மன்னிப்பு வழங்கும் தூண்டு கருவியாகவும், வன்முறையைத் தூண்டுபவர்களும், இனங்களுக்கிடையிலான அமைதிக்குத் தடைக்கல்லாகவும் இத்தீவின் புத்தபிக்குகள் ஆரம்ப காலந்தொட்டு இடம் பெறுகின்றனர்.



திருமலை மணிக்கூட்டுச் சந்திக்கருகில் புதிதாக நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலை

புத்தரின் போதனைகள் மிகவும் சுருக்கமானவை. ஆசைகள் துன்பத்திற்குக் காரணமாகின்றன. ஆசைகளைத் துறந்தவன் விடுதலை பெறுகிறான். நன்கு வேயப்படாத வீட்டுக் கூரையிலுள்ள துவாரத்தினூடாக மழைநீர் உள்நுளைவதுபோல் ஐம்புலனை அடக்காதவரிடம் தீயசெயல்கள் குடி கொள்கின்றன. கோபம், பேராசை, தீய நடத்தை என்பவற்றைத் துறந்தவனே துறவி. கொல்லாமை அவனுடைய மிகப்பெரிய நற்செயல். கி.பி 563இல் பிறந்து தனது 80வது வயதில் இறந்த கௌதமர் காலத்தால் அழியாத மதபோதனைகளையும் வாழ்க்கை முறைகளையும் விட்டுச்சென்றார். பிக்குகள் என்போர் தமக்கென வாழாதவர்கள். உலகின் ஐந்து மிகப்பெரிய மதங்களில் ஒன்றாக பௌத்தமதம் கணிப்பிடப்படுகிறது. சிங்கள - பௌத்தம் என்று ஒன்றுமே கிடையாது. ஆனால் அப்படி இருப்பதாக சிறிலங்கா மதவாதிகள் கூறுகின்றனர். 2200 வருடங்களுக்கு முன் சிறிலங்காவுக்கு இந்தியாவிலிருந்து பௌத்தமதம் கொண்டுவரப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

புத்த சங்கத்தின் பாரிய வீழ்ச்சி பற்றி சிங்கள பேரினவாதத்தின் குரலாக ஒலிக்கும் திவயின சிங்களப் பத்திரிகை தனது 26 பிப்பிரவரி, 1998ஆம் திகதி இதழில் விரிவாகக் குறிப்பிடுகின்றது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியபின் பெண்களைக் கொலைசெய்யும் பிக்குகள் தொடக்கம், வழிப்பறியில் ஈடுபடுவோர் உள்ளடங்கலாக புத்த சின்னங்களைத் திருட்டுத்தனமாக விற்பனை செய்யும் புத்தபிக்குகள் வரையிலானோர் வரலாற்றை விலாவாரியாக எல்லாவல மெதானந்த என்பவர் எழுதியுள்ளார். இதுபற்றிக்

➡

**– கலாநிதி க.சோமாஸ்கந்தன் –**



www.eelamview.com

**பௌத்த சிங்களப் பேரினவாதம் முன்னெடுக்கும் தர்மதீபம் என்ற நச்சுக் கருத்து நாடு இரண்டுபடுவதை ஊக்குவிக்கும் என்பது அரசியல் ஆய்வாளர் முடிவு. புத்தரால் பௌத்தமதக் காவலராக நியமிக்கப்பட்டவர்கள் சிங்கள இனத்தவர்களே. இலங்கை முழுவதும் புத்தர் அருளால் சிங்களவர்களுக்குத் தரப்பட்ட புனிதபூமி என்பன தர்மதீபக் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். சிங்கள இனவாதத்தின் முலப்பொருள் தர்மதீபக் கோட்பாடு. (THE DHRAMA DEEPA CONCEPT)**

குறிப்பிடும் ஜனவரி 22, 1999ஆம் நாள் ஐலண்ட் பத்திரிகை "பிக்கு தர்மத்திற்கு உட்படாத ஆயிரக்கணக்கான இதுபோன்ற சம்பவங்கள் பத்திரிகை வாயிலாக வெளி வருகின்றன" என்று தெரிவித்துள்ளது.

அரசியல் ஈடுபாடு புத்த சங்கத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாய் அடையாளம் காணப்படுகிறது. பெரும் எண்ணிக்கையில் தமிழர்களைக் கொலைசெய்த துட்டகெமுனுவை "மதத்திற்காகக் கொலைசெய்வது பாவமில்லை" என்று தேற்றிய புத்தபிக்குகள் புத்த மதத்தைச் சிதைத்த முதற் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர். பரிநிவாரணம் அடையமுன்பு "தனது தத்துவ போதனைகள் 500 வருடங்கள் மாத்திரம் நிலைக்கும்" என்று புத்தர் கூறியதாக ஒரு பாரம்பரியச் செய்தி உண்டு. தேசிய சங்கக் கவுன்சில் (NATIONAL SANGHA COUNCIL) என்ற அமைப்பை உருவாக்கிய மதுலுவாவே சோபிததேரர் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை முன்னெடுப்பதோடு, இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இத்தீவில் இடமில்லை என்ற கருத்தை முன்வைத்தார். தனது உயிரை எடுப்பது புத்ததர்மம் ஆகாது என்று தெரிந்தும் ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஒமல்லே சோபித தேரர் அண்மையில் சாகும்வரை உண்ணா விரதம் இருந்துள்ளார். நான்கு புத்தமத பீடங்களின் தலைவர்கள் இவருடைய உயிரைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள்தான் இன்றும் வேதனையானது.

சிங்கள மக்களின் வரலாற்று நூலான மகாவம்சத்தை மொழிபெயர்த்த வில்ஹெம் கெய்கர் (WILHEM GEIGER) பின்வருமாறு மகாவம்சம் பற்றிக் கூறுகிறார். "அதில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதைவிட என்ன சொல்லப்படாமல் மறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்வதே மிகவும் சிரமமான பணி." கெய்கர், எஸ்.தெரனியகல போன்றோரின் ஆய்வுகளின் படி கி.பி 500இல் வந்ததாகக் கூறப்படும் விஜயன் இலங்கையின் முதல் மனிதன் அல்ல. மகாவம்சம் மறைக்க முயலும் தென்னிந்திய மேகவிதிக் கலாசாரம் இலங்கையில் நன்கு பரவியிருந்தது என்பதை இரு ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். பலவிதமான புதைபடிவச் சான்றுகள் இதை வெளிப்படுத்துகின்றன. பலாங்கொடை மனிதன் பற்றிய ஆய்வுகளும் பொம்பரிப்பு பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சான்றுகளும் தென்னிந்தியத் தொடர்பைக் காட்டுகின்றன.

பௌத்தமதம் தழுவிய தமிழர்கள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பெருமளவில் வாழ்ந்திருக்கிறார்கள். இம்மதத்தின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியிருக்கிறார்கள் என்ற உண்மையை மகாவம்சம் கூறாமல் விட்டிருக்கின்றது. தென்னிந்திய வரலாறுகளின்படி அசோகச்சக்கரவர்த்தி காலத்தில் பௌத்தமதம் தென்னிந்தியாவில் பெருமளவில் பரவத்தொடங்கியது. அதன்பின் கி.மு 250இல் புத்த துறவிகள் குழுவொன்று மகிந்த தலைமையில் இலங்கை சென்றது. காவிரிப் பட்டினத்தில் இருந்து கடல் மார்க்கமாக இவர்கள் இலங்கை சென்றனர். காவிரிப் பட்டினத்தில் தங்கியிருந்தபோது ஏழு புத்தவிகாரைகளை மகிந்த அங்கு கட்டுவித்தான். கி.பி 2இல் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் இதுபற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. தேவநம்பியதீசனின் மாமனாகிய அரித்தகர் தென்னிந்தியாவில் மகிந்த முன்னெடுத்த மதப் பணிகளுக்கு உதவினார். இவர் பெயரால் அரிதாபட்டி என்ற கிராமம் மதுரை மாவட்டத்தில் இன்னும் இருக்கிறது. இக்கிராமம் முன்னர் புத்தமதம் வளர்த்த மையமாக இருந்தது. கி.பி 12வரை தென்னிந்தியாவில் பௌத்தமதம் நிலைகொண்டிருந்தது.

இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் கி.பி 1236 - 1268 தர்மகீர்த்தி என்ற பாண்டியநாட்டு தமிழ்ப் புத்ததுறவி இலங்கை வந்து அனைத்துலக பௌத்த மாநாடொன்றை நடத்தினார். மகாவம்சத்தின் தொடர்ச்சியான சூலவம்சம் என்ற நூலையும் தத்தவம்சம் எனும் இன்னுமோர் நூலையும் இவர் எழுதினார். பாளிமொழியில் இருந்த திரிபீடகத்திற்கு தமிழர்களாகிய புத்தகோச தர்மபாலாவும், புத்த தத்தவும் உரைக்குறிப்புக்கள் எழுதினர். சோழநாட்டைச் சேர்ந்த சங்கமித்திரா என்ற பெண் புத்ததுறவி கி.பி 4இல் இலங்கை சென்று அந்த நாட்டு அரசனை மகாயான பௌத்தத்திற்கு மதமாற்றம் செய்தார். இதன் காரணமாக மகாவிகாரை அழிக்கப்பட்டு மகாயன பௌத்தத்தின் பீடமாக அபயகிரி விகாரை தரம் உயர்த்தப்பட்டது. மகாவிகாரை - அபயகிரி பீடங்களுக்கு இடையில் முரண்பாடுகள் தோன்றியதோடு சிங்கள தமிழ் சச்சரவாகவும் மாறியது. என்றாலும் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரையான சோழநாட்டு புத்த தத்தா அனுராதபுரத்தின் மகாவிகாரைக்குப் பொறுப்பாக இருந்தார். பின்வரும் தமிழ் நூல்களில் தமிழ்பௌத்தம் பற்றிய விரிவான தகவல்களைப் படிக்கலாம். மணிமேகலை, குண்டலகேசி, திருப்படிகம், வளையாபதி, வீரசோழியம், பிம்பிசாரகதை சிங்கள பௌத்தத்திலும் பார்க்கத் தமிழ்பௌத்தம் தொன்மை வாய்ந்தது. இதை மகாவம்சம் இருட்டடிப்புச் செய்துள்ளது.

இலங்கையில் பௌத்தமதத் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வை மேற்கொள்வோர் சிங்கள மக்கள் பௌத்தர்களாக முன்பே இங்குள்ள தமிழர்கள் அதைத் தழுவி விட்டார்கள் என்பதைக் கண்டறிந்துள்ளனர். இதைக் கடும் பிரயத்தனம் எடுத்து மறைப்பதிலும் வடகிழக்கில் பரவலாகக் கிடைக்கும் பௌத்த சின்னங்களைத் தம்முடையவை என்று கூறும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் போக்கு இப்போது தீவிரமடைந்துள்ளது. இலங்கையின் முதலாவது உள்ளூர் புதைபடிவ ஆய்வுத் திணைக்கள முதல்வரான பேராசிரியர் செனரத் பறனவிதான கந்தரோடை புத்தமத அழிபாடுகளைப் பார்த்தபின் "இவை தமிழ்ப் பௌத்தர்களுக்கு உரியவை" என்று கூறினார். இந்த நிலைப்பாடு மாற்றப்பட்டு கந்தரோடை எச்சங்கள் தம்முடையவை என்று சிங்களவர்கள் கூறுகின்றனர். இதற்குச் சில தமிழர்களும் ஒத்தூதி வருகின்றனர்.



பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தேசிய பிக்கு முன்னணித் தலைவர் தம்பர அமில தேரர்.

இந்துக்களின் வழிபாட்டு இடங்களை அழித்தல், அதே இடத்தில் புத்தர் சிலை போன்றவற்றை அமைத்தல் ஒரு நெடுங்காலத் தந்திரோபாயமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. டிசெம்பர் 22, 1984ஆம் நாள் உடனடியாக வெளியேறும்படி மணலாறு மக்களுக்குச் சிங்கள இராணுவம் ஒலிபெருக்கி மூலம் கட்டளை இட்டது. 42கிராமங்களைச் சேர்ந்த 4000 தமிழ்க் குடும்பங்கள் இவ்வாறு வெளியேற்றப்பட்டனர். 1987இன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இப்பகுதிக்குக் கட்டளை அதிகாரியாக வந்த கேணல் டாட்டா தமது பழைய கிராமங்களைச் சென்று பார்வையிட அவர்களுக்கு அனுமதி அளித்தார். கொக்குளாய் அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டிருந்தது, அதே இடத்தில் புத்தர் கோயில் கட்டப்பட்டிருந்தது. திருக்கேதீஸ்வரத்தை பறங்கியர் இடித்துத் தள்ளியபோது அடியார்கள் "ஆதிகோணநாயகர்" என்ற கோயிலைத் தம்பலகாமத்தில் கட்டினார்கள். சிங்களக் குடியேற்றம் தம்பலகாமத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது இக்கோயில் கவனிப்பாரின்றிச் சிதலமடைய விடப்பட்டுள்ளது. கந்தளாயில் புத்தகோயில்கள் எழுந்துள்ளன.

அண்மைக் காலமாகத் தமிழர் பிரதேசங்களில் புத்தர் சிலைகளை நாட்டும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் - முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாகவுள்ள பொத்துவில் பிராந்தியத்தில் ஏழுக்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. திருகோணமலை, மன்னார், ஓமந்தை போன்ற இடங்களிலும் புத்தர் சிலைகள் நாட்டப்பட்டுள்ளன. மன்னாரில் 16 ஏக்கர் நிலத்தை புத்தர்கோயில் அமைப்பதற்காகச் சிங்களப் படையினர் முட்கம்பி வேலிபோட்டு அடைத்துள்ளனர். பழமைவாய்ந்த ஓமந்தைப் பிள்ளையார் கோயில் வீதியில் புத்தர்சிலை அமைக்கப்பட்டு இராணுவத்தினிரின் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஓமந்தைப் பிள்ளையார் கோயில் மூடப்பட்டுள்ளது. பூசைகள் நடைபெறுவதில்லை. திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான மணிக்கூட்டுச் சந்தி முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் புத்தர்சிலை நாட்டப்பட்டுள்ளது. அதன் பாதுகாப்பிற்காகப் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

புத்தமதக் கோட்பாடுகள் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளால் சிதைக்கப்படுகின்றன. அதேபோல் புத்தர் சிலைக்கும் களங்கம் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். புத்தமதம் ஆரம்பித்த எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்புதான் இந்தியாவில் புத்தர் சிலைகள் தோன்றின. கி.மு 6ஆம் நூற்றாண்டில் புத்தமதம் தோன்றியது. புத்தர் சிலைகள் கி.பி 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில்தான் உருவாக்கப்பட்டன. இந்த இடைவெளிக் காலத்தில் புத்தமதச் சின்னங்களான ஞான விருட்சம் (அரசமரம்), தர்மச்சக்கரம் என்பன வழிபடப்பட்டன. மூவகை கலைப் பாரம்பரியங்களின் கூட்டாகப் புத்தர் சிலைகள் இடம்பெறுகின்றன. இன்றைய பாகிஸ்தானின் வட-மேற்குப் பகுதியில் அவை முதன் முதலாகத் தோன்றின. அப்போது கிரேக்க, ரோம கலைப் பாரம்பரியங்கள் வட இந்தியக் கலைவடிவங்கள் மீது ஆதிக்கம் செலுத்தின. கிரேக்க கடவுள்களின் பாணியில் புத்தரின் தலைப்பகுதி செதுக்கப்பட்டது. சிலையின் ஆடைகள் ரோமர்களின் ஆடை அணியும் பாணியில் போர்த்தப்பட்டன. வட - மேற்கு இந்தியாவில் இடம்பெற்ற கலைப் பாரம்பரியத்தை கிரேக்கோ - கந்தாரா (GRAECO - GANDHARA) பாரம்பரியம் என்பார்கள். இந்தப் பாரம்பரியத்தில் புத்தர் சிலைகள் வடிவமைக்கப்பட்டன.

புத்தர்சிலை உருவாக்கத்தில் சில மாறாத அம்சங்கள் இந்தியாவில் தோன்றின. முகம் முட்டை வடிவத்திலும், கண்கள் தாமரை மலரைப் போன்றும் இருக்கவேண்டும் என்றும் வயிறுவரையான நெஞ்சுப்பகுதி ஓடுங்கியும் தோள் விரிந்தும், கைகள் நீண்டும் இருப்பதை வலியுறுத்தும் சிற்ப விதிமுறைகள் பிறந்தன. முழு உடலும் ஒழுங்காக வழுவழுப்பாக இருக்கவேண்டும் என்று சிலைகளைப் பார்ப்போர் மனதில் சாந்தி ஏற்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. உலகின் தலைசிறந்த கலைவடிவங்களில் ஒன்றாகவும், பாரம்பரிய வழிபாட்டுச் சின்னமாகவும் இடம்பெறும் புத்தர்சிலை, இராணுவ மேலாதிக்கக் குறியீடாகவும், தமிழருடைய மண்பறிப்பதற்கு உதவும் கருவியாகவும் சிங்கள பேரினவாதத்தால் மாற்றப்பட்டுள்ளது. சிறிய புத்தர் சிலையையும் அதன் பக்கத்தில் அரச மரக்கன்றையும் தமிழர் மண்ணில் முதற்கண் நாட்டுவார்கள். படிப்படியாக இராணுவப் பாதுகாப்பு, பிக்குகள் பிரசன்னம் என்பனவோடு சிங்களக் குடியேற்றக் கிராமமாக அது மாற்றப்படுவதோடு அதற்குச் சிங்களப் பெயரும் சூட்டப்படும்.

இலங்கைத்தீவின் மொத்த நிலப் பரப்பு 65,525 சதுர கிலோமீற்றர். 1948க்குப் பின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் கிழக்கு மாகாணத்தில் 7000சதுர கிலோமீற்றரையும் வடக்கில் 600சதுர கிலோமீற்றரையும் அரசு ஆக்கிரமித்துள்ளது. காலத்திற்குக் காலம் அரசு நடத்தும் 'எல்லை மீள் வரைவு' (BOUNDARY DEMARCATION) சிங்களவர் குடியேறிய தமிழர் மண்ணை சிங்கள மாகாணங்களுடன் இணைக்கும் நோக்கைக் கொண்டது. முஸ்லிம்களும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். அம்பாறை திகவாவியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 937 ஏக்கர் நிலத்தில் ஜெயவர்த்தனா அரசு சிங்களவர்களைக் குடியேற்றியது. திகவாவியில் புத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குடியேற்றத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. சிங்களக் குடியேற்றம் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் செறிந்து காணப்படுகின்றன. 1921இல் திருமலைச் சிங்களவர்களின் விகிதம் 4.5% ஆக இருந்தது. 1981இல் 33.6% ஆக உயர்ந்ததோடு இன்னும் உயர்ந்துகொண்டு போகிறது.

பௌத்த சிங்களப் பேரினவாதம் முன்னெடுக்கும் 'தர்மதீபம்' என்ற நச்சுக் கருத்து நாடு இரண்டுபடுவதை ஊக்குவிக்கும் என்பது அரசியல் ஆய்வாளர் முடிவு. புத்தரால் பௌத்தமதக் காவலராக நியமிக்கப்பட்டவர்கள் சிங்கள இனத்தவர்களே. இலங்கை முழுவதும் புத்தர் அருளால் சிங்களவர்களுக்கு தரப்பட்ட புனிதபூமி என்பன தர்மதீபக் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். சிங்கள இனவாதத்தின் மூலப்பொருள் தர்மதீபக் கோட்பாடு (THE DHRAMA DEEPA CONCEPT) என்ற காரணத்தால் தமிழர்களுடைய இன, மொழி உள்ளிட்ட உரிமைகளையும் தாயகக் கோட்பாட்டையும் அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். இனம், மொழி, மதம், மண் ஆகிய நான்கின் மொத்த வடிவமாகப் புத்தர் சிலை விவகாரம் உருவெடுத்துள்ளது. மூடனும் முதலையும் கொண்டது விடா என்பார்கள். இந்த நாட்டின் இன்றைய வரலாற்றை விளக்க இது போதுமானது.



www.eelamview.com

# நெஞ்சுக்குள் நெருப்பெரித்தவன்

அது 1999ஆம் ஆண்டின் மழைக்காலம். சினந்து அழும் சின்னப்பிள்ளையாய் விட்டுவிட்டு மழை தூறிக்கொண்டிருந்தது. மழைநேரம் காட்டின் தரையமைப்பு எப்படி மாறிப்போயிருக்குமோ அந்த மாற்றம் அனைத்தும் நிறைந்த காட்டிற்குள்ளால் பெய்துகொண்டிருக்கும் மழையில் நனைந்தபடி காட்டு மரங்கள் சிந்தும் நீர்த்துளிகளால் விறைத்தபடி ஒரு அணி காட்டை ஊடறுத்து வேகமாக நடந்துகொண்டிருந்தது.

அவர்களின் வலுவிற்கு அதிகமான பாரங்கள். அவற்றோடும் மணலாற்றில் இருந்து காடுகளிற்குள்ளால் கனகராயன்குளம் நோக்கி சளைக்காமல் நடந்துகொண்டிருந்தார்கள். அந்த அணி வீரர்களிலே மிக உயர்ந்தவனும் அகன்ற நெஞ்சுடனும் ஓர் உருவம். நீண்ட கால்கள், பெருத்த கைகள், குழம்பிப்போன தலைமயிர், அடுக்கான பல்வரிசையில் சற்று மிதந்து நிற்கும் ஒரு பல், பொதுநிறம், கண்குழிக்குள் அலையும் கண்கள் எங்கோ, எதையோ தேடிக்கொண்டிருந்தன. இப்படி அடையாளங்களோடு ஒருவன், அவன்தான் அந்த அணியை வழிநடத்திச் செல்லும் அணித்தலைவன் மறைச்செல்வன்.

அவனது நெஞ்சிற்குள் எத்தனையோ ஏக்கங்கள். அதை முகத்தில் சிறிதும் பிரதிபலிக்கவிடாது தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டு அணிகள் எட்டவேண்டிய இலக்குநோக்கி நகர்த்திக் கொண்டிருந்தான். இடையில் எதிர்ப்பட்ட தடைகளைத் தாண்டிச்செல்ல அதிகநேரம் தாமதமாக வேண்டியிருந்தது. தொலைத்தொடர்புக் கருவி அவனை அழைத்தது. ஏதோ கதைத்தான். "இன்னும் இலக்குகளை ஏன் அடையவில்லை. தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது" என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் எதிர்கொள்ளவேண்டிய தடைகள் ஏராளம். அதைத் தெரிந்தும் "நாங்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் குறித்த இடத்தில் நின்று தொடர்பு எடுக்கின்றோம்" என்று கூறிவிட்டு உடனேயே தொடர்பைத் துண்டித்தான். போய்ச் சேரவேண்டிய இடத்திற்கும் அவர்கள் நிற்கும் இடத்திற்கும் இடையே நீண்ட அந்தக் காட்டுப் பிரதேசத்தைக் கடக்க அவர்களிற்கு அந்த நேரம் போதாது. அதுவும் இராணுவ முகாம்களைக் கடந்து போகவேண்டியிருந்தது.

வேகமாக எல்லோரும் நடந்தார்கள். அந்தக் காட்டுப்பகுதி அவனுக்குப் பழக்கமானது. மரங்கள் ஒவ்வொன்றையும் நன்கு அறிந்திருந்தான். ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கையில் அவன் பங்கெடுத்திருந்தபோது அதே பிரதேசங்களில் பலநாட்கள் கண்விழித்து நின்றிருக்கின்றான்.

அந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் அவன் தன் தோழர்களைப் பிரிந்து தேம்பி இருக்கின்றான். அப்போதெல்லாம் "உந்த ஆட்லறியை உடைக்கவேணும்" என்று மனதினுள் குமுறிக்கொள்வான். அது அவனிற்கும் அந்த மரங்களிற்கும்தான் தெரியும்.

என்னென்றுதான் தாங்குவது. வாகனங்களை ஓட்டி குடும்பத்தைத் தாங்கிய அப்பாவை இழந்து இனி எப்படி அவர்களது வாழ்க்கை. சின்ன வயசில் அது அவனுக்குப் பெரிய இழப்பு. அப்பாவை நினைத்து நினைத்து விம்முவான். அழுவான். யார்தான் என்ன செய்யமுடியும். சிறிய குடும்பம். அவனும், அக்காவும், அம்மாவும்தான். ஒவ்வொருவரது முகத்திலும் பெரிதாய்ச் சோகம் குந்திக்கொண்டிருந்தது. யாராலும் ஆற்றிவிட முடியாத அந்தச் சோகத்தோடு அவர்களது குடும்பம் நாளும் நாளும் அல்லற் பட்டுக்கொண்டேயிருந்தது.

தொடர் சண்டைக் காலத்தில், காவலரணில் கடந்த நாட்களில் ஆட்லறி எறிகணைகள் சினமும் கோபமும் ஊட்டுபவையாகவே இருந்தது. ஒன்றாய் பதுங்கு குழியில் இருந்துவிட்டு தண்ணீர் எடுத்துவரவென வெளியில் சென்ற அவனிலும் வயது குறைந்த தோழன் திரும்பி வரமாட்டான்... அவன் எறிகணை வீச்சில் வீரச்சாவு அடைந்தோ, அல்லது விழுப்புண் பட்டோ இருப்பான்.

தொடர் சண்டைக் காலத்தில், காவலரணில் கடந்த நாட்களில் ஆட்லறி எறிகணைகள் சினமும் கோபமும் ஊட்டுபவையாகவே இருந்தது. ஒன்றாய் பதுங்கு குழியில் இருந்துவிட்டு தண்ணீர் எடுத்துவரவென வெளியில் சென்ற அவனிலும் வயது குறைந்த தோழன் திரும்பி வரமாட்டான்... அவன் எறிகணை வீச்சில் வீரச்சாவு அடைந்தோ, அல்லது விழுப்புண் பட்டோ இருப்பான்.

காணாத தோழனைத் தேடிச்சென்று நீளுகின்ற அந்தத் தெருக்கள்... நினைவுகள் மீள ஒளிபரப்புச் செய்தன. மன்னார் வவுனியா நெடுஞ்சாலையிலே அன்றொரு நாள் நாற்பத்தினான்கு அப்பாவித் தமிழ்மக்கள் சுட்டும் வெட்டியும் பரிதாபமாக கொல்லப்பட்டார்கள். அவர்களது உயிரிழந்த சடலங்கள் ஆங்காங்கே வீதிகளிலே எரிந்தும் எரியாமலும் கிடந்தன.

இந்தச் சேதி உள்ளூர் பத்திரிகைகளில் பரவலாக வந்தபோது முகம் காணாத சொந்தங்களிற்காக அனுதாபப்பட்டு

இரத்த வெள்ளத்தில் காணும் சந்தர்ப்பத்தையெல்லாம் சந்தித்தவன். இதற்குக் காரணம் அந்த ஆட்லறிகள். அதை உடைக்கவேணும் என்று மனதிற்குள் அப்போதே தீர்மானித்துக் கொண்டான். அதற்காகவே தலைவருக்குக் கடிதம் எழுதி அனுமதிபெற்றுத் தன்னையே வருத்திப் பயிற்சி எடுத்து இப்போது கரும்புலியாய் இலக்குத்தேடிப் போகின்றான். அவன் முதலில் நடந்த இடங்களை மீண்டும் காணுகின்றபோது மயிர் சிலிர்த்தது. நடையை விரைவுபடுத்தி வேகமானார்கள். பொழுது கருகின்ற நேரம்தான் அந்த இராணுவ முகாமிற்கு அண்மையாக வந்திருந்தார்கள். இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக முடியவேண்டும். தேசம் வேண்டிநிற்பது அதுவே.

வன்னியில் பெரும் நிலங்கள் இராணுவ ஆக்கிரமிப்பால் குறுகிக்கொண்டிருந்த காலம். நகரங்களையும் தெருக்களையும் கொஞ்சம் கொஞ்சமாய் தேசம் இழந்துகொண்டிருந்தது. இந்த அபாயச் சூழலில்தான் வோட்டசெற் 01, 02 என்று அம்பகாமம் பகுதியில் முன்னேறி சில காவலரண்களையும், எம்மவர்களின் சில வித்துடல்களையும், இராணுவம் கைப்பற்றியிருந்தது. வன்னியில் மக்கள்

– துளசிச்செல்வன் –

திகைத்து நிற்கின்ற சூழலில், நெருக்கடி நிறைந்ததாய் உணர்ந்த அந்த நாட்களில் தலைவரோ உலகிற்குப் புலிகள் பலத்தை உணர்த்தும் நடவடிக்கைக்கான தாக்குதலில் இவர்களுக்கான திட்டத்தை வகுத்துக் கொடுத்திருந்தார். தேசத்திற்கும் போராட்டத்திற்கும் இடையூறும் நெருக்கடிகளும் வரும்போதுதான் இவர்களது பணி தேசத்திற்குத் தேவைப்படுகின்றது. அவர்களும் அதை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற துடிப்போடுதானே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

*****

கண்டிவீதியைக் கடக்கவேண்டும். கண்டி வீதியைக் கடக்கின்றபோது அந்த அகன்ற தார்ச்சாலை மலைப்பாம்பென நீண்டு வளைந்து கிடந்தது. அதைக் குறுக்கறுத்து எதிரியின் கண்ணில் சிக்காது கடந்தார்கள். ஒருபுறம் அவர்கள் தேடிவந்த இலக்கு கனகராயன்குள இராணுவமுகாம், மறுபுறம் வவுனியா. இரண்டையுமே மறைச்செல்வன் திரும்பத் திரும்பப் பார்த்தான். வவுனியாவைப் பார்க்கின்றபோது வேறுபல பழைய நினைவுகள் அவனை ஆக்கிரமித்தன.

வவுனியா, அதுதான் அவன் பிறந்து வளர்ந்த கிராமம். அதற்கும் மன்னாருக்குமான

சில கண்ணீர்த் துளிகள் சிந்தப்பட்டன. அப்பாவி மக்கள் படுகொலை என்று கண்ணை உறுத்தும் வகையில் பெரிய எழுத்தில் வெளிவந்த அந்தச் சோகமும் துயரமும் மறுநாளே பத்திரிகையைப்போல மறைந்துபோனது. அது இன்னொரு சோகச் செய்தியை அவனுக்குக் காவிவந்தது. அது அவர்களது குடும்பத்தில் பெரிய இடியாக விழுந்தது. எல்லோரையும்போல அவர்களால் அந்தத் துயரத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

என்னென்றுதான் தாங்குவது. வாகனங்களை ஓட்டி குடும்பத்தைத் தாங்கிய அப்பாவை இழந்து இனி எப்படி அவர்களது வாழ்க்கை! சின்ன வயசில் அது அவனுக்குப் பெரிய இழப்பு. அப்பாவை நினைத்து நினைத்து விம்முவான். அழுவான். யார்தான் என்ன செய்யமுடியும். சிறிய குடும்பம். அவனும், அக்காவும், அம்மாவும்தான். ஒவ்வொருவரது முகத்திலும் பெரிதாய்ச் சோகம் குந்திக்கொண்டிருந்தது. யாராலும் ஆற்றிவிட முடியாத அந்தச் சோகத்தோடு அவர்களது குடும்பம் நாளும் நாளும் அல்லற் பட்டுக்கொண்டேயிருந்தது.

அம்மாவும் இவர்களுக்குத் துணையாக நின்று, மாடுகள் வளர்த்து ஒருவாறு குடும்பத்தை நடத்திச் சென்றாள். இவன் சின்ன வயதில் குழப்படிக்காரனாகவே இருந்தான். காலையில் எழுந்து மாட்டுப்பட்டிக்குச் சென்று பால் கறந்துவிட்டு மாட்டுச்சாணம் அள்ளிப் போட்டுவிட்டே அவசர அவசரமாய் பள்ளிக்கு ஓடுவான். வந்து புத்தகங்களை வைத்துவிட்டு மாடு மேய்க்கப் போய்விடுவான். மாடு மேய்ப்பதும் வரம்புகளிலும் வயல் வெளிகளிலும் ஓடி விளையாடுவதிலும் இவனது பொழுதுகள் கழியும். அதுவே இவனுக்குச் சந்தோசம். அந்த வயல்கள் இவனோடு கொண்ட சொந்தத்தின் அடையாளமாக சின்னச் சின்ன சிராய்ப்புக் காயங்களும் இப்போதும் மாறாத அடையாளங்களாய் இருக்கிறன.

ஊருக்குள் வரும் போராளிகளைப் பார்த்து ஆசைப்பட்டிருக்கின்றான். ஆனால் அவர்களோடு சேர்ந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவனது இலட்சிய ஆசைகள் நெருப்பாய் எரிய அதை மறைத்து அம்மாவோடு செல்லம் கொஞ்சுவான். வளரவளர அந்த வேட்கை அவனைவிட வளர்ந்தது. இராணுவக் கட்டுப்பாட்டில் அவனது கிராமத்தில் போராளிகள் அலைகின்ற அலைச்சல் அவர்கள் சுமக்கும் வேதனையான நாட்கள் எல்லாம் அவனைப் போராட்டத்தில் இணையவேண்டும் என்ற தீர்த்தை ஏற்படுத்தின. பள்ளிப்பருவத்திலே அவன் போராட்டத்தில் இணைந்துகொண்டான். வயதுக்கு மீறிய வளர்ச்சி உடல் மட்டுமல்ல, அவனது எண்ணங்களும் செயற்பாடுகளும் அப்படியானதே. உயர்ந்த எண்ணங்களும் தூரநோக்கும் கொண்ட அவன் எதிலும் துடிதுடிப்பும் முன்னிற்கும் தன்மையும் கொண்டவன். தாக்குதல் களங்கள் அவனை இன்னும் இன்னும் பட்டை தீட்டின.

கண்டி வீதியைக் கடந்து நடந்தான். அன்று 81 மில்லிமீற்றர் மோட்டரையும் தூக்கிக்கொண்டு நடக்கிறபோது அவனுக்கு மட்டும் தெரியக்கூடிய வெப்ப மூச்சோடு, அவனுக்கு மட்டும் கேட்டக்கூடிய சத்தத்தில் ஆட்லறியை உடைக்கவேணும் என்று மனம் சுருதி தப்பாது துடித்தது. நினைவுகள் கனத்தன. ஓயாத அலைகள் மூன்று ஆரம்பமாகி அடிக்கின்ற வேகத்திற்கு கனகராயன்குளம் மீது கரும்புலி அணிகள் ஆட்லறிப் பிரிவினருடன் இணைந்து தாக்க ஆரம்பித்தனர். சிறிதும் எதிர்பாராத இத் தாக்குதலில் எதிரி திகைத்து திக்குமுக்காடினான். அவனது ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியது. கட்டளைத் தளபதியாகவிருந்த சிங்களத் தளபதிகளுக்கு கரும்புலிகளின் வெடியதிர்வு சாவாய்க் கதவில் தட்டியது.

அந்தப் பெரிய சமரரங்கே ஒரு நொடியில் மாறியது. தளபதிகள் மூட்டை முடிச்சுக்கட்ட இராணுவம் பின்வாங்கியது. எமது பிரதேசம் எங்கும் அகல அகலப் பரப்பி நின்ற இராணுவம் உடைந்தகுளம் வற்றுவதைப்போல மிக வேகமாக ஓடியது.

***வீரப்பிறப்பு:- 03.05.1980***

***வீரச்சாவு :- 10.05.2000***



**கரும்புலி**
**மேஜர் மறைச்செல்வன்**
**(செல்வராசா ரஜனிக்காந்)**
**வவுனியா**

அந்தச் சாதனையை எதுவித இழப்புக்களும் இல்லாது நடத்திவிட்டு மறைச்செல்வன் தலைமையிலான கரும்புலி அணி வெற்றிகரமாகத் தளம் திரும்பியது.

வட போர்முனையில் ஓயாத அலைகள் அடித்தபோது தென்மராட்சியில் பல இடங்களிலும் இவனது செயற்பாடுகள் இருந்தன. எப்போதும் தாயகத்தைப் பற்றியே நினைத்துக்கொண்ட அந்த வீரன் நாகர்கோவிற் பகுதியில் இலக்கொன்றிற்காய் விரைந்துகொண்டிருந்தபோது, இலக்கை நெருங்கும் முயற்சியில் அவன் ஈடுபட்டுக்கொண்டிருக்கவும் இராணுவம் தாக்குதலை ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. இழப்புக்கள் எதுவும் இல்லாத பல தாக்குதல்களையும் நிகழ்த்தி தேசத்திற்கு வெற்றியைக் கொடுத்தவன் 10.05.2000 அன்று நாகர்கோவில் மண்ணிலே வீரகாவியமானான்.

ஆட்லறியை உடைக்கவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த அந்த தேசப்புயல் துடிப்பிழக்கின்றபோது தன் சாவிலே ஒரு சேதியை இந்தத் தேசத்திற்கு சொல்லிவிட்டுப்போனது.

அழுதுகொண்டிருந்தால் அடிமைகளாவோம், துணிவாய் எழுந்து நின்றுவிட்டால் வாழ்வோம். அல்லது வீரராய்ச் சாவோம் என்று.



# நின்மதி குலைப்பது நினைவுகள் மட்டுமல்ல நிஜமும்தான்

**தென்** தமிழீழத்திலே தமிழ்மக்களுக் கெதிராக சிங்களப் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையில் தமிழ்மக்களின் உயிர்கள் கணக்கின்றி பறிக்கப்பட்டன.

தமிழ்க் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு அப்பாவிப் பொது மக்கள் வயது வித்தியாசமின்றி கொடூரமான முறையில் சித்திர வதை செய்து கொலைசெய்யப் பட்டனர். தமிழ்மாந்தர்கள் உறவுகளின் கண்முன்னே அநாகரிகமான முறையில் மானபங்கப்பட்டனர். இயற்கை எழில் கொஞ்சும் தமிழர் தாயகப் பிரதேசங்கள் சிங்களப் படைகளால் சிதைத்துச் சின்னாபின்னமாக்கப்பட்டன. குடியிருப்புக்களிலிருந்து மக்கள் விரட்டியடிக்கப் பட்டனர். இதனால் பூர்வீக நிலங்கள் புதர்மண்டிக் கிடந்தன.

கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கென அழைத்துச் செல்லப் பட்டவர்கள் மறுநாளே இரும்புக் கம்பிகளாலும், பொல்லுகளாலும் தாக்கப்பட்டு, சுட்டும், வெட்டியும் மிகவும் கொடூரமான முறையில் குறை உயிருடன் தீயில் இட்டு எரிக்கப்பட்டு கொலைசெய்யப் பட்டனர். சிங்களப் படைகளின் முகாம்களுக்குப் பின்னால் இந்த அப்பாவிகளின் எச்சங்கள் மலிந்து கிடந்தன. தமிழினத்தை அழித்து அவர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் முயற்சியில் அவ்வப் போது ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசியல்வாதிகள் தீட்டிய திட்டத்திற்கு சிங்கள இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் சில முஸ்லிம் கும்பல்களும் கருவிகளாயிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வளம்மிக்க கிராமங்கள் பல சிங்களப் படைகளால் சீரழிக்கப் பட்டன. அந்தவரிசையில் தோணி தாட்டமடு கிராமமும் ஒன்று. மட்டக்களப்பு நகரிலிருந்து 45 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது இக் கிராமம். தோணிதாட்டமடு கிராமம் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் இக்கிராமத்திற்கு மக்கள் வயற் செய்கைக்காகவும், சேனைப் பயிர்ச்செய்கைக்காகவும், வாகரையிலிருந்து சென்றுவருவார்கள். பனிச்சங்கேணி ஆறு தோணி தாட்டமடு கிராமத்திற்கு அழகு சேர்த்தது. வயல் வாடிகளும் காவல் பரண்களும் சேனைக்குடில்களும் மக்களின் வாழ்விடங்களாகக் காணப்பட்டன.

அந்தக் காலகட்டத்தில் வாகரை, வம்பிவெட்டவான், கதிரவெளி, மாவடி ஓடை போன்ற இடங்களில் சிங்கள இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தனர். தாமுண்டு தமது தொழிலுண்டு என வாழ்ந்து வந்த மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் தமது இனவெறியைக் காட்டத்தொடங்கியது. தோணிதாட்டமடு கிராமத்தையும் அழித்து அல்லற்படுத்தியது. வயல் வாடிகளிலும், சேனைக் குடில்களிலும், காவற் பரண்களிலும் இருந்த அப்பாவிப் பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், உயிருடன் தீயிட்டு எரித்தும் கொல்லப்பட்டனர். அந்த மக்களின் இனிய வாழ்க்கையை சிங்களப் படைகள் சிதைத்துச் சீரழித்தன.

1987ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ஆம் திகதி தோணிதாட்டமடு கிராம மக்களுக்கு இருண்ட நாள். இரவோடு இரவாகச் சிங்கள இராணுவத்தினர் கிராமத்தைச் சுற்றிவளைத்து மக்களை வேட்டையாடிய நாள். இக்கொலைச் சம்பவத்தில் தனது கணவனைப் பறிகொடுத்து, உயிர்தப்பித் தனிமரமாய் நிற்கும் வயோதிபத் தாதியொருவர் தனது கண்முன்னே நடந்த துயரச் சம்பவத்தை கண்ணீருடன் கூறினார்.

''விடியச்சாமம் அஞ்சு மணியிருக்கும். ஆத்துப் பக்கமா வெடிகேட்குது, அப்ப வயல்வாடிக்க நிண்ட நாங்க என்னவோ ஏதோ எண்டு பயந்து, நடுங்கினம். வாகரை, வம்மிவெட்டவான், மாவடி ஓடை ஆமிக்கேம்பில இருந்து ஆமிக்காரனுகள் இரவோடு இரவா வந்து வடிச்சல் பிள்ளையார் கோவிலடியில் அவண்ட வாகனத்தப் போட்டுத்து இஞ்சால நடையாக வந்து எங்கட கிராமத்தைச் சுற்றிவளைச்சிக் கிடந்தானுகள். நாலு மூலையிலையும் பட, படவென வெடிச் சத்தம் கேட்டுக்கொண்டிருக்க விடிஞ்சி ஆறு, ஏழு மணியிருக்கும். வாடிகளுக்க உளுபட்ட ஆமிக்காரன் எல்லாரையும் புடிச்சி இழுத்திழுத்து சுட்டானுகள், சனமெல்லாம் கத்தின சத்தம் வயல் வெட்டையெல்லாம் அதிர்ந்தது. நான் எண்ட பிள்ளையளக் கூட்டிக்கொண்டு ஆத்துக் காட்டுப் பக்கமா ஓடினன். எண்ட பக்கத்து வாடியில் இருந்த தவமணியின் குழந்தைகளும், கமலாவும், கமலாட பிள்ளைகளும் ஆமிக்காரண்ட கையில் மாட்டித் தாங்க, ஓடின எங்களக் கண்ட ஆமிக்காரன் எங்களப் பார்க்கச் சுட்டானுகள், தலைக்கு மேலாலயும், எங்களுக்குப் பக்கத்தாலயும் புஸ், புஸ் எண்டு சத்தம் கேட்டுச் சன்னம்போகுது, வயல் வரம்புக்கு மறைவால் விழுந்து, விழுந்து ஓடினம்.

அப்போது விழுந்த எண்ட கணவர் எழும்ப முடியாமல் ஐயோ, ஐயோ எண்டு கத்தினார். அங்க பார்த்தா அவருக்கு வெடிப்பட்டுத்து. பிள்ளைகள் எல்லோரும் அவ்விடத்தில் அழுது புரண்டு கத்தினம். முதுகுப் பக்கமா இரத்தம் பாய்கின்றது. நீ பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு ஓடு, நான் வரம்புக் கட்டுக்கு மறைவால் படுக்கிறன் என்றார். ஆனால் நாங்கள் போகவில்லை. எங்களை நோக்கி வெடி வந்து கொண்டிருக்கிறது. எங்களை ஓடுங்க, ஓடுங்க எண்டு அவர் கத்துகின்றார். அவரைக் கையில் பிடிச்சி இழுத்தோம். ஆனால் அவரால் ஒரு அடிகூட எழுந்து நடக்க முடியவில்லை.

மெதுவாகத் தவண்டு, தவண்டு வந்து பற்றைக்குள்ள இருந்தோம். ஆமிக்காரன் இஞ்ச வந்தானெண்டா எல்லோரையும் கொன்றுவிடுவானுகள். நீ பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஆத்துப் பக்கமா போ, நான் இந்தப் பற்றைக்க கிடந்துவிட்டு ஆமிக்காரன் போனபிறகு வருகிறேன் என்றார். அவர் கூறியதுபோல நான் பிள்ளையளக் கூட்டிக்கொண்டு ஆத்துக் கட்டுப் பக்கம் ஓடினன். கொஞ்ச நேரத்தால பார்த்தம் அவர் கிடந்த இடமெல்லாம் ஆமிக்காரனுகள் நிக்கிறாங்க. பட, படவென வெடி கேட்டுக்கொண்டே இருந்திது.

அதுக்கிடையில் தனது பிள்ளைகளைக் தூக்கித்து ஓடிவந்த குணத்திட பொஞ்சாதியைப் புடிச்ச ஆமிக்காரனுகள் அந்த இரண்டு பிள்ளைகளையும் சுட்டுப்போட்டு அவளை ஈவிரக்கமில்லாமல் மிருகத் தனமாக மானபங்கப் படுத்தினானுகள். உடம்பில ஒரு சொட்டுத் துணிகூட இல்லாமல் அவளை அரைகுறை உயிருடன் நெரும்பில போட்டு எரிச்சானுகள். பிறகு வந்து பார்த்தம் எனது கணவரை நெருப்பில போட்டு எரிச்சி இருந்தானுகள். அவரது உடல் பாதி எரிச்ச மாதிரிக் கிடந்தது. பார்த்த உடனே நானும் பிள்ளைகளும் அறிவுகெட்டுப் போனோம். பிறகு அவர இஞ்சதான் தாட்டம். நானும் எனது பிள்ளைகளும் மாட்டியிருந்தால் இப்போ நாங்களும் உயிரோடு இருந்திருக்க மாட்டம்.'' என கண்களில் நீர் வழிந்தோட தனது உள்ளக் குமுறலை கூறி முடித்தார் அந்தத் தாய்.

இப் படுகொலையில் தனது தாய், சகோதரிகள், சகோதரியின் பிள்ளைகள் என பலரைப் பறிகொடுத்த மற்றுமொரு தாய் அந்த துயரச் சம்பவத்தை இவ்வாறு கூறினார். "விடியச்சாமம் வந்து ஊர வளைச்சி சுடத்தொடங்கினானுகள். எங்களுக்குப் பக்கத்தில எண்ட தாயிட வாடியும் தங்கச்சிட வாடியும் பக்கத்தில பக்கத்தில இருந்தது. வளைச்சி, வளைச்சி வெடிகேட்க நாங்க பயந்துபோனம். என்ன செய்வதெண்டே எங்களுக்குத் தெரியல்ல. எல்லோரும் கடவுளைக் கூப்பிட்டு கத்தினோம், அப்போது திடீரென தங்கச்சி வாடிக்க ஆமிக்காரன் உளுபட்டுத்தானுகள். நான் எனது பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு ஓடினன். தங்கச்சி வாடிக்க உள்பட்ட ஆமிக்காரன் தங்கச்சி, அவளுடைய மூத்தபிள்ளை ஆகியோரை ஏனைய பிள்ளைகளின் கண்முன்னால் கதறக் கதற மானபங்கம் படுத்தினானுகள். பிறகு எல்லோரையும் அந்த வாடிக்குள்ளே போட்டு நெருப்பு வெச்சிக் கொழுத்தியிருந்தானுகள். தங்கச்சியின் இரண்டு வயதுக் குழந்தை ஒன்றையும் மற்ற ஐந்து வயதுக் குழந்தையையும் உயிரோட தூக்கி நெருப்பிலே போட்டதாக ஆட்கள் கூறினார்கள்.

அம்மாட வாடிக்கபோன ஆமிக்காரன் அம்மா, பிள்ளைகள், அண்ணன், அவருடைய பொஞ்சாதி, பிள்ளைகள் அனைவரையும் சுட்டுப்போட்டு, வீட்டுக்குள்ளே போட்டு எரிச்சானுகள் அவர்களின் உடம்பெல்லாம் அரைகுறையாக எரிச்சமாதிரிக் கிடந்தது. நானும், பிள்ளைகளும் சுடச் சுட ஓடினதால தப்பிக்கொண்டம். என்னோட நாலு பேர் மட்டும்தான் தப்பினது. மற்ற எல்லோரையும் அந்த சிங்களப் படுபாவிகள் இரக்கமில்லாமல் கொன்று விட்டார்கள்.'' என்று கூறும்போது அந்தத் தாயின் உடல் நடுங்கியது. ஆண்டுகள் பல கடந்தாலும் அந்தத் தாயின் மனதிலிருந்து அந்தக் கொடூரச் சம்பவம் இன்னும் அகலவில்லை என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது.

தற்போது தோணிதாட்டமடு படுகொலை நடைபெற்று பதினெட்டு ஆண்டுகளைத் தொட்டு நிற்கின்றன. பதினெட்டு ஆண்டுகள் அல்ல எத்தனை எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் சிங்கள வெறியர்களால் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையினை இலகுவில் மறந்துவிட முடியாது. அந்த நினைவாண்டுகள் அவர்களை வந்து தொட்டுச் செல்லும்போது மனங்கள் நெருப்பாகக் கொதிக்கின்றன. கோரச் சம்பவங்கள் கண்முன்னே கொண்டு வரப்படுகின்றன.

தோணிதாட்டமடு இன வெறி ஆட்டத்தின்போது 28 அப்பாவித் தமிழ்மக்கள் சிங்கள இராணுவத்தால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். அவர்களின் கையில் அகப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். அன்று முதல் தமதூரின் உழைப்பு, வாழ்வு அனைத்தையும் விட்டு கையில் எடுத்த பொருட்களுடன் வெளியேறிய மக்கள் வாகரை, கதிரவெளி போன்ற இடங்களில் அகதிகளாக அலைந்தனர். உழைப்பின்றி, கல்வியின்றி அவலவாழ்வு வாழ்ந்தனர்.

இரண்டாயிரத்து இரண்டின் பின் தமது நிலங்களைச் சென்று பார்வையிட்டுவர ஆரம்பித்த மக்கள் தற்போது படிப்படியாகக் குடியேறி மீண்டும் தமது நிலங்களில் நெற்செய்கை மற்றும் சேனைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வைகாசி 27உம் அவர்களின் மனதில் ஏதோ நெஞ்சைப் பிசையும் உணர்வுகளை ஏற்படுத்துவதாகச் சொல்கின்றனர். அப்போது இருந்தது போலவே இப்போது அவர்களை ஏந்தி முகாம்கள் இருப்பதாகவும் அச்சத்துடன் சொல்கின்றனர். ●

**மெதுவாகத் தவண்டு, தவண்டு வந்து பற்றைக்குள்ள இருந்தோம். ஆமிக்காரன் இஞ்ச வந்தானெண்டா எல்லோரையும் கொன்றுவிடுவானுகள். நீ பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஆத்துப் பக்கமா போ, நான் இந்தப் பற்றைக்க கிடந்துவிட்டு ஆமிக்காரன் போனபிறகு வருகிறேன் என்றார். அவர் கூறியதுபோல நான் பிள்ளையளக் கூட்டிக்கொண்டு ஆத்துக் கட்டுப் பக்கம் ஓடினன். கொஞ்ச நேரத்தால பார்த்தம் அவர் கிடந்த இடமெல்லாம் ஆமிக்காரனுகள் நிக்கிறாங்க. பட, படவென வெடி கேட்டுக்கொண்டே இருந்திது.**

- நிர்மலன் -



ஓவியம் : புகழேந்தி



www.eelamview.com

# தமிழர் தாயகத்தைத் துண்டாக்கும் சிங்களக் குடியேற்றங்கள்

ஒரு பிரதேசத்தில் அமைக்கப்படுகின்ற குடியேற்றங்கள் அப்பிரதேசத்தின் தலைநகரை குடியேற்றவாசிகள் ஆதிக்க நிலையில் வைத்திருக்கும் போதுதான் அதிகளவிலான வெற்றியைத் தருகின்ற ஒன்றாக அமையும். குறிப்பாக அப்பிரதேசம் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தின் தலைநகரை குடியேற்றவாசிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் வேண்டும். மாவட்டத்தின் அனைத்து நிர்வாக நிறுவனங்களும் தலைநகரத்தில் மையங்கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும். பிரதேச சபைகளின் அறிமுகத்திற்குப் பின்னர் பிரதேச ரீதியான அதிகாரப் பரவலாக்க நிலை என ஒன்றிருந்தாலும் குடியேற்றங்கள் முழுமையான வலிமை நிலையினைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்டத்தின் தலைநகர் குடியேற்றவாசிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட மாவட்டத்தின் நிர்வாக மையம், பொருளாதார வர்த்தகமையம், அரசியல் மையம் என்பவற்றுக்கு அப்பால் மக்களின் வெளியுலகத் தொடர்புகளும் தலைநகருக்கூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களைப் பொறுத்தவரை அம்பாறை மாவட்ட குடியேற்றங்கள் இந்த அணுகுமுறையைப் பின்பற்றியதாலேயே அதிகளவில் வெற்றியைத் தந்திருந்தன. 1959 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்குப்பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. இப்புதிய மாவட்டத்தினை உருவாக்கியபோது மட்டக்களப்பு தெற்குப் பகுதியில் நிர்வாக மையமாக கல்முனை இருந்தபோதும் கல்முனை தலைநகராக மாறிவிடவில்லை. இதுவிடயத்தில் அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் தலைவர்கள் போதிய அக்கறை எதனையும் செலுத்தவில்லை. தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த தந்தை செல்வா மட்டுமே அக்கறையினைச் செலுத்தியிருந்தார். அவர் கல்முனையை அம்பாறை மாவட்டத்தின் தலைநகராக்கும்படி அரசாங்கத்தை வேண்டிக் கொண்டார். ஆனால் இவரது வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டு குடியேற்றப் பிரதேசமான அம்பாறையில் அம்பாறை மாவட்டத்தின் தலைநகராக மாற்றப்பட்டது. தலைநகருக்கும் அதன்வழி அம்மாவட்டத்திற்கும் சிங்களத் தன்மையைக் கொடுக்கவேண்டும் என்பதற்காக அம்பாறை என்ற பெயர் பின்னர் "திகாமடுல்ல" என மாற்றப்பட்டது. தற்போது திகாமடுல்ல என்ற பெயரால் அம்மாவட்டம் அழைக்கப்படுகின்றபோதும் ஏதோ சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டம் என்ற அர்த்தத்தினைத் தரப்பார்க்கின்றது.

ஆனால் உண்மை அதுவல்ல. சிங்களக் குடியேற்றங்கள் பெருமளவு உருவாக்கப்பட்ட போதும் தமிழ்பேசும் மக்களே அம்மாவட்டத்தின் பெரும்பான்மையாக தற்போதும் இருக்கின்றனர். ஆனால் குடியேற்றங்கள் காரணமாக நிலப்பகுதியைப் பொறுத்தவரை அம்பாறை மாவட்டத்தின் 2/3பங்கு நிலப்பகுதி சிங்கள மக்களுக்குச் சொந்தமாக இருக்கின்றது. மாவட்டத்தின் சனத்தொகையை செயற்கையாக அதிகரித்து விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தலில் வரும் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக மொனராகலை மாவட்டத்துடன் இணைந்திருந்த மகாஓயா, பதியத்தலாவை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பின்னர் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. அண்மைக்காலத்தில் "தெகிவத்த கண்டிய" என்ற பெயரில் புதிய பிரதேச சபையொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பெரும்பான்மையாக தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்றபோதும் அம்பாறை நகரில் இருக்கும் மாவட்ட நிர்வாக அலுவலகங்களில் மருந்துக்குக்கூட தமிழ்மொழியைக் காணமுடியாது.




# திருமலை நகரக் குடியேற்றங்கள்

– மதுசங்கர் –



திருகோணமலை மாவட்டத்தில் குடியேற்றங்களைப் பேரினவாத சக்திகள் உருவாக்கிய போது அவர்களின் அணுகுமுறைகள் வித்தியாசமானவையாக இருந்தன. இக் குடியேற்றங்களைப் பொறுத்தவரை அவர்களுடைய பிரதான இலக்கு தமிழர் தாயகத்தின் நிலத்தொடர்ச்சியை சிதைப்பதாகத்தான் இருந்தது. அதன்வழி தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையின் மைய அம்சத்தினை வலுவிழக்கச்செய்ய அவர்கள் முற்பட்டனர். இதனை நடைமுறைப்படுத்தி திருகோணமலை மாவட்டத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியைத் துண்டிக்கும் வகையிலும் திருகோணமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியைத் துண்டிக்கும் வகையிலும் குடியேற்றங்களை அமைத்தனர். திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் எந்தவகையிலும் நிலரீதியாக ஏனைய பிரதேச மக்களோடு தொடர்புபட முடியாத வகையில் திருகோணமலை மாவட்டத்தை வில்போல வளைத்தும் குடியேற்றங்களை அமைத்தனர். குடியேற்றப் பிரதேசங்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட "சேருவல" தேர்தல் தொகுதி அந்த வகையிலேயே உருவாக்கப்பட்டது. அதன் ஒருமுனை மாவட்டத்தின் வடமுனையில் இருக்கின்றது. மறுமுனை மாவட்டத்தின் தென்முனையில் இருக்கின்றது. வடமுனையில் திருக்கோணமலை மாவட்டத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தையும் பிரிப்பதில் "பதவி சிறிபுர" குடியேற்றத்திட்டம் பங்களிப்புச் செய்கின்றது. இதனை வலுப்படுத்துவதற்காக பதவி சிறிபுர பிரதேச சபையும் உருவாக்கப்பட்டுள்ளது. இப் பிரதேச சபை நிர்வாக விடயங்களிற்கு அநுராதபுர மாவட்டத்துடன் தொடர்புபடுகின்றது. தேர்தல் விடயங்களைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதியாக அமைகின்றது. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தலின் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே இவ்வாறான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதவி சிறிபுர குடியேற்றத்திட்டம் திருகோணமலை மாவட்ட பரப்பிலிருந்து நிலத் தொடர்ச்சியைச் சிதைக்க முனைகின்றது, வெலிஓயாத் திட்டம் முல்லைத்தீவு மாவட்ட பரப்பிலிருந்து நிலத்தொடர்ச்சியைச் சிதைக்க முனைகின்றது. இதனால்தான் வெலிஓயா என்கின்ற மணலாறினை தமிழர் தாயகத்தின் இதயபூமி என தேசியத் தலைவர் வர்ணித்திருக்கின்றார். தென்முனையில் திருகோணமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் இடையிலான நிலத்தொடர்ச்சியைச் சிதைக்க "மகிந்தபுர" குடியேற்றத்திட்டம் பங்களிப்புச் செய்கின்றது.

பேரினவாத சக்திகள் தங்களது உடனடி இலக்கான நிலத்தொடர்ச்சியைச் சிதைக்கும் நடவடிக்கையை நிறைவேற்றிய அதேசமயம் அதற்குச் சமாந்தரமாக நகரக் குடியேற்றங்களிலும் கவனம் செலுத்தினர். இது விடயத்தில் இரட்டைத் தந்திரோபாயம் பின்பற்றப்பட்டது. திருமலை நகரிற்குள் ஊடுருவி திருமலை நகரத்தினை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் வரை குடியேற்றவாசிகளின் நகரத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் கந்தளாய் பிரதேசத்தை ஒரு நகரமாக வளர்த்தெடுப்பது முதலாவது தந்திரோபாயமாக இருந்தது. இன்று கந்தளாய் திருகோணமலை நகரத்திற்குச் சமமான வகையில் ஒரு நகரமாக எழுச்சியடைந்துள்ளது. திருகோணமலை மாவட்டத்தின் சிங்கள அரசியலின் மையமாகவும் கந்தளாய் விளங்குகின்றது. குடியேற்றப் பிரதேசங்களின் மைய இடமாகவும் சிங்களப் பிரதேசங்களுடன் தொடர்புபடக்கூடிய பாதுகாப்பான இடமாகவும் அதேவேளை ஆரம்பகால குடியேற்றப் பிரதேசமாகவும் கந்தளாய் விளங்கியமையால் சிங்களச் செயற்பாட்டின் மையமாக கந்தளாய் தெரிவுசெய்யப்பட்டது. திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்படுகின்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் கந்தளாயைச் சேர்ந்தவர்களே ஆவர். தற்போதைய ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினரான ஜெயந்த விஜயசேகர என்பவரும் கந்தளாயைச் சேர்ந்தவரே ஆவார்.

இரண்டாவது தந்திரோபாயம் திருகோணமலை நகருக்குள் ஊடுருவி கைப்பற்றுதல் ஆகும். நகரைப் பொறுத்தவரை ஊடுருவலுக்கான களங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்ததனால் ஏனைய இடங்களைப் போல ஒரு வழியினால் மட்டும் ஊடுருவல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை. இதனால் பலவழிகளினாலும் இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு வகையில் பல்வேறு குடியேற்ற அணுகுமுறைகளை பரீட்சிக்கும் களமாக திருகோணமலை நகரம் இருந்தது எனலாம். சட்டரீதியான குடியேற்றங்கள், சட்ட விரோதக் குடியேற்றங்கள் வியாபாரக் குடியேற்றங்கள், மீனவர் குடியேற்றங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், பௌத்த மதம் மூலமான குடியேற்றங்கள் என பலமுறைகளும் இங்கு பரீட்சிக்கப்பட்டுள்ளன. அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள புத்தர் சிலை விவகாரம் இந்தவகைக் குடியேற்றங்களில் ஒன்றேயாகும்.

இவை பற்றி அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.....

**பேரினவாத சக்திகள் தங்களது உடனடி இலக்கான நிலத் தொடர்ச்சியைச் சிதைக்கும் நடவடிக்கையை நிறைவேற்றிய அதேசமயம் அதற்குச் சமாந்தரமாக நகரக் குடியேற்றங்களிலும் கவனம் செலுத்தினர். இதுவிடயத்தில் இரட்டைத் தந்திரோபாயம் பின்பற்றப்பட்டது. திருமலை நகரிற்குள் ஊடுருவி திருமலை நகரத்தினை தங்களின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரும்வரை குடியேற்றவாசிகளின் நகரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கந்தளாய் பிரதேசத்தை ஒரு நகரமாக வளர்த்தெடுப்பது முதலாவது தந்திரோபாயமாக இருந்தது. இன்று கந்தளாய் திருகோணமலை நகரத்திற்குச் சமமான வகையில் ஒரு நகரமாக எழுச்சியடைந்துள்ளது. திருகோணமலை மாவட்டத்தின் சிங்கள அரசியலின் மையமாகவும் கந்தளாய் விளங்குகின்றது.**





www.eelamview.com

# கறுப்பு நிலாவின் கடைசிக் கடிதம்

அந்தக் கடிதம் எனக்கு படிக்கக் கிடைத்த போது அவர்கள் இலக்கைத் தகர்த்தெறிந்து காவிய மாகி சில அண்டுகள் கடந்திருந்தன. எனது வாழ் வில் எத்தனையோ விதமான கடிதங்களை சந்தித் திருக்கின்றேன். ஆனால் கறுப்புநிலாவின் கடைசிக் கடிதத்துக்கு நிகர் எதுவுமில்லை. அந்தக் கடிதத்தில் பொதிந்துள்ள உணர்வுகளை பகிரப்படாத பக்கத் தில் பகிர்ந்துகொள்வது எப்படி?

அவர் தன்னுடைய பயிற்சி ஆசிரியருக்கு அக்கடிதத்தை எழுதியிருந்தார். முத்து முத்தான எழுத்துக்களால் அக்கடிதம் முழுமை பெற்றிருந்தது. முழுமையான கடிதத்தின் உணர்வுகளில் சிறுதுளியே இங்கு முகம் காட்டுகின்றது.



**அன்பின் ஆசிரியருக்கு! உங்களுக்கு இந்தக் கடிதம் கிடைக்கும்போது நாங்கள் இலக்கைத் தகர்த்தெறிந்து வீரச்சாவடைந்திருப்போம். இலக்கைத் தகர்ப்பதற்கான நாட்கள் நெருங்குகின்ற மகிழ்ச்சியோடு இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.**

**பயிற்சி நாட்களில் நடந்த சம்பவங்களெல்லாம் என் மனதில் பசுமையாய் பதிந்துபோயுள்ளன. உங்களின் அரவணைப்பும் கண்டிப்பும் கலந்த பயிற்சியும் எனக்கு வியப்பூட்டுகின்றன. எனது அம்மா, அப்பாவினது ஒருங்கிணைந்த அன்பின் பிரதிபலிப்பை உங்களில் நான் கண்டேன்.**

**நாங்கள் பயிற்சியெடுத்த பனைவெளியும், மணற்காடும், மணற்காட்டில் கிளைவிரித்திருந்த மரங்களும் நினைவில் நிழலாடுகின்றன. பயிற்சி நேரத்தில் ஆசிரியருக்கே உரித் தான நிலையிலும் ஏனைய நேரங்களில் எங்களின் உற்ற நண்பனாய் சகோதரனாய் உங்களின் செயற்பாடு இருந்தது.**

**நீங்களும் கரும்புலியாகப் போகவேண்டுமென அனுமதிகேட்டுத் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளதை அன்றொருநாள் எனக்குச் சொல்லியிருந்தீர்கள். அப்போது நான் எந்தக் கருத்தையும் உங்களுக்குச் சொல்லவில்லை. ஆனால் இப்போது என் கருத்தை உங்களுக்கு எழுதுகிறேன். நீங்கள் அவசரப்படக் கூடாது. எமது மண் முழுமையாக மீட்கப்படும்வரை கரும்புலிகளின் பயிற்சி ஆசிரியராக நீங்கள் இருந்து பணிசெய்யவேண்டும் என்பதே என் விருப்பம்.**

**எமது தலைவர் எமது மண்ணை மீட்டெடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு முழுமையாக உண்டு. அவருக்குப் பக்கபலமாக இருந்து உங்களின் பணியைத் தொடருங்கள்.**

இப்படிப் பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார் அந்தக் கரும்புலி வீரர். நான் அந்தக் கடிதத்தை பலமுறை படித்தேன். ஆணித்தரமான அந்த வரிகள் என்மனதில் ஆழப் பதிந்துபோயின.

## பகிரப்படாத பக்கங்கள்

அவர்கள் பயிற்சியெடுத்த காலம், அந்தக் காலத்தில் போராளிகளுக்கு வழங்கப்பட்ட உணவு நிலையும் அவர்களின் மனவுறுதியும் என்னுள் சொல்லாத செய்திகளாய் வியாபித்தன.

அந்தக் கறுப்பு நிலாக்கள் கிரவல் வீதிகள், மண் ஒழுங்கைகள் எங்கும் நடந்து திரிந்தவர்கள். மக்களோடு ஆழமாய்ப் பழகி அவர்களின் மனங்களில் அழியாத இடம் பிடித்தவர்கள். மக்களுக்கு போராளிகளாக மட்டும் முகம் காட்டிய அந்தக் கறுப்பு நிலாக்கள் முகம் தெரியாத கறுப்பு நிலாக்களாய் காவியமாகி விட்டார்கள்.

நானும் முகம் தெரியாத அந்தக் கறுப்பு நிலாக்களின் முகத்தை அவர்களின் கடிதத்தில் கண்டேன். இப்படித் தங்களை வெளிக்காட்டாமல் மக்களின் விடுதலைக்காய் வீரகாவியமானவர்களின் தியாகத்தை விபரிக்க வார்த்தைகளேயில்லை.

**ஆ.ந.பொற்கோ**

# சிதைவு

அம்மா எனக்கு இனி கால் முளைக்குமே....? சின்னவன் இதைத்தான் அடிக்கடி கேட்டான். நாகதேவியும் என்ன செய்வாள்? ஓம் பிள்ளைக்கு கொஞ்ச நாளில கால் முளைச்சிடும். சின்னவனும் காயப்பட்டு இரண்டு பௌர்ணமி வந்துபோனது. காயப்பட்ட நாளில் இருந்து சின்னவனும் நாகதேவியும் கண்ணீரும் சோறும்தான். சின்னவன் புண் வேதனையில் கத்துவான், குளறுவான் வேதனையைத் தாங்கமுடியாத சின்னப்பெடியன்.

நாகதேவிக்கோ பிள்ளைக்கு பிஞ்சு வயதிலேயே இரண்டு கால்களும் கிள்ளப்பட்டு விட்டதே! இனி பிள்ளையின் எதிர்காலம் என்ன? என்ற எதிர்கால ஏக்கம். பள்ளிக்கூடம் போனவன் வருவான், பக்கத்து வயல் காட்டில் ஓடி விளையாடுவான், பட்டம் ஏற்றுவான், மாபிள் அடிப்பான். பக்கத்து தோட்டத்து தென்னம் குரும்பையில் தேர் செய்து ஊர்த்தெருவெங்கும் விளையாடுவான். இனி என்ன செய்வான்? அவனுக்குத்தானே இரண்டு கால்களும் சிதைந்துவிட்டன. அன்றாட கடமைக்கே மற்றவரின் கரத்தினைத்தான் உதவியாகப் பெறவேணும். அம்மா எனக்கு கால் முளைச்சா... கோபு ஆட்களோட சேர்ந்து விளையாடலாம் என்னம்மா...? நாகதேவிக்கு ஒருமுறை ஓவென ஒப்பாரி வைக்கவேணும் போலிருந்தது. அவனோடு சேர்ந்து விளையாடின தோழர் இன்னும் அறியவில்லை. சாவை அறியாத வயதில் என்ன செய்வான்.

சுதந்திரபுரத்தில் கொட்டிய குண்டின் அதிர்வுகள் அடங்கினாலும்... இந்த வடுக்கள் என்று சுகமாகும்..? எமக்கு என்று தேசம் வந்தால் மனக்காயங்கள் ஆறும். மருந்து கட்டும் நேரங்களில் கத்துவான், குளறுவான், வேதனையைத் தாங்காது தவிப்பான். மருந்து கட்டி முடிந்ததும் சிரித்து கலகலப்பாக இருப்பான். இப்போ கால் புண்ணும் ஆறிவரத் தொடங்கிவிட, காயம் மாற தனது கால்கள் வளரும், தான் ஓடி விளையாடலாம், பள்ளிக்கூடம் போகலாம், கோயிலுக்குப் போகலாம் என்று என்னென்னவோ கனவுகளைச் சுமந்தான். சின்னவனுக்கும் ஒன்பது வயது முடியப்போகிறது. கலகலத்த பேச்சினால் அனைவரையும் கவர்ந்திழுப்பான். மனவேதனை நிறைந்த மருத்துவமனையாக இருந்தது இவனின் சிரிப்பும், கலகலப்பும் அனைவரையும் ஓரளவு மகிழ்ச்சிப்படுத்தியது. ஒவ்வொரு தாதியையும் சின்னவன் ஒவ்வொரு பெயரால் அழைப்பான். குண்டு நேர்ஸ், மல்லிகா நேர்ஸ், கண்ணாடி அக்கா என்று வைத்தியர்கள் தாதியர்கள் அனைவருடனும் ஒரு நெருக்கமான உறவு வளர்ந்தது.

பழகுவோரிடம் எல்லாம் எனக்கு கால் முளைக்குமா..? என்றுதான் கேட்பான். எல்லோரும் ஒரே பதிலைத்தான் சொன்னார்கள். சின்னவன் தனக்கு கால் முளைக்கும் என்ற கற்பனையைக் கலையவிட சந்தர்ப்பம் இருக்கவில்லை. கால் முளைக்கும் தான் மறுபடியும் ஓடி விளையாடலாம் என்ற எண்ணங்கள் வலுப்பெற்றன. முழங்காலோடும் சற்று மேலாயுமாக சிதைந்திருக்கிற கால்ளைப் பார்த்து முளைக்குதா என்று ஆராய்வான். அப்போது எல்லாம் நாகதேவிக்கு நெஞ்சில் நெருப்பு பிடிக்கும். இருந்தாலும் வெளிக்காட்டிக்கொள்ள மாட்டாள். தனக்குள்ளேயே குமுறுவாள்.

*பழகுவோரிடம் எல்லாம் எனக்கு கால் முளைக்குமா..? என்றுதான் கேட்பான். எல்லோரும் ஒரே பதிலைத்தான் சொன்னார்கள். சின்னவன் தனக்கு கால் முளைக்கும் என்ற கற்பனையைக் கலையவிட சந்தர்ப்பம் இருக்கவில்லை. கால் முளைக்கும் தான் மறுபடியும் ஓடி விளையாடலாம் என்ற எண்ணங்கள் வலுப்பெற்றன. முழங்காலோடும் சற்று மேலாயுமாக சிதைந்திருக்கிற கால்ளைப் பார்த்து முளைக்குதா என்று ஆராய்வான். அப்போது எல்லாம் நாகதேவிக்கு நெஞ்சில் நெருப்பு பிடிக்கும் இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டாள். தனக்குள்ளேயே குமுறுவாள்.*

சின்னவனிற்கு கால் காயம் ஆறி, வீடுசெல்லும் நாளும் வந்தது. வைத்தியர்கள், தாதிகள் என்று எல்லோருக்கும் சிரித்துப் போகப்போற சந்தோசத்தை தெரியப்படுத்தினான். அவனுக்காக இரண்டு செயற்கைக் கால்கள் ஊன்றுகோல் எல்லாம் கொண்டுவந்தபோது, அவன் இடிந்தே விட்டான். அழுதான் செயற்கைக் கால்கள் வேண்டாம் என்று அடம்பிடித்தான். யாராலும் அவன் அழுகையை நிறுத்த முடியவில்லை. விம்மி விம்மி அழுதான். ஏன் அழுகிறான்



ஏன் கால் வேண்டாம் என்கிறான் என்று அதிர்ந்து போனார்கள். கலகலப்பில் எல்லோரையும் கவர்ந்தவன் கண்ணீரால் கரைந்தான்.

எனக்கு இந்தக்கால் வேண்டாம். அம்மா நீ சொன்னனி எல்லோ எனக்கு கால் முளைக்குமெண்டு... விக்கினான். மீண்டும் தேம்பி அழுதான். டொக்டர் நீங்களும் சொன்னனீங்களெல்லோ... ஒன்றன்பின் ஒன்றாக கண்ணீர் விழுந்தது. எனக்கு கால் முளைச்சா இந்தக் காலின்ர ஓட்டையிற்கபோனா என்னென்று எடுக்கிறது. இதை எண்ணித்தான் அழுது வடிக்கிறான். சின்னவா! உனக்கு எப்போதும் கால் முளைக்காதடா... நீ வாழ்நாள் முழுவதும் கால் இல்லாமல்தான் வாழுவாய் என்ற பதிலை என்னென்று சொல்வது..? அந்தப் பதிலை அவன் ஏற்பானா..? ஏற்க முடியாததுதான். ஏற்றுத்தான் ஆகவேண்டும். பிஞ்சு அதை எப்படித் தாங்குவான்.

சின்னவன் செயற்கைக்காலை கழட்டி வீசிவிட்டு தனது கால் முளைக்கிறதா எனப் பார்க்கிறான், மருத்துவனையில் எல்லோருமே ஓ என மனத்திற்குள் ஒப்பாரி வைக்கிறார்கள். நாகதேவி முகத்தினை கைகளினால் பொத்தி குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்...



www.eelamview.com

# காலப் பாழில்...

(03ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றம் முக்கியமா? சோவியத் பேரரசு வீழ்ந்தது முக்கியமா" என பதிலடி அவர் கொடுத்தார். ஆனால் எல்லாவற்றிற்குமான பதில் 9/11இல் கிடைத்தது என்கிறார் "ஆட்சியாளருக்கு விதிவிலக்கு" என்கிற பரபரப்பான நூலை எழுதிய ஏமி குட்மான். இப்பொழுது ஜே.வி.பியும் பௌத்த பிக்குகளும் எமது உண்மையான பலம் எதுவென அம்மையாருக்கு தெரியவில்லை, இனிமேல் ஒரு போதும் அம்மையாரை நிம்மதியாக இருக்கவிடோம் என பறையறிவிக்கின்றனர். சிங்கள அரசியலின் இன்னொரு 9/11 இனிமேற்தான் நிகழ உள்ளதா? 2500 வருடகால பௌத்த பேரினவாதத்தை ஒரு நாளில் இல்லாமற் செய்துவிட முடியுமா? இது முதலாவது சவால்.

இரண்டாவது சவால் ஜே.வி.பியினால் உருவாகப் போவது. அது வெறும் வெற்று வேட்டா? அல்லது இன்னொரு 1989இன் மீள் நிகழ்வா? காலம் பதில் சொல்லும். ஆனால் பண்டா குடும்பத்தின் மட்டுமல்ல சிங்கள அரசியலாளர்களிலே நிலவுடமையாளர், பெருவணிகர், மேட்டுக்குடி உயர் கல்வியாளர் ஆகியோரினதும் குடும்ப அரசியலின் அந்திமக்காலம் நெருங்குவதாக எதிர்வு கூறப்படுகின்றது. "சேனநாயக்க, பண்டாரநாயக்க, ஜெயவர்த்தனா ஆகிய குடும்பத்தின் எஞ்சியுள்ள வால்கள், இவ் வால்களில் தொங்கிநிற்கும் கதிர்காமர் சொக்சி போன்ற அநீதிகளை நீதியாக்கம் செய்யும் சட்டவல்லுனர்கள் எல்லோருமே பூமியில் அருகிவரும் உயிரினங்கள்" என்கிறார் கலாநிதி உஸ்வத்தை ஆராச்சி. (08.06.2005 ஜலண்ட்) ஆராச்சி தனது ஆராய்ச்சிக் கட்டுரைக்கிட்ட தலைப்பு அதிகார கைமாற்றம். (முழு இலங்கையிலுமே விரைவில் நடக்கப்போகின்ற புரட்சிகர அதிகார வேறாக்கம் பற்றி ஆராச்சி அறியார்) சிங்களத்தில் நடக்கப்போவது இன்னொரு வகுப்பினருக்கான அதிகார மாற்றம் என்பதே அதன் பொருள். இத்தகைய அதிகாரக் கைமாற்றம் இலகுவில் நடந்துவிடுமா? அது குருதிக் களரியை ஏற்படுத்துமா? விரைவில் தெரிந்துவிடும்.

மூன்றாவது சவால் அடிபட்ட பாம்பாகப் பதுங்கியிருக்கும் ஐ.தே.கட்சியால் வரக்கூடியது. "எமது அரசாங்கத்தினைக் கவிழ்த்ததின் சாபம்தான் இப்போது நடப்பது" (ராஜித சேனரத்தின - வீரகேசரி 19.06.2005) என மகிழ்வதோடு நிற்பார்களா? கவிழ்ப்பார்களா? இத்தகைய முனைப்பு அவர்களிடம் உள்ளதா? எனினும் சிங்கள அரசியலில் எதுவும் எந்த வேளையும் நடக்குமென்பதால் எதிர்வுகூறல் அவசியமற்றதும் அப்பத்தமானதாகும். இப்பொழுது முதன்மை பெறும் சொல்லாடல் **மெய்மையின் வேளை (MOMENT OF TRUTH)** இது தமிழ் மக்களுக்கானது. ஆனால் இதனையும் "நாக்கில் நறும் தேனும் நெஞ்சில் நீக்கரிய நஞ்சும்" கொண்ட சந்திரிக்கா மலினப்படுத்தி மதிப்பிறக்கி தன்னை தியாகியாக்க முயல்கிறார். வரலாற்று உண்மையால் பொறுக்கமுடியாத பாதகம் இது. இதற்கான மிகவுச்ச தண்டனையை அவர் அடையாமல் தப்பவேண்டுமாயின் றொபேட் மக்னமாரா கற்ற பாடத்தினை அவர் உடன் கற்கவேண்டும். வியட்னாமில் நடைபெற்ற மிகக்கொடிய குண்டுவீச்சுக்கும் பொய்மைப் பரப்புரைகளுக்கும் பெரிதும் பொறுப்பாகவிருந்த முன்னால் பாதுகாப்புச் செயலர் (1961 - 1968) தனது இறுதி நாட்களில் மனமுடைந்து கண்ணீர் மல்கி, கலங்கி, கழுவாய் தேடி உண்மையை உரைத்தார். இத்தகைய மெய்மையின் வேளைக்கு எப்போது சிங்களத் தலைவர்கள் செல்வார்கள்? மிகவிரைவில் என்பது காலத்தின் பதில். எனவே அதுவரை எமக்கு

| | | |
|---|---|---|
| மனிதர்கள் | - | மதங்கள் |
| அரசுகள் | - | அமைப்புக்கள் |
| உறவுகள் | - | உரிமைகள் |

**காலப்பாழில் நழுவிய கணங்கள்**
**நாளையின் கிளையில் அவிழும் அரும்புகள்....**
**எல்லாவற்றையும் ஒரு தட்டில் பிசைந்துண்ண....**
இன்னொரு பாய்ச்சலுக்கு இப்பொழுது பதுங்க.....
சின்னதோர் இடைவேளை வேண்டும்.....
(இரண்டாவது கர்ப்பம் - கவிஞர் வைரமுத்து)

எனவே அன்பர்களே,
எல்லா ஆறுகளும் கடலை நோக்கி -
எல்லா முடிவுகளும் பிரபாகரன் நோக்கி -
என்று கூறி நிற்கின்றோம். ●

## ஆடுகிற மாட்டை ஆடியும்...
## பாடுகிற மாட்டை பாடியும்...

செந்நோழன்



திலீபன் வாசகம்
மீண்டுமொரு முறை
ஓங்கி ஒலிக்கட்டும்
மக்கள் புரட்சி
மண்ணில் வெடித்தாய்
விண்ணே அதிரட்டும்

மாவோவும் மண்டேலாவும்
வெற்றிக்கொடி நட்டதும்
வியட்னாமியத் தேசம்
விடுதலை பெற்றதும்
யாரேலே என்பதற்கு
வரலாறே சான்று

அதிகமாய் அடைந்தால்
காற்றுக்கூட வெடித்து
வெளியே வரும்
விடுதலை வேட்கை
அதற்கே உண்டெனில்
மானிடர்க்கென்ன
மடிந்தா போய்விடும்

கோழிக் குஞ்சைக்
குதற வேண்டாமென
வாயாலே சொல்லி
வானப் பருந்தென்ன
கேட்கவா போகிறது
கூட்டில் அடையுங்கள்
கோழிக் குஞ்சை - அன்றேல்
வேட்டையாடுங்கள்
வானப் பருந்தை.
எது பொருத்தம்
முடிவு செய்யுங்கள்

ஆடுகிற மாட்டை
ஆடிக் கறக்கவும்
பாடுகிற மாட்டைப்
பாடிக் கறக்கவும் - நாங்கள்
பழகிக் கொண்டவர்கள்
மீண்டும்
முள்ளால் முள்ளெடுக்க
முடிவு செய்துவிட்டோம்.

புறம் போக்குகளிடம் போய்
நாங்கள் அறம் கொண்டது
அறியாமையால் அல்ல
எங்கள் நிறம் தெரிவதற்காய்
எதுவும் தருவார்கள் என்று
எதிர் பார்த்தல்ல
எதுவுமே தரமாட்டார்கள் -
என்று
எல்லோரும் புரிவதற்காய்
அமைதிக் கிடைஞ்சல்
யாரென்று சொல்வதற்காய்.

அத்தனையும்
செய்து முடித்தோம்
இனி களைத்து விட்டோம்.
அலுத்து விட்டோம்
பயந்து விட்டோம்
பதுங்கி விட்டோம்
நிமிர மாட்டோமெனும்
வியாக்கியானங்களிற்கு
விடை கொடுக்கப்
போகிறோம்.
ஆகவேதான்
திலீபன் வாசகம்
மீண்டுமொரு முறை
ஓங்கி ஒலிக்கட்டும்

மக்கள் படைக்கு முன்னே
எங்காளம் இட்டவர் எவரும்
தப்பிப் பிழைத்ததாய்
தடயம் ஏதுமில்லை

மலைகளாய் நீங்கள்
எழுந்த போதுதானே
அலைகளாய் இங்கே
களங்கள் விரிந்தன
எல்லைப் படைகளாய்
நீங்கள் விரைந்தபோதுதானே
எல்லைகள் நோக்கி
நாங்கள் எகிறிக் குதித்தோம்.

நீங்கள் தந்த
அந்த வல்லமைதானே
ஆனையிறவு கடந்து
நாவற்குழி வரை
எம்மை
நடைபோட வைத்தது.

கனல் கக்கும்
கருவி தாங்யோரை
கல்கொண்டு தாக்கும்
உரம் கொண்ட
உள்ளங்களே
தரம் கெட்ட வாழ்வைத்
தந்தோர்
நிலம் விட்டுப்போகும் காலம்

மறைக்கும் சங்கடம்
வேண்டவே வேண்டாம்.
பிரபாகரத் தலைவனுக்குப்
பின்னால் திரண்டவர்
எவராயிருப்பினும்
வரலாற்றில் அவர்கள்
வாழ்வொன்று இருக்கிறது.

குண்டு மழை
பொழியும் நேரம்
பயங்கொள்ளாமலும்
பூமழை பொழிகிறதே என
மயங்காமலும்
விடுதலை தேடிடும்
முதல்வனைப் பெற்றோமெனும்
பெருமையோடும்
பெரு நம்பிக்கையோடும்,
போர்க்கொடி தூக்குங்கள்.

செம்மணி வெளிக்குள்
எம்மைப் புதைத்தவர்க்கு
வல்லை வெளியில்
ஒரு சுடலை திறப்போம்
நாற்பதினாயிரம் பேரும்
நாறிக்கிடக்காமல்
எரியவேண்டும்.

ஒட்டுசுட்டானில் நாங்கள்
தட்டியபோது
காட்டிற்கிடையாலே
தப்பிப் பிழைத்தவர்கள்
யாழ்ப்பாணத் தெருவால் ஓடி
கடலிடம் அல்லவா
புகலிடம் தேடுவர்
அதிகாரம் உள்ளவர்கள்
கப்பலேறித் தப்பிக்கொள்ள
ஐயோ பாவம்
அப்பாவிச் சிப்பாய்கள்
கப்பலேறித் தப்புவோரும்

நெருங்கிக் கிடக்கிறது.
"பொங்கு தமிழால்"
போகச் சொல்லி விட்டுப்
பொறுத்திருந்து பார்த்தோம்
புரியவில்லை அவர்களிற்கு
அடியைப் போல் அண்ணன்
தம்பி உதவான் எனும்
பழமொழியாவது புரியட்டும்.
எழுக நீங்களும்....
கை உயர்த்தி கோசம்
எழுப்பவல்ல
கல் எறிந்து சூடு வாங்கவல்ல
பகை எரித்துப் பாடை ஏற்ற
நிலம் பிடித்து வாகை சூட

தலைவன்
போர்க்கலை வித்தைகள்
இம்முறை புதிதாய் இருக்கும்
சென்றோம் வென்றோம்
எனும் செய்திகளே செவிகளில்
கேட்டுக் கொண்டிருக்கும்.
இதுவரை நடந்த போரில்
ஒரு முறையாவது
நானும் நடந்தேன் என
நெஞ்சு நிமிர்த்திச்
சொல்லவில்லையெனில்
நாளைய சந்ததி உமை
நாயிலும் கேவலமாய்
நோக்கும் நிலைவரும்.
பார்க்கும் இடமெங்கும்
போர்வடு தாங்கியோர்
போய்வர
போர்த்தது மூடியுமை

கடற்புலிகள் கண்ணில் பட்டால்
சுக்குநூறு என்பதையும்
சொல்லி வைக்க
விரும்புகிறோம்.

திருமலைக்கு மேற்காலையும்
அம்பாறைக்கு அங்காலையும்
வேலிபோடும் வேலைக்காய்
நாங்கள் வெளிக்கிடப்
போகிறோம்.

பலாலிப் படைத் தளத்தைக்
கைகளால் எட்டித் தட்டிவிட்டு
தப்பியோடிச் செல்வதற்கு
அம்பாறைப் படைகளிற்கு
அவகாசம் கொடுப்போம்.

காலம் பார்த்துக்
காய் நகர்த்தும் தலைவன்
இத்தனை நாளும்
இதற்காகவா பொறுத்தான்
என்று
எல்லோரும் வியக்கும் காலம்
விரைவில் வருகிறது.

சமாதானம் தூவிய
தூசிப் படிமங்களைத்
துடைத் தெறிந்துவிட்டு
மீண்டுமொரு முறை
கண்களில்
கனல் ஏற்றுங்கள்
மின்னலாய் இடியாய்
வெடியாய்ப் புறப்படுங்கள்
மீதி எல்லைகளையும்
மீட்டு முடிப்போம்.





www.eelamview.com

# சுதந்திரபுரம்: நினைவில் நிழலாடும் கோரம்

**"என்ர பிள்ளையள் நாலையும் பள்ளிக்கூடத்தில வசதிக் கட்டணக் காசு கட்டயில்ல எண்டதுக்காக முதல் நாள் வீட்ட திருப்பி விட்டினம். அவைக்கு குடுத்தனுப்பிறதுக்கு என்னட்ட காசிருக்கேல்ல. அதால நானும் மனுசியும் விடிய நேரத்தோட எழும்பி கூலி வேலைக்குப் போட்டம். தோட்டத்தில வேலைசெய்து வேண்டுற சம்பளத்தை மிச்சம் பிடிச்சுப் பிள்ளையள அடுத்த நாள் பள்ளிக்கு அனுப்பவேணும் என்டு நினைச்சு வேலை செய்துகொண்டிருந்தம். . . .**

**— ஈசன் —**

தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கி அடிமை இனமாக வைத்திருக்கவேண்டும் என்ற நோக்கில் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் மேற்கொண்டுவந்த படுகொலைகள் தமிழ்மக்களின் மனதில் அழியாத வடுவாக பதிந்திருக்கிறது.

சிங்கள ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் தமிழ்மக்கள் மீது இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டிருந்தார்கள். இந்தப் படுகொலைகள் இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் ஆட்கடத்தல் மற்றும் வெளிப்படையான படுகொலைகள் என்றும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு அப்பால் உள்ள பகுதிகளில் விமானக் குண்டுவீச்சு எறிகணைத் தாக்குதல்கள் மூலமும் மக்களை அழிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

தமிழ்மக்கள் என்ற ஒரே காரணத்திற்காக பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்ற வேறுபாடில்லாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் சிங்கள இனவாத அரசினாலும் அதன் கூலிப்படைகளாலும் கொன்று குவிக்கப்பட்டனர். இப்பேரவலம் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளையும் தட்டியிருந்தது.

இத்தகைய படுகொலைச் சம்பவங்களின் தாக்கத்தில் இருந்து மக்கள் இன்னும் விடுபடவில்லை. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மக்களும் பாதிப்பின் சுமைகளைத் தங்கள் மனங்களில் சுமந்துகொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்களை வெற்றிகொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் எல்லாம் தோல்வியின் வெளிப்பாட்டை அப்பாவி மக்களைப் படுகொலை செய்வதன் மூலம் தீர்த்துக்கொள்கிறார்கள். சிங்களப் படைகளும் ஆட்சியாளர்களும் தமிழ்மக்களின் உயிர்களைப் பெறுமானமில்லாதவையாக கருதுகிறார்கள். அதனால்தான் அவர்கள் ஜீரணிக்கமுடியாத பெரும் படுகொலைகளைச் செய்கிறார்கள்.

இப்படித்தான் 1998ஆம் ஆண்டு யூன்மாதம் 10ஆம் திகதி யுத்தகளத்தில் இருந்து பலபத்து மைல்கள் தொலைவில் பரந்தன் முல்லைச்சாலையில் உடையார்கட்டுக்கு அடுத்ததாக அமைந்திருக்கும் சுதந்திரபுரம் கிராமத்தின் மீது காலை ஒன்பது மணிக்கு சிறிலங்கா விமானப்படைகளின் கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் கண்மூடித்தனமான குண்டுவீச்சை நடத்தின. சமநேரத்தில் ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்தும் கரிப்பட்டமுறிப்பு நெடுங்கேணிப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படைகளின் தளத்தில் இருந்தும் சுதந்திரபுரத்தில் இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்பு நோக்கி எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 25ற்கும் அதிகமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். ஒரு படைத்தளத்தை எதிரிப்படைகள் நன்கு திட்டமிட்டுத் தாக்குவதுபோல இடம்பெயர்ந்த மக்கள் குடியிருந்த அந்தக் கிராமத்தின் மீது சிங்களப் படைகள் வான் வழியாகவும், தரைவழியாகவும் சமநேரத்தில் தாக்குதலை நடத்தி ஏதுமறியாது உயிருக்கு பாதுகாப்புத் தேடிவந்திருந்த மக்களைக் கொன்று குவித்து அந்தக் கிராமத்தையே இரத்த வெள்ளத்தில் உறையவைத்தது.

அந்தச் சம்பவம் நிகழ்ந்து இன்று ஏழு வருடங்களைக் கடந்துவிட்டது. ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் மீளமுடியாதவர்களாகவே இருக்கிறார்கள். சிங்களப் படைகளின் திட்டமிட்ட தாக்குதலினால் தனது நான்கு பிள்ளைகளைப் பறிகொடுத்த நாற்பது வயதுடைய ராசலிங்கம் என்ற தந்தை அன்றைய சம்பவம் பற்றி இப்படிக் கூறினார்.

*"என்ர பிள்ளையள் நாலையும் பள்ளிக்கூடத்தில வசதிக் கட்டணக் காசு கட்டயில்ல எண்டதுக்காக முதல் நாள் வீட்ட திருப்பி விட்டினம். அவைக்கு குடுத்தனுப்பிறதுக்கு என்னட்ட காசிருக்கேல்ல. அதால நானும் மனுசியும் விடிய நேரத்தோட எழும்பி கூலி வேலைக்குப் போட்டம். தோட்டத்தில வேலைசெய்து வேண்டுற சம்பளத்தை மிச்சம் பிடிச்சுப் பிள்ளையள அடுத்த நாள் பள்ளிக்கு அனுப்பவேணும் எண்டு நினைச்சு வேலை செய்துகொண்டிருந்தம்.*

*"அப்பதான் நெத்திக்கு வெய்யில் படத்தொடங்கி இருக்கவேணும். வானத்தில கிபீர் பெரிசா இரைஞ்சபடி கீழ்நோக்கி வந்துகொண்டிருந்தது. அவன் குத்தி எழும்புறதுக்கிடையில எங்கட வீட்டு முன்பக்கமாகத்தான் குண்டு விழுந்து வெடிச்சு சத்தம் கேட்டது.*

*"அந்தச் சத்தத்தோட நானும் மனுசியும் வீட்டில இருந்த பிள்ளையளிட்ட ஓடிவந்தம். மூன்றாவது முறையும் அவன் குண்டு போட்டுட்டான். அதுவும் எங்கட வீட்டுப்பக்கம்தான் வெடிச்சது. அந்த வெடியோட தலைக்கு மேலால செல்லுகளும் வந்துவிழ வெளிக்கிட்டது. எந்தப் பக்கத்தால செல்வருகுது எண்டே தெரியேல்ல. எல்லாப் பக்கத்தாலையும் கூவிக்கொண்டுவந்து விழுந்து வெடிச்சது.*

*"நான் ஒண்டையும் பாக்கேல்ல. விழுந்து கிடக்கிறதும் எழும்பி ஓடுறதுமாக எங்கட வீட்டுக்கு கிட்டவா வந்திட்டன். எங்கட காணிக்குள்ள புகைமண்டலமாய்த்தான் தெரிஞ்சது. எனக்கு ஒரே பயமாய் இருந்தது.*

*"காணிக்குள்ள கால்வைக்கப் பயமாய் இருந்தது. உள்ளுக்கோ உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கிட்டுது. என்ர வீடு, வீட்டுக்கு முன்னுக்கிருந்த மாமரம் எல்லாம் தரைமட்டமாய் போய்க் கிடந்தது. ஒரு பிள்ளையையும் காணேல்ல. அனுங்கல் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.*

*"மாமரக் கொப்புகளுக்குக் கீழே காயப்பட்டு இரத்த வெள்ளத்தில என்ர மூண்டு பிள்ளையளும் கிடந்தினம். அதுகள் கிடந்த கோலத்தைப் பார்க்க மயக்கம் வரும்போல கிடந்தது.*

*"மூத்தமகன் றமேஸ்குமார் மட்டும் உணர்விழந்துபோய் "என்ர தங்கச்சியக் காணேல்ல..." என்று அனுங்கிக்கொண்டு கால் உடைந்தபடியும் உடம்பெல்லாம் காயப்பட்டுப்போயும் கிடந்தான். அந்தப் பிள்ளையைத் தூக்கிக்கொண்டுவந்து முத்தத்தில கிடத்திப்போட்டு இரண்டாவது பிள்ளை சதீசை பாத்தன். மூச்சுப் பேச்சில்லாமல் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.*

*"சதீசின்ர தலையில பெரிய காயம்பட்டு வெடிச்சுப்போய் இருந்தது. இரண்டு காலும் சிதைந்து வயிறு பிளந்துபோய் குடல் வெளியால வந்திட்டது. அவன்ர உயிர் பிரிஞ்சு போச்சுது. நான் அழுறதோ இல்லாட்டில் பிள்ளையள ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகிறதோ எண்டு தெரியாமல் நிண்டன்.*

*"இப்படி இருக்க என்ர கடைசி மகள் (2வயது) தேவநந்தினி எழும்புவதும் கீழ விழுவதுமாக இருந்தாள். ஓடிப்போய் கடைக்குட்டியைத் தூக்கிப் பார்த்தன். பிள்ளையின் தலையில ஒரு காயமும் உடம்பெல்லாம் சல்லடை போட்டமாதிரி காயங்கள் இருந்தது.*

*"இப்படி இருக்க. தாய் கதறியபடி வளவுக்குள் ஓடிவந்து இரத்த வெள்ளத்தில் சிதறுண்டு கிடந்த பிள்ளையளை கட்டி அணைத்துக் கதறி அழுதா. மூன்றாவது பிள்ளையைக் காணவே இல்லை. சத்தியசீலனை தேடிப்பார்த்தேன் வீடு இருந்த இடத்தில் இருந்து முப்பது மீற்றர் தூரத்துக்கப்பால் இடுப்புக்குக் கீழே சிதைந்தபடி உயிரிழந்துபோய் கிடந்தான்.*

*"இந்நிலையில் உயிரிழந்த இரண்டு பிள்ளைகளையும் விட்டுட்டு காயப்பட்டுத் தவிச்சுக்கொண்டிருந்த மூத்த பிள்ளையையும், கடைசிப் பிள்ளையையும் மனுசியையும் ஏத்தி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டேன்."*

சம்பவத்தில் நான்கு பிள்ளைகளை இழந்த தந்தை.



இந்த நெஞ்சை நெகிழவைக்கும் துயரச் சம்பவத்தில் தன் கையில் பிரிந்துபோன தனது கடைசி மகள் தேவநந்தினியின் கடைசிக்கணம் பற்றித் தாயார் இப்படிக் கூறுகின்றார்.

*"காயப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த என்ர கடைசிப் பிள்ளையைத் தூக்கி மடியில் வைத்தபடி ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனேன். மயக்கமடைந்து கொண்டிருந்த என்ர குஞ்சு ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்க் கொஞ்ச நேரத்தில செத்துப்போச்சுது. காயப்பட்டுக் கொண்டுபோகேக்க என்ர பிள்ளைக்கு கடைசியா பால் குடுத்தனான். அதுதான் என்ர பிள்ளை குடிக்கிற கடைசிப் பால் எண்டு நான் நினைக்கவே இல்லை"* என்று சொல்லியபடி கண்ணீர்விட்டு அழுதார் அந்தத் தாய்.

அவர்களைப் பொறுத்தவரை, நினைவுகள் நிரந்தரமானவையே. சாவுக்குள் வாழ்ந்த அன்றைய அவர்கள் வாழ்வு, பின்னொருநாளில் வீசியடித்த பெரும் அலையில் மீட்கப்பட்டதாயிற்று. என்றாலும் அவர்கள் இன்றும் சொல்லிக்கொள்கின்றார்கள்,

*"எங்களுக்கெண்டொரு நாடு கிடைக்கும் மட்டும் இனியும் சிங்களவன் குண்டு போடாமலா விடுவான்"* என்று. ●

**"காயப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த என்ர கடைசிப் பிள்ளையைத் தூக்கி மடியில் வைத்தபடி ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனேன். மயக்கமடைந்து கொண்டிருந்த என்ர குஞ்சு ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்க் கொஞ்ச நேரத்தில செத்துப் போச்சுது. காயப்பட்டுக் கொண்டுபோகேக்க என்ர பிள்ளைக்கு கடைசியா பால் குடுத்தனான். அதுதான் என்ர பிள்ளை குடிக்கிற கடைசிப் பால் எண்டு நான் நினைக்கவே இல்லை"**



www.eelamview.com

# புத்தர் பெருமானை முன்னிறுத்தி ஒரு யுத்தப் பிரகடனம்

உலைக்களம்

**வியாசன்**

கனவினிற் கூடத் தேசியம் கூறி
கவிதையிற் சமத்துவம் பாடி
இனங்களுக்குள்ளே ஐக்கியம் பேசி
இதற்கொரு சாட்சியென் றோதி
மனங்களித் திட்ட திருமலைப் பூமி
மாபெரும் தோல்வியைக் கூடிப்
பிணங்களைச் சுமந்து போரிடும் அந்தக்
கோணமா மலையமர்ந் தாரே.
– புதிய கோணேசர் பதிகம் –

நேற்று முன்னறிவிப்பு ஏதுமின்றி
திருமலையில் வந்திறங்கினார் சித்தார்த்தன்.
தமிழர் தலைநகரில் சிலையென இறங்கி
இன்னுமிருக்கிறார் வாயிற் சிரிப்புடன்
அவர்.
வந்தாரென்பது மகிழ்ச்சிக்குரியதெனினும்
இறங்கிய முறைதான் எரிச்சலைத்
தருகிறது.
எனினும் புத்தர் பெருமான்மீது
எமக்கு எந்தக் கோபமும் இல்லை.
சித்தார்த்தனுக்கே என்ன நடந்ததெனத்
தெரியாதபோது
பாவம் அவரையேன் நோகவேண்டும்?
போகம் துறந்து,
அரியணையின் மோகம் துறந்து,
வீதியிறங்கி வெள்ளரசின் கீழமர்ந்த
போதிமாதவனே!
நல்லாடை கழற்றிவீசி
புனிதமெனும் வெள்ளாடை தரித்தவனே!
என்னய்யா நடந்தது உமக்கு?
ஓரிரவு முடிந்து விடிந்தபோது,
நகர மணிக்கூட்டுக் கோபுரத்தருகே,
முச்சக்கர வண்டிகளின் தரிப்பிட வளவில்
அமர்ந்திருந்தார் அகிம்சாமூர்த்தி.
அரசமர நிழலில் தபசியற்றிய
சாந்தமூர்த்தியை
எறிக்கும் வெய்யிலில் எவரோ
எறிந்துவிட்டுப் போய்விட்டார்.
பாவம் போதிமாதவன்
ஏதும் பேசமுடியவில்லை அவரால்.
எடுத்து வந்தவரையோ,
எறிந்துவிட்டுப் போனவரையோ
நீதிமன்றில் இனம்காட்டும் நிலையில்
போதிமாதவன் இல்லை.
அவர் அச்சத்தில் உறைந்திருக்கிறார்.
காவி அங்கிக்குள்ளே மறைந்திருக்கும்
கத்திளையும், கைக்குண்டுகளையும்
அகிம்சாமூர்த்தி அறியாதவரா என்ன?
அரசபோகம் துறந்தவரை வைத்து
நடக்கிறது
ஒரு அரூபமான அரசியல் விளையாட்டு.
சிலைக்காக அல்ல படைகள்
குவிக்கப்பட்டது
படைகள் குவிக்கப்படுவதற்காகத்தானே
சிலையே வைக்கப்பட்டது.
வலிந்து சண்டைக்கிழுக்கும்
எத்தனிப்புடன்தான்
இழுத்துவரப்பட்டார் சித்தார்த்தன்.
புத்தர் பெருமானை முன்னிறுத்திய
ஒரு யுத்தப் பிரகடனம் இது.
தனிச்சிங்களத்தை எதிர்த்த திருமலை
நடராசன்
எந்தக் கோபுரத்தில் வைத்துச்
சுடப்பட்டானோ
அந்தக் கோபுரத்துக்கு அருகிற்தான்,
அவனின் குருதியுறைந்த இடத்திற்தான்
இந்தக் கூத்தும் அரங்கேறியது.
இனி என்ன நடக்கும்?
ஒன்றும் நடக்காது.
வந்த புத்தர் போகவே மாட்டார்.
எதிர்ப்புக்கொஞ்சம் வலுக்குமானால்
குண்டியைத் தூக்கிச் சற்று அரக்கி
அடுத்த காணிக்குள் போவார் புத்தர்.
இவ்வளவேதான் இனியும்.
திருமலை நகருக்குச் சித்தார்த்தன்
வந்ததென்பது
இதுதான் முதற்தடவை அல்ல.
எட்டித்தொடும் தூரத்தில்,
இந்தப் புத்தருக்கு அருகிலேயே,
கோணேசர் கோயிலுக்குப் போகும்
வாசலில்
இன்னொரு புத்தர் ஏலவே இருக்கிறார்.
எவரும் கண்டுகொள்ளவில்லை
என்பதுதான்
பரிதாபத்திற்குரியது.
மூட்டினால் மட்டும் மூளாசும் நெருப்பாக
மூடுண்டுபோனோம் நாம்.
திட்டமிட்ட குடியேறிகளால்
திருமலை எட்ட எட்டப் போகிறது
எம்மைவிட்டு.
எவரும் கவனத்தில் எடுக்கவில்லை
இந்தக் கையாடலை.
முந்தையரின் பூர்வீகம் தொலைத்து
உள்ளே பணயக் கைதிகளாகக் கிடக்கின்றனர்
குளக்கோட்ட மகராசனின் குடும்பங்கள்.
யுத்த காலத்தின் மூர்க்கம் தொலைத்து
சமாதான காலத்தில் தணிந்து போயினர்
தமிழர்.
ஒரு பொல்லாப்புமின்றி
அன்றாடம் கழித்து அடுத்தநாளை வரவேற்று
கொண்டாடுவதே எமது குறிக்கோளானது.
'முதலிக்குளம்' 'மொறவேவா' ஆனபோதே
நாடாளுமன்றில் நமது தலைவர்கள்
போராடியிருக்க வேண்டும்
எவரும் பேசவில்லையே.
தலைநகர் புகும் தலைவாசலில்
வீதிக்கரை இருமருங்கும்
'வில்க்கம்' ராஜவிகாரையின்
காணி நீண்டு கிடக்கிறது காடாய்.
எந்தவொரு தலைவராவது எழுந்து கேட்டாரா?
இல்லையே
எல்லோரும் மௌனத்திலல்லவா உறைந்து
போனார்கள்.
இது இன்றுவரை நீள்கிறது.
வந்த புத்தரை போவெனச் சொல்வது
அநாகரிகமானது
ஆனால்
புத்தர் பெருமான் வந்தவழி இருக்கிறதே
அது போவெனச் சொல்வதிலும் பார்க்க
அசிங்கமானது.
தலைநகரைப் பறிகொடுத்துவிட்டா தமிழீழம்?
என்ன செய்யலாம் இப்போது?
சப்பாணிப் போராட்டங்களைத் தூக்கி
எறிந்துவிடுவோம்
இப்போது வேண்டும் எழுச்சி.
விட்ட இடத்திலிருந்து விஸ்வரூபம் கொண்டு
கீழே வைத்த காண்டீபத்தையும்,
நாகாஸ்திரங்களையும் கையிலெடுப்போம்.
தேசியக்கொடியை,
தேசியப் பூவைப் பிரகடனம் செய்ததுபோல
திருமலையைத் தலைநகரெனச் சொல்வோம்.
படுத்துக் கிடந்ததுபோதும்
முதலில் எழுந்து நிற்கப் பழகுவோம்.
ஆர்ப்பரிக்கும் கடலே!
இராவணனின் மூச்சுக்கலந்த காற்றே!
குளக்கோட்டனின் பாதம்படிந்த மண்ணே!
உன்னை இழக்க மாட்டோமென்று
உரத்துச் சொல்வோம்.
வாழ்வின் பின்னே சாவுவருமெனில்
அது முதுமை.
சாவின் பின்னே வாழ்வு வருமெனில்
அது பெருமை.
எதுவென முடிவெடுக்க இதுவே தருணம்.



சிறுமணல் சோகி சிப்பிகள் கரையில்
சிரித்திடும் திருமலை நகரைக்
குறுமதிப் பேய்கள் கூடிநின்றழிக்கக்
கூத்திடும் போதினில் மண்ணை
இறுதியில் வெற்றி எடுத்திடப் போகும்
எம்மவர் படையினிற் சேர்ந்து
பெறுமதி மிக்க போரிடை ஆடும்
கோணமா மலையமர்ந் தாரே.
– புதிய கோணேசர் பதிகம் –